

தமிழரசு

மலர்-5 இதழ்-22
16-5-75

ஊரக வளர்ச்சி - உள்ளாட்சிச் சிறப்பிதழ்



இலட்சியவாதிகளைப் பாராட்டுவோம்!

பெருமதிப்பிற்குரிய திரு. ஜெயப்பிரகாஷ் நாராயண் அவர்களே, கல்வி அமைச்சர் டாக்டர் நாவலர் அவர்களே, அமைச்சர் பெருமக்களே, தலைமைச் செயலாளர் அவர்களே, நண்பர்களே,

இராஜாஜி அவர்களின் தூய நினைவாக இந்த நினைவுச் சின்னம் இங்கே அமைக்கப்பட்டுள்ளது. இந்த நினைவாலயத்தைத் திறந்து வைப்பதற்கு எல்லா வகையிலும் தகுதி படைத்த ஒருவர் இன்று வருகை தந்திருப்பது விழாவிற்குப் பெருமை சேர்ப்பதாகும். எத்தனையோ தியாகப் போராட்டங்களில் ஈடுபட்டவர்; தன்னலமற்றவர்; நாட்டிற்கு உழைத்தவர்; இன்னும் உழைத்துக் கொண்டிருப்பவர் திரு ஜெயப்பிரகாஷ் நாராயண் அவர்கள் ஆவார்கள்.

நேர்மையும், நியாயமும் நிலைக்கப் பாடுபட்டு வருகிற ஒரு தலைவர், அபிப்பிராய பேதங்களுக்கு இடையிலேயும் —அன்பால், அறிவால், ஆற்றலால், எங்கள் இதயம் கவர்ந்த இராஜாஜி அவர்களின் நினைவாலயத்தைத் திறந்து வைப்பது என்பது இராஜாஜியின் குடும்பத்தாரை மட்டுமல்ல; தமிழ்நாட்டில் உள்ள ஒவ்வொரு நல்ல குடும்பத்தாரையும் மகிழ்ச்சியிலும், உணர்ச்சியிலும் திளைக்கச் செய்கின்ற நிகழ்ச்சியாகும்.

தமிழகத்தில் இன்று நடைபெறுகின்ற அரசுக்கு 1967-ஆம் ஆண்டுத் தொடக்கத்தில் வாழ்த்துத் தெரிவித்தவர் இராஜாஜி அவர்கள் ஆவார். அதன் பிறகு கருத்து மாறுபாடுகள் ஏற்பட்டபோதும், நான் அவரைச் சந்திக்கச் செல்லும் போதெல்லாம், “ஆரம்பத்தில் நீங்கள் வழங்கிய வாழ்த்து கல்மேல் எழுத்துப் போல அப்படியே இருக்கிறது. அதனை நீங்களே நினைத்தால் கூட, உங்களால் மாற்றி எழுதிட இயலாது'' என்று கூறுவேன். அவரும் முகம் மலரப் புன்னகை புரிந்து என்னை மீண்டும் வாழ்த்தி அனுப்புவார். கொள்கையில் வேறுபட்டவர்களிடம் அவருக்குத் தனிப்பட்ட குரோதம் என்றைக்கும் இருந்ததில்லை.

இந்திய விடுதலைப் போராட்டத்தில் தென்னகத்தில் இராஜாஜி அவர்களும், பெரியார் ஈ. வே. ராமசாமி அவர்களும் ஆரம்பக் கட்டத்தில் கை கோத்து நின்றார்கள். பின்னர் கொள்கை வேறுபாடுகளால் ஒருவரையொருவர் கடுமையாக எதிர்த்துக் கொண்டார்கள். அந்தச் சூழ்நிலையிலும் இறுதிக்காலம் வரையில் அவர்கள் இருவரும் தனிப்பட்ட முறையில் அன்பு கெழுமிய சிறந்த நண்பர்களாகவே திகழ்ந்தார்கள். இராஜாஜி மறைந்தபோது அவருக்கு நிகரான வயது படைத்த பெரியார் ஈ. வே. ரா. அவர்கள் விம்மி அழுததையும், உடல் நலிவோடு இடுகாடு வரை வந்து இராஜாஜியின் இறுதிக் கடன்களிலே கலந்து அஞ்சலி செலுத்தியதையும் யார் தான் மறக்க முடியும்? ஒருவரையொருவர் ''என்னுடைய அன்பான விரோதி'' என்றே அழைத்துக் கொள்வார்கள்.

இந்தியாவின் தலைசிறந்த பொறுப்புக்களிலே இருந்து, பொறுப்பு வகித்த அந்தப் பதவிகளுக்கெல்லாம் பெருமை சேர்த்தவர் இராஜாஜி. இந்திய நாட்டு விடுதலைக்காக அவர் சிறையில் செய்த தவம் புத்தகமாக வெளிவந்திருக்கிறது. தியாக உள்ளம் படைத்தவர்களுக்கெல்லாம் அது ஒரு எழுச்சிக் கீதமாகும். அவர் எழுதிய அபேதவாதம் எனும் நூல் முன்னேற்றக் கொள்கைகளை முழக்குகின்ற முரசமாக அமைந்தது. 'வியாசர் விருந்து', 'சக்கரவர்த்தித் திருமகன்' ஆகிய பெரு நூல்கள் அவரது எழுத்தாற்றலுக்கு எடுத்துக் காட்டுக்களாகும். அவரது சொற்பொழிவு அனைவரையும் ஈர்க்க வல்லது. பழகும் தன்மை பண்பாடு உடையது. தீண்டாமை ஒழிப்பு, மது விலக்கு போன்ற காந்தியடிகளின் கொள்கைகளில் அழுத்தமான நம்பிக்கை கொண்டவர்;

அவருடைய ஆட்சிக் காலத்தில்தான் முதன் முதலாக மது விலக்குக் கொள்கையைச் சேலம் மாவட்டத்தில் நடைமுறைப்படுத்தினார். 1971-ஆம் ஆண்டு நிதி நிலை காரணமாகவும், பக்கத்து மாநிலங்கள் மதுவிலக்கை நடைமுறைப் படுத்தாத காரணத்தால் ஏற்பட்ட சூழ்நிலை காரணமாகவும் மெத்த மனவருத்தத்தோடு தமிழக அரசு மது விலக்கை ஒத்திவைத்தது. தமிழக அரசு தன் போக்கை மாற்றிக் கொள்ள வேண்டுமென்று அவர் கருத்து வெளியிட்டார்; என்னிடமும் வலியுறுத்தினார். மதுவிலக்கை மீண்டும் நடைமுறைக்குக் கொண்டுவர வேண்டுமென்று அவர் கூறிய உருக்கமிகு சொற்கள் என் உள்ளத்திலே ஊடுருவிப் பாய்ந்து குடைந்து கொண்டிருந்த காரணத்தினால் மீண்டும் தமிழக அரசின் சார்பில் முழுமையான மதுவிலக்குத் திட்டத்தை நடைமுறைக்குக் கொண்டு வந்துள்ளோம்.

முதல்வர் கலைஞர்

இது இராஜாஜி அவர்களுக்கு நாங்கள் செலுத்திய காணிக்கையாகும். இங்கு எழுப்பப்பட்டுள்ள இந்த நினைவாலயத்தை விட மீண்டும் மதுவிலக்குக் கொள்கையை நாங்கள் நடைமுறைக்குக் கொண்டு வந்திருப்பதுதான் அவருக்குப் பெரிய நினைவாலயம் ஆகும்.

வேதாரண்யத்தில் நடைபெற்ற வரலாற்றுப் புகழ் பெற்ற உப்புச் சத்யாக்கிரகத்தில் அவர் தலைமையேற்ற நிகழ்ச்சி விடுதலைப் போராட்டத்தில் ஒரு வீரமிகு அத்தியாயமாகும். தனக்குச் சரி என்று பட்ட கருத்துக்களைத் தயவுதாட்சண்யமின்றி எடுத்துச் சொல்லக்கூடிய ஆற்றல் இராஜாஜிக்கு உண்டு. தான் கொண்ட கொள்கைகள், வகுத்த திட்டங்கள் தவறானவை என்று கருதுவாரேயானால், அவைகளை மீண்டும் திருத்திக் கொள்ளவும் தவற மாட்டார். எடுத்துக்காட்டாக மொழிப் பிரச்சினையில் 1938-ஆம் ஆண்டு அவர் கொண்டிருந்த கருத்தும் 1965-ஆம் ஆண்டு அவர் கொண்டிருந்த கருத்தும் எவ்வளவு மாறுபாடு உடையவை என்பதும், எவ்வாறு அவரால் திருத்திக் கொள்ளப்பட்டது என்பதும் நாடறிந்த உண்மையாகும்.

அணுகுண்டுச் சோதனைகளை நிறுத்தி அனைத்துலக அமைதியை நிலைநாட்ட அவர் அமெரிக்க அதிபர் கென்னடியைச் சந்தித்தது, உலக அரங்கில் மிக முக்கியத்துவம் பெற்ற ஒரு நிகழ்ச்சியாகும். உலகில் நடைபெறும் பல்வேறு அரசியல் மாறுதல்கள் பற்றி இராஜாஜியின் கருத்து என்ன என்பதை அறிந்து கொள்வதற்கு அரசியல் மேதைகள் துடிப்பார்கள். அந்த நேரங்களில் மிகத் தெளிவாகத் தன்னுடைய கருத்துக்களை அவர் தெரிவிப்பார்.

''மாநில அரசுகளின் சுதந்தரங்களும், செல்வாக்கும் குறைந்து போக விடலாகாது; மத்திய சர்க்காருக்கே எல்லா பலமும், அதிகாரமும், இரத்த ஓட்டமும் சென்று விடுவது பிரதேச முன்னேற்றத்துக்குப் பாதகம் விளைவிக்கும்'' என்று 1957-ஆம் ஆண்டிலேயே அவர் அழுத்தம் திருத்தமாக எடுத்துச் சொன்னார்.

''இராஜ்ய சர்க்கார் உரிய சுயாதீன அதிகாரம் பெற்று, மத்திய சர்க்கார் தனக்குரிய எல்லைக்குள் கட்டுப்பட்டிருக்கக் கூடிய காலம் அடிவானத்தில் தெரிகிறது. உண்மையான சமஷ்டி அரசாங்கமே நிர்வாகம் திறமையாக நடப்பதற்கு வழி'' என்ற கருத்தையும் 1967-ஆம் ஆண்டு இராஜாஜி வெளியிட்டார்.

அதே கருத்தைத்தான்—"I myself have been a consistent advocate of a much larger measure of autonomy to the States in view of the vastness of our population and the diversity of our problems'' என்ற வகையில் இங்கு வந்துள்ள திரு ஜெயப்பிரகாஷ் அவர்கள் 1972—ஆம் ஆண்டில் வலியுறுத்திக் கூறி, மத்திய அரசில் அதிகாரக் குவியல் கூடாது என்ற முழக்கத்தைச் செய்தார்.

காஷ்மீர் பிரச்சினையில் ஷேக் அப்துல்லாவுடன் பேச்சு வார்த்தை நடத்த வேண்டும் என்று அன்றைக்கே எடுத்து உரைத்தார் இராஜாஜி; அதே கருத்தை திரு ஜெயப்பிரகாஷ் அவர்களும் முன்பே எடுத்துச் சொன்னார். அப்போது செவி சாய்க்காத அவர்களுடைய குரலுக்கு இப்போதுதான் இந்திய அரசினர் ஓரளவு செவி சாய்த்திருக்கிறார்கள் என்பதை உலகம் அறியும்.

ஜனநாயகத்துக்கு மாறாக நடைபெறுகின்ற காரியங்களை எடுத்து விளக்கிட திரு ஜெயப்பிரகாஷ் அவர்கள் பூண்டுள்ள போர்க்கோலத்திற்கு இராஜாஜி உயிரோடு இருந்திருப்பாரேயானால் பெரும் துணையாக விளங்கியிருப்பார்.

''தவறுகள் இருந்தால் சுட்டிக் காட்டுங்கள்; திருத்திக் கொள்ளுகிறோம்'' என்ற வகையில் தான் இந்த அரசாங்கம் நடைபெற்று வருகிறது. மனித சமுதாயத்தில் தவறுகளே இல்லாத, தும்பை மலர் போலத் தூய தன்மையை எல்லோரிடத்திலும் எதிர்பார்ப்பது இயலாத காரியம். ஆனால் தவறுகள் சுட்டிக்காட்டப்பட்டால் அந்தத் தவறுகளைக் களைந்தெறிவதிலும், தவறு புரிந்தோரை நடவடிக்கைகளுக்கு ஆளாக்குவதிலும் இந்த அரசு என்றைக்கும் பின்வாங்கியதில்லை. அந்த உறுதியும் உள்ளத் திண்மையும் எங்களுக்கு இருக்கின்ற காரணத்தால்தான் உத்தமராம் ஜெயப்பிரகாஷ் அவர்களுடன் எங்களால் தைரியமாக உறவாட முடிகிறது. நேர்மை, நியாயம், ஒழுக்கம், தியாகம் இவைகளைக் கடுகளவும் தங்கள் வாழ்க்கையில் கடைப்பிடிக்காத சிலபேர் மற்றவர்களுக்கு அறிவுரை கூறவும், குற்றம் சாட்டவும் புறப்பட்டிருக்கிற இந்நாளில் நேர்மை, நாணயம், ஒழுக்கம், தியாகம் இவைகளின் மொத்த வடிவமான திரு ஜெயப்பிரகாஷ் அவர்கள் இந்தியநாட்டின் எல்லாப்பகுதிகளிலும் அந்தப் பண்புகள் நிலைக்க வேண்டுமென்று கூறுவதை எங்களால் புரிந்து கொள்ளவும் முடிகிறது—அதனை வரவேற்கவும் முடிகிறது.

பேரறிஞர் அண்ணா அவர்கள் 1968-ஆம் ஆண்டு ஏப்ரல் 25-ஆம் நாள் அமெரிக்காவிலுள்ள 'நியூ ஹேவன்' என்ற இடத்தில் செய்தியாளர்களுக்குப் பேட்டி அளிக்கும்போது திரு ஜெயப்பிரகாஷ் பற்றிப் பின் வருமாறு ஒரு கருத்தைத் தெரிவித்தார்கள்.

'இந்தியாவில் மாநில மட்டத்தில் எல்லா எதிர்க் கட்சிகளையும் சேர்த்துக்கொண்டு

அரசியல் கட்சிகளின் சமஷ்டி ஒன்றை உருவாக்கலாம். ஜெயப்பிரகாஷ் போன்ற அந்தஸ்தில் உள்ள ஒருவர்தான் இதைச் செய்ய முடியும். ஆனால் இதற்கு ஜெயப்பிரகாஷ் நாராயண் இன்னும் நேரடியாக அரசியலில் இறங்க வேண்டும்' என்ற கருத்தாகும் அது.

அறிஞர் அண்ணா அவர்கள் கருதியபடி திரு ஜெயப்பிரகாஷ் நாராயண் முழுமையாக அரசியலில் இறங்காவிட்டாலும், ஓரளவு அண்ணாவின் எண்ணம் நிறைவேறத் தொடங்கியதற்காக நாம் மகிழ்ச்சி அடையலாம்.

இன்று நடைபெறுகிற இந்த விழா, கூடிக் கலைகின்ற நிகழ்ச்சியல்ல; இதன் மூலம் அரசியல் பாரம்பரியம் மிக்கவர்களுக்கு நாம் மரியாதை செலுத்தக் கற்றுக் கொள்ள வேண்டும் என்ற பாடத்தைப் பெறுகிறோம். பல இலட்சம் ரூபாய்ச் செலவில் இது போன்ற ஒரு நினைவாலயம் தேவை தானா என்று கேட்போரும் உண்டு. இலட்சியவாதிகளைப் பாராட்டுகிறபோது, இலட்சங்களைப் பற்றிக் கவலைப்படக் கூடாது.

தமிழக அரசின் சார்பில் கட்டபொம்மனுக்குக் கட்டப்பட்டுள்ள கோட்டையும், அதற்காக எடுக்கப்படுகிற விழாவும், வெள்ளையரை அவன் முதன் முதலாக எதிர்த்து வீர வரலாற்றை உணர்த்துவதற்காகத் தான்! கோட்டை கட்டி, விழா நடத்துவதோடு விட்டுவிடவில்லை; கட்டபொம்மனின் வழிவழி வந்தவர்களுக்கு வாழ்க்கை வசதிகளும் செய்து தரப்பட்டுள்ளன. மேலும் அங்குள்ள வசதியற்ற மக்களுக்கு 202 வீடுகள் கட்டித் தரும் திட்டம் இந்த ஆண்டு முடிவடைய விருக்கின்றது. இந்த அரசு அமைத்துள்ள பூம்புகாரும், அங்கு நடத்துகின்ற விழாக்களும் சோழ மன்னர்களுடைய பழைய வரலாற்றை விளக்குவது மட்டுமல்ல; அங்கே கடற்கரையோரத்தில் புயலுக்கும் கொந்தளிப்புக்கும் இடையே வாழ்கின்ற மீனவர் குடிசைகள் மாற்றப்பட்டு ஏறத்தாழ 850-க்கு மேற்பட்ட புதிய கான்கிரீட் வீடுகள் மீனவர்களுக்குக் கட்டித் தரப்பட்டுள்ளன.

ஜெயப்பிரகாஷ் நாராயண் அவர்களே கூடச் சென்னையில் குடிசைவாழ் மக்களுக்காகக் கட்டப்பட்டுள்ள குடிசை மாற்று வாரிய வீடுகளைத் திறந்து வைத்ததை மறந்திருக்க மாட்டார்; அடித்தளத்திலுள்ள சாமான்ய மக்களுக்காகத்தான் அந்தப் பணிகளை நடத்தி வருகிறோம் என்பதையும் மறந்திருக்க மாட்டார் என்று நம்புகிறேன்.

அரிசனங்களுக்கு இலவசமாக வீடு கட்டித் தரும் திட்டம்; தொழு நோய்ப் பிச்சைக்காரர்களுக்கு மறு வாழ்வு இல்லங்கள்; இலவசக் கண் சிகிச்சையின் மூலம் இலட்சக்கணக்கானோர்க்குக் கண்ணொளி வழங்கும் திட்டம்; கைரிக்ஷாக்களை அறவே அகற்றி இலவச சைக்கிள் ரிக்ஷாக்களை வழங்கிய திட்டம்; ஊனமுற்றோர்க்குப் பரவலான முறையில் மறு வாழ்வளிக்கும் திட்டம் இவைகள் எல்லாம் இப்போது செயற்பட்டு வருகின்றன என்றால், காந்தியடிகளின் வழியில்—எங்கள் தலைவர் அண்ணா அவர்கள் காட்டிய நெறியில்—நாங்கள் பணியாற்றுகிறோம் என்பதற்கு இவை அடையாளங்கள் ஆகும்.

இந்த உணர்வுகள்தான் திரு ஜெயப்பிரகாஷ் நாராயண் அவர்களுக்கும் எங்களுக்கும் இடையே பாலமாக அமைந்துள்ளன. இந்த மண்ணின் விடுதலைக்குப் பாடுபட்ட ஒரு பெரியவரின் நினைவாலயத்தை —இந்த மண்ணின் விடுதலைக்காகப் பயங்கர அடக்குமுறைகளை ஏற்றுக் கொண்ட மற்றொரு பெரியவர் திறந்து வைப்பது தமிழ்நாட்டில் மகத்தான நிகழ்ச்சியாகும் என்று கூறி மீண்டும் ஒருமுறை திரு ஜெயப்பிரகாஷ் நாராயண் அவர்களை வரவேற்கிறேன். வணக்கம்.

[மூதறிஞர் இராஜாஜி நினைவாலயத் திறப்பு விழாவில் முதல்வர் கலைஞர் ஆற்றிய தலைமையுரை.]

(5—5—1975)



தமிழக அரசுக்குப் பாராட்டு!

இராஜாஜியின் பெயரால் அமைத்துள்ள இந்த மண்டபத்தினைத் திறந்து வைக்கும் பெருமையை எனக்களித்ததற்காகத் தமிழக முதலமைச்சருக்கு நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

இந்தியாவின் தலைசிறந்த தவப்புதல்வரின் நினைவால் கட்டப்பட்டுள்ள இந்த மண்டபத்தின் வடிவமைப்பினை உங்கள் முதலமைச்சரே தயாரித்தார் என்பதைக் கேட்டு நான் பெரும் மகிழ்ச்சியும், பேருவகையும் கொள்கிறேன்.

இராஜாஜிக்காக இந்த நினைவு மண்டபத்தினை எழுப்பினதற்காகத் தமிழக அரசினை நான் முதலில் பாராட்ட விரும்புகிறேன்.

இராஜாஜி தமிழ்நாட்டைச் சேர்ந்தவர்தான்; ஆனால் அவர் தமிழகத்திற்கு மாத்திரம்—தென்னகத்திற்கு மாத்திரம் உரியவரல்ல; இந்தியா முழுவதற்கும் உரியவர்; அவர் உலக சமாதானத்திற்காகப் போராடியதின் மூலம் அவர் உலகக் குடிமக்களில் தலைசிறந்த ஒருவராக ஆகிவிட்டவர்.

இராஜாஜிக்கு நினைவாலயம் எழுப்புவதன் மூலம் அவருடைய பெருமைக்கு, மேலும் சிறப்புத் தேடித்தர முடியாது. ஆனால் வருங்காலத் தலைமுறை தங்களுடைய நாட்டின் முன்னோர்கள் சிறப்பைப் பற்றி நினைத்து அவர்கள் காட்டிய வழிகள்பற்றி அறிந்து கொள்ள இந்த நினைவு மண்டபங்கள் உதவியாக இருக்கும்.

—ஜெயப்பிரகாஷ் நாராயண்

[இராஜாஜி நினைவாலயத் திறப்பு விழாவில்]

ஊராட்சி உயர்வடைய..

மாண்புமிகு
உள்ளாட்சித்துறை அமைச்சர்
மன்னை ப. நாராயணசாமி

1952ஆம் ஆண்டில் சமுதாய வளர்ச்சித் திட்டம் தொடங்கப்பெற்றது. ஊர்ப்புறங்களில் வாழும் நலிவுற்ற மக்களின் நிலையை உயர்த்துவதற்கும் அவர்களிடையே தன்னம்பிக்கையை வளரச் செய்து, அவர்கள் முன்னேற வழிகளமைத்துத் தர வேண்டுமென்பதே, இத்திட்டத்தின் நோக்கமாகும். மக்களின் முயற்சிகளை அரசின் அதிகாரத்துடன் இணைத்துச் செயலாற்றி மக்களின் பொருளாதார, சமூக, பண்பாட்டினை மேம்படச் செய்து, அவர்களை நாட்டின் வாழ்வுடன் இணைத்து, நாட்டின் முன்னேற்றத்திற்கு முழு மனத்துடன் இணைந்து செயல்படச் செய்வதே, சமுதாய நலத் திட்டத்தின் செயல் முறையென தெளிவாகக் கூற இயலும். முன்னேற வேண்டுமென்ற முனைப்புச் சக்தியானது, மக்களிடமிருந்தே எழவேண்டுமென்றும், ஊர்ப்புறங்களில் செயலற்றுத் தேங்கி நிற்கின்ற மனித ஆற்றலை ஒன்று திரட்டி, நிலையான பணிகளைச் செய்ய வேண்டுமென்ற நோக்குடனேயே, சமுதாய வளர்ச்சித் திட்டம் தொடங்கப்பெற்றது. எனவே மக்களின் ஒத்துழைப்பும், திட்டங்களில் பங்கேற்றுச் செயலாற்றுவதுமே, சமுதாய வளர்ச்சித் திட்டத்தின் முக்கிய அங்கமாகும்.

ஊராட்சி வளர்ச்சித் திட்டத்தில் 12,632 ஊராட்சிகள் 591 பேரூராட்சிகளை உள்ளடக்கிய 374 ஊராட்சி ஒன்றியங்களுக்கென்று 1975-76-ல் ஒதுக்கப்பட்டுள்ளது, ரூ. 111.24 கோடியாகும். இதிலிருந்து, ஊராட்சி வளர்ச்சித் திட்டங்களுக்குரிய நிதிநிர்வாகம் எவ்வளவு பெரிய அளவில் செயல்படுத்தப் படுகிறதென்பது தெளிவாகும். சட்டப்பேரவையின் முன்னுள்ள கோரிக்கையான சுமார் ரூ. 29 கோடி என்பது, ஊராட்சிகள், ஊராட்சி ஒன்றியங்களால் செலவிடப்படக்கூடிய தொகையின் ஒரு பகுதியாகும்.

நிர்வாக அமைப்பு வளர்ச்சி

வளர்ச்சி அலுவலர்களுக்குப் போதிய அதிகாரங்களையளித்து பொருத்தமான நேரடிப் பொறுப்புக்களை அவர்களுக்கு வழங்குவதனால், தமிழ்நாட்டில் மலர்ந்து வரும் பசுமைப் புரட்சியில், அவர்களும், தங்களுக்குரிய பங்கினை ஆற்றிட முடியுமென்பதால், ஊராட்சி வளர்ச்சி நிர்வாகத்தை வலுப்படுத்த அரசு ஆழ்ந்து ஆய்ந்து வருகிறது. நிர்வாக அமைப்பும், முறையும் அரசின் ஆய்வில் தொடர்ந்திருந்த வண்ணமுள்ளது. ஏற்கெனவே ஆய்வு செய்யப்பட்டுள்ள இனி செய்யப்படவிருக்கும் மாற்றங்களைக் கீழ்க்கண்டவை விளக்கும் :—

(அ) மாவட்ட துணை ஆட்சித் தலைவர்களின் பதவிகளுக்கு இணையாக, கோட்ட வளர்ச்சி அலுவலர்களென்ற பதவிகளைக் கோட்ட அளவில் ஏற்படுத்தி, வருவாய்த்துறை நிர்வாகத்திலிருந்து, ஊராட்சி நிர்வாகம் தனியே பிரிக்கப்பட்டுள்ளது. கோட்ட அளவில், ஊராட்சி நிர்வாகம் அனைத்திற்கும் கோட்ட வளர்ச்சி அலுவலரே பொறுப்புள்ளவராவார். மாவட்ட அளவில், மாவட்ட ஆட்சித் தலைவர்கள் பொறுப்புள்ளவர்களாவார்கள். இவர்களுக்கு நேர் உதவியாளர்கள்(ஊராட்சி வளர்ச்சி) உதவியாயிருப்பார்கள்.

(ஆ) ஊர் நல உதவியாளர்களுக்கு மேலும் பதவி உயர்வு அளிக்க வாய்ப்புக்கள் ஏற்படுத்த வேண்டுமென்ற முறையீடுகளை அரசு ஆய்ந்து, 450 இரண்டாம் நிலை ஊர் நல உதவியாளர்களின் பதவிகளை, 1974-75 தொடக்கத்திலிருந்து முதல் நிலை ஊர் நல உதவியாளர்களின் பதவிகளுக்கு உயர்த்தியுள்ளது. 1975-76-ஆம் ஆண்டில் மேலும் 427 இரண்டாம் நிலை ஊர் நல உதவியாளர்களின் பதவிகளை, முதல் நிலைக்கு உயர்த்த உத்தேசிக்கப்பட்டுள்ளது.

(இ) குடும்ப நலத்திட்டம் உட்பட, அரசு ஊழியர்களுக்கு அளிக்கப்படும் எல்லா நன்மைகளும் ஊராட்சி ஒன்றிய அலுவலர்களுக்கும் விரிவாக்கப்பட்டுள்ளன.

(உ) வட்டார எல்லைகளைப் பெருவாரியாக மாற்றவேண்டிய அவசியமில்லையென்று நிர்வாகச் சீரமைப்பு ஆணைக்குழு, அதன் ஊராட்சி வளர்ச்சி நிர்வாகம் பற்றிய அறிக்கையில் பரிந்துரைத்துள்ளது. இதனை அரசு ஏற்று, அதற்கேற்ப ஆணைகளைப் பிறப்பித்துள்ளது. இருப்பினும் பரந்த அளவிலுள்ள எந்த வட்டாரத்தையும், பிரிக்க வேண்டிய தேவையை, அரசு தகுதியை அறிந்து ஆய்வு செய்யும். சட்டப்பேரவை, நாடாளுமன்றத் தொகுதிகளுக்குரிய வாக்காளர் பட்டியல் தயாரிக்கும் அலுவல் முடிவுற்ற பின்னர், இவை பற்றிய ஆய்வு மேற்கொள்ளப்படும்.

(ஊ) வரி விதிக்காத முறையில் நிதிகளைத் திரட்டிப் பல்வேறு வளர்ச்சித் திட்டங்களை விரைவாக நிறைவேற்றுவதற்கு, மாவட்ட ஆட்சித் தலைவர்கள் தலைமையில் ஒவ்வொரு மாவட்டத்திலும், மாவட்ட வளர்ச்சிக் கழகம் ஒன்றினைத் தொடங்க அரசு முடிவு செய்துள்ளது. இதற்குத் தொடக்கமாக தர்மபுரி, தஞ்சாவூர் மாவட்டங்களில் இக்கழகங்கள் இவ்வாண்டு நிறுவப்படும். மேற்கண்ட இரண்டு மாவட்டங்கள் ஒவ்வொன்றிலும் மாவட்ட வளர்ச்சிக் கழகங்களைத் தொடங்க, முயற்சிகள் மேற்கொள்ளப்படுகின்றன.

பயிற்சித் திட்டம்

ஊர் வளர்ச்சி இயக்கம், கீழ்க்காணும் பயிற்சிப் பிரிவுகளைத் தன்னகத்தே கொண்டுள்ளது. பல்வேறு வளர்ச்சித் துறையைச் சார்ந்த மாவட்ட அலுவலர்கள், ஊராட்சி நிறுவனங்களைச் சார்ந்த அலுவலர்கள் ஆகியோர் இந்நிறுவனங்களில் பயிற்சி பெறுகின்றனர் :—

(1) சமுதாய வளர்ச்சி மாநில நிறுவனம்.

(2) தொழிற்கூடப் பிரிவுகள் அமைந்த ஊர் விரிவாக்கப் பயிற்சி நிலையங்கள்.

ஊர் நல உதவியாளர்களுக்குப் பயிற்சி:— கீழ்க்கண்ட நிலையங்களில் ஊர் நல உதவியாளர்கள் பயிற்சியளிக்கப்படுகின்றனர்:—

(1) பவானிசாகரிலுள்ள சமுதாய வளர்ச்சி, பஞ்சாயத்து ராஜ்ய மாநில நிறுவனம்

2. ஊர் விரிவாக்கப் பயிற்சி நிலையம், டி. கல்லுப்பட்டி.

3. ஊர் விரிவாக்கப் பயிற்சி நிலையம், பட்டுக்கோட்டை.

4. ஊர் விரிவாக்கப் பயிற்சி நிலையம், ச.வி. நகரம்.

5. ஊர் விரிவாக்கப் பயிற்சி நிலையம், கிருட்டிணகிரி.

இந்நிலையங்களில் கீழ்க்கண்ட பயிற்சிகள் அளிக்கப்படுகின்றன:—

முன்சேவைப் பயிற்சி.— ஊர்நல உதவியாளர்களாக நியமிக்கப்படுவதற்கு முன்னர் அப்பதவிகளுக்குத் தேர்ந்தெடுக்கப்படுவோரை, தகுதியுடையவராக்குவதற்கான வேளாண்மை, கால்நடை வளர்ச்சி, கூட்டுறவு, நல்வாழ்வு, ஊராட்சிகள் போன்றவற்றில் ஈராண்டுகளுக்குப் பயிற்சியளிக்கப்படுகிறது. விஞ்ஞான வழியில் வேளாண்மை செய்வதை, இவர்களுக்குக் கற்றுத் தருவதற்கென ஒவ்வொரு பயிற்சி நிலையத்துடனும் ஒரு பண்ணையும், பால் பண்ணை அலகும் இணைக்கப்பட்டுள்ளன.

1972-73-ம்ஆண்டில்ஊர்நல உதவியாளர்கள் பதவிகளுக்கென 400 பேர்கள் தேர்ந்தெடுக்கப்பட்டனர். இவர்களில் 325 பேர்கள் 19-12-1974 அன்று முன்சேவைப் பயிற்சி பெற்று முடித்தனர். எஞ்சியுள்ள 75 பேர்களுக்கு ஒரு திங்கள்காலஅளவிற்குப் பயிற்சி அளிக்கப்பட்ட பின்னர், வட்டாரங்களில் தற்போதுள்ள காலியிடங்களில் நியமிக்கப்பட்டுள்ளனர். இதுவன்றி நேரடியாகத் தேர்ந்தெடுக்கப்பட்ட 325 பேர்களுடன் 69 ஊர் நல உதவியாளர்களும் முன்சேவைப் பயிற்சியை முடித்துள்ளனர். ச.வி. நகரத்திலுள்ள பயிற்சி நிலையத்தில் 2-1-75 முதல், 69 ஊர் நல உதவியாளர்கள், தற்போது ஈராண்டு முன்சேவைப் பயிற்சி பெற்று வருகின்றனர். ஏற்கெனவேயே ஒரு திங்கள் காலப் பயிற்சியை முடித்தவர்கள், கிருஷ்ணகிரியிலுள்ள ஊர்விரிவாக்கப் பயிற்சி நிலையத்தில் முன்சேவைப் பயிற்சிப் பெறுதற்கு அனுப்பப்பட்டுள்ளனர்.

ஓராண்டுத் தீவிரப் பயிற்சி: ஊர் நல உதவியாளர்களின் திறமையைச்சிறப்பாகவேளாண்மையில் மேம்படுத்துவதற்கென வேளாண்மை வளர்ச்சிப் பட்டச் சான்றிதழ் பயிற்சி ஓராண்டிற்குத் தரப்படுகிறது. இந்த ஓராண்டுக்காலப் பயிற்சி, ஐந்து நிலையங்களிலும் அளிக்கப்படுகிறது.

ஒவ்வொரு நிலையத்திலும் ஒவ்வொரு பயிற்சிக்கென ஐம்பது பேர்கள் சேர்த்துக் கொள்ளப்படுகிறார்கள். இத்தீவிரப் பயிற்சியில், இதுவரை 1,309 ஊர்நல உதவியாளர்கள் பயிற்சி பெற்றுள்ளனர். 219 ஊர்நல உதவியாளர்கள் தற்போது பயிற்சி பெற்றுவருகின்றனர்.

தொழிற்கூடக் கிளைகள்,,— ஊர் விரிவாக்கப் பயிற்சி நிலையங்கள் அனைத்திற்கும், பவானி

வட்டார அளவில் வளர்ச்சிப் பணியைத் தனியாய் அமைத்தல்

ஊராட்சி வளர்ச்சிப்பணி வருவாய்ப்பணியிலிருந்து வட்டார அளவில் 1974 ஜூலை 1-ம் நாள் முதல் வேறுபடுத்தப்பட்டுச் செயல்பட வேண்டுமென்று 1974 ஜூன் மாதத்தில் அரசு ஆணையிட்டது. அதன்பயனாய் கோட்டாட்சித் தலைவர்களின் பணிச்சுமை தடையேதுமின்றிச் சீரானநிலை எய்தும். கோட்டாட்சித் தலைவர் வருவாய்ப் பணியின் முறையான அம்சங்களுக்குத் தமது முழு நேரத்தையும் செலவிடலாம்.

தொழிற்கூடக் கிளைகள்,,— ஊர் விரிவாக்கப் பயிற்சி நிலையங்கள் அனைத்திற்கும், பவானிசாகரிலுள்ள சமுதாய வளர்ச்சி மாநில நிறுவனத்திற்கும் தொழிற்கூடக் கிளைகள் இணைக்கப்பட்டுள்ளன. கிராமக் கைவினைஞர்களுக்கும், அவர்களுடைய குழந்தைகளுக்கும் தச்சு, கருமார்த் தொழிலில், ஓராண்டிற்கு இங்குள்ள தொழிற்கூடங்களில் பயிற்சியளிக்கப்படுகிறது. இதுவரை 1,164 பேர்கள் இப்பயிற்சியினைப் பெற்றுள்ளனர். 100 கைவினைஞர்கள் தற்போது பயிற்சி பெற்று வருகின்றனர்.

பவானிசாகரிலுள்ள சமுதாய வளர்ச்சி மாநில நிறுவனம், டி. கல்லுப்பட்டியிலுள்ள ஊர் விரிவாக்கப் பயிற்சி நிலையங்களைச் சார்ந்த தொழிற்கூடக்கிளைகள், உற்பத்தி-பயிற்சி நிலையங்களாக உயர்த்தப்பட்டுள்ளன. அண்மை வட்டாரங்களிலுள்ள உழுபடைக் கருவிகளைச் சீராக்குதல், பேணுதல் போன்ற பணிகளை இந்நிலையங்கள் மேற்கொண்டுள்ளன.

மகளிர்க்குப் பயிற்சி: ச.வி. நகரம், டி. கல்லுப்பட்டி ஆகிய இடங்களிலுள்ள ஊர் விரிவாக்கப்பயிற்சி நிலையங்களில் மகளிர்க்குப் பயிற்சியளிக்கக்கூடிய வசதிகள் உள்ளன. சத்துணவுத் திட்டத்தில் 'குழந்தைகள் காப்பகத்திற்குரிய, பால சேவிகைகளுக்கு மூன்று திங்களுக்குப் பயிற்சியளிக்கப் படுகிறது.

சமுதாய வளர்ச்சித் திட்டங்கள் பற்றிய அறிவை அலுவலர்களுக்கு, இப்பயிற்சித் திட்டங்கள் அளிப்பதுடன், தங்களுடைய பொறுப்புகளைத் திறமுடன் நிறைவேற்றிடவும் இவை பெரிதும் உதவியாயுள்ளன.

< மானியக் கோரிக்கையிலிருந்து >



தஞ்சை மாவட்ட சிறுநிலக்கிழார் மேம்பாட்டுத் திட்டம்!

முதல் ஐந்தாண்டுத் திட்டம் தொடங்கி, பல விவசாயத் திட்டங்கள் வகுக்கப்பட்டு உணவு உற்பத்தியில் முன்னேற்றம் கண்டுள்ளோம்! ஆயினும் இத்திட்டங்களின் முழுப்பலன்களை வேளாண்மைப் பெருமக்களில் பெருந்தொகையினராகவுள்ள சிறு விவசாயிகள் சரி வர அடைய முடியவில்லை. என்பது தெளிவாகியது. நிதி வசதியின்மை இதற்கு முக்கிய காரணம். நிதி வசதி செய்து தரும் பல நிறுவனங்களும், இவர்கள்பால் அதிக கவனம் செலுத்த முன்வரவில்லை. ஆகவே, இந்தப் பெருந்தொகையினராகவுள்ள சிறு விவசாயிகளின் முன்னேற்றத்திற்காக நான்காவது ஐந்தாண்டுத் திட்டத்தில், சிறு உழவர் மேம்பாட்டுத் திட்டம் முன்னோடி திட்டமாக துவக்கப்பட்டது.

சிறு நிலம் படைத்த உழவர்களுக்கு நிதி வசதி செய்து கொடுத்தல், சாகுபடிக்குத் தேவையான விதை, உரம், பூச்சி மருந்துகளை காலத்தே கிடைக்கச் செய்தல், சிறு நிலத்திலும் வருமானத்தைப் பெருக்க நுணுக்கமான ஆலோசனைகள் வழங்குதல், முடியுமளவுக்குப் போதிய நீர்ப்பாசன வசதி அமைத்துக் கொடுத்தல், உப தொழில்களில் ஈடுபடுத்திக் குடும்ப வருமானம் பெருக்குதல் ஆகியவை இத்திட்டத்தின் முக்கிய குறிக்கோளாகும்.

தமிழ்நாட்டில் 1971-72-ம் ஆண்டு தென்ஆர்க்காடு மதுரை, நெல்லை ஆகிய மூன்று மாவட்டங்களில் சிறு விவசாயிகள் மேம்பாட்டுத் திட்டமும், சேலம் மாவட்டத்தில் பெத்த நாயக்கன்பாளையம் பகுதியிலும், வடஆர்க்காடு மாவட்டத்தில் செங்கம், புதுப்பாளையம் பகுதியிலும் மிகச் சிறு விவசாயிகள் மற்றும் விவசாயத் தொழிலாளர்கள் மேம்பாட்டுத் திட்டமும் துவக்கப்பட்டன. அத்திட்டங்களில் கண்ட முன்னேற்றத்தின் அடிப்படையில், தருமபுரி, ராமநாதபுரம் நீங்கலாக தஞ்சாவூர், திருச்சிராப்பள்ளி, புதுக்கோட்டை, கன்னியாகுமரி கோயம்புத்தூர், நீலகிரி, செங்கல்பட்டு ஆகிய மாவட்டங்களுக்குச் சிறு மற்றும் மிகச் சிறு விவசாயிகள் மேம்பாட்டுத் திட்டமாக ஒருங்கிணைந்து இத்திட்டம் விரிவுபடுத்தப்பட்டுள்ளது. ஒவ்வொரு மாவட்டத்திலும், முதல் கட்டமாக சில பகுதிகள் தேர்ந்தெடுக்கப்பட்டு இத்திட்டம் செயலாற்றப்படுகிறது. படிப்படியாக மாவட்டமெங்கும் விரிவுபடுத்த வழிவகைசெய்யப்பட்டுள்ளது.

இத்திட்டத்தின் கீழ் பயன் பெற, விவசாயிகள் மூவகையாகப் பிரிக்கப்படுவர். 1.25 ஏக்கர் நன்செய் அல்லது 2.50 ஏக்கர் புன்செய் ஆகியவற்றிற்குக் குறைந்த பரப்பில் சாகுபடி செய்வோர்களை மிகச் சிறு விவசாயிகள் எனவும், 2.50 ஏக்கர் நன்செய் அல்லது 5 ஏக்கர் புன்செய் வரை சாகுபடி செய்வோர்களை சிறு விவசாயிகள் எனவும், விவசாயத்திற்கான நிலம் இல்லாமல் (வீட்டுமனை மட்டும் உள்ள), விவசாயத் தொழில் மூலம் 50 சதவீதத்திற்கு மேல் வருமானம் பெறுவோர்களை விவசாயத் தொழிலாளர்கள் என்றும் இத்திட்டத்தின் கீழ் பிரிக்கப்பட்டுள்ளது. இவர்கள் அனைவரும் இத்திட்டத்தின் மூலம் பயனடைகிறார்கள்.

இந்த அடிப்படையில் இவ்வாண்டு தஞ்சை மாவட்டத்தில் இத்திட்டம் துவக்கப்படுகிறது. முதல் கட்டமாகக் கீழ்க்கண்ட 12 ஊராட்சி ஒன்றியங்களில் இத்திட்டம் செயல்படுத்தப்படும்.

தஞ்சாவூர்,
பூதலூர்,
ஒரத்தநாடு,
மாயூரம்,
குத்தாலம்,
குடவாசல்,
கொரடாச்சேரி,
மன்னார்குடி,
நீடாமங்கலம்,
திருவாரூர்,
கீவளூர்,
பட்டுக்கோட்டை.

தஞ்சை மாவட்டத்தில் 1971-ஆம் ஆண்டின் புள்ளியியல் கணக்கின் படி 3.06 இலட்சம் சிறு மற்றும் மிகச் சிறு விவசாயிகளும், 5.21 இலட்சம் விவசாயத் தொழிலாளர்களும் உள்ளனர். ஐந்தாவது ஐந்தாண்டுத் திட்ட காலத்தில் இவர்களில் 50,000 பேர் இத்திட்டத்தின் மூலம் பயனடைவர். இச்சிறு விவசாயிகளை அடையாளம் கண்டு தேர்ந்தெடுக்கும் வேலை ஏற்கெனவே தொடங்கப்பட்டுவிட்டது. பயன்பெறும் விவசாயிகளில் தாழ்த்தப்பட்ட வகுப்பினருக்காக 20 சதவீதம் ஒதுக்கீடு செய்யப்படும்.

மாவட்ட ஆட்சியர் தலைமையில் இயங்கும் இத்திட்டத்தில் இணை விவசாய இயக்குநர் முழு நேர திட்ட அலுவலராக பணியாற்றுகிறார். வேளாண்மைப் பராமரிப்பு, கூட்டுறவு, வருவாய் மற்றும் புள்ளியியல் துறை ஆகியவைகளைச் சார்ந்த அலுவலர்கள் ஒருங்கிணைந்து

இத்திட்டத்தில் பணி புரிகின்றனர். பயிர் பராமரிப்புத் திட்டங்களை தற்சமயம் செயல்படுத்தத் திட்டமிடப்பட்டுள்ளன. பிறகு கால்நடைப் பராமரிப்புத் திட்டமும், சேர்க்கப்பட்டு ஒருங்கிணைந்த திட்டமாகச் செயல்பட இருக்கிறது. இத்திட்டத்தினைச் செயல்படுத்த, ஐந்தாண்டுகளுக்குமாகச் சேர்த்து ரூ. 150 இலட்சம் நிதி ஒதுக்கீடு செய்யப்படுகிறது.

பயிர் பராமரிப்புத் திட்டங்கள்

திட்ட காலத்தில் உயர் விளைச்சல் தரும் நெல் ரகங்களை 50,000 ஏக்கரிலும் வீரிய ஒட்டு மக்காச்சோளம் 15,000 ஏக்கரிலும், நிலக்கடலை 20,000 ஏக்கரிலும் சிறு மற்றும் மிகச் சிறு விவசாயிகள் சாகுபடி செய்ய குறுகிய காலக் கடன் வசதி செய்து தரப்படும். இக்கடன்தொகை கூட்டுறவுச் சங்கங்கள் அல்லது தேசியமயமாக்கப்பட்ட வங்கிகள் மூலம் வழங்க ஏற்பாடு செய்யப்படும். மேலும் மிகச் சிறு விவசாயிகளுக்கு மட்டும் பயிரிடுவதற்குத் தேவைப்படும்பொருள்களான விதை, உரம், பூச்சி ஆகியவைகளுக்கு மருந்துக்கான விலையில் 33-1/3 சதவீதம் என்ற அளவில் மான்யம் வழங்கப்படும். ஒரு மிகச்சிறு விவசாயிக்கு ரூ. 200 வரை பயிர் பராமரிப்புத் திட்டத்தின் கீழ் மான்யம் வழங்கப்படும். அவர்கள் செலுத்த வேண்டிய கடனில் இச்சலுகைத்தொகை ஈடு செய்யப்படும்.

நிரூபண வயல்கள் அமைத்தல்

திட்ட காலத்தில் சிறு மற்றும் மிகச்சிறு விவசாயிகளின் நிலங்களில் 1500 நிரூபண வயல்கள் அமைத்து நெல், நிலக்கடலை, மக்காச்சோளம், பருத்தி, கேழ்வரகு ஆகிய பயிர்களை நவீன கட்டுக்கோப்பு சாகுபடி முறையில் பயிரிடுவது பற்றி விளக்கப்படும். ஒவ்வொரு நிரூபண வயலுக்கும் ரூபாய் 200 மான்யத் தொகை வழங்கப்படும்.

நீண்டகாலக் கடன்

சிறு மற்றும் மிகச்சிறு விவசாயிகளின் நிலங்களைச் சீர்படுத்தவும், பாசன வசதி ஏற்படுத்தவும் நீண்டகாலக் கடன் வசதிகள் செய்து கொடுக்கப்படும்.

புதுத் தென்னந்தோப்பு அமைத்தல்

ஏக்கருக்கு ரூபாய் 2700 வீதம் சிறு விவசாயிகளுக்கு 500 ஏக்கருக்கும், மிகச் சிறு விவசாயிகளுக்கு 500 ஏக்கருக்கும் நீண்டகாலக் கடன் வழங்க ஏற்பாடு செய்யப்படும். முதலாண்டு கடன் தொகையில் மட்டும் சிறு விவசாயிகளுக்கு 25 சதவீதமும், மிகச் சிறு விவசாயிகளுக்கு 33-1/3 சதவீதமும் மான்யம் வழங்கப்படும்.

சமுதாயக் குழாய்க் கிணறுகள்

சிறு மற்றும் மிகச் சிறு விவசாயிகளின் நிலத்திற்குப்பாசன வசதிக்காகப்பாசன கூட்டுறவுச் சங்கங்களை அமைத்து 50 சமுதாயக் கிணறுகள் வெட்டுவதற்கு ஒரு சமுதாயக் குழாய் கிணறுக்கு ரூபாய் 40,000 வரை நீண்டகாலக் கடன் வசதி செய்யப்படும். இதனால் 1,000 ஏக்கர் நிலத்திற்குப் பாசன வசதி செய்யப்படும். கடன் தொகையில் 50 சதவீதம் மான்யமாக வழங்கப்படும்.

வடிமுனைக் குழாய்க் கிணறுகள்

சிறு விவசாயிகளுக்காக 300-ஏ, வடிமுனைக்குழாய்க் கிணறுகளும், மிகச் சிறு விவசாயிகளுக்காக 200 வடிமுனைக் குழாய்க் கிணறுகளும் அமைக்க வடிமுனைக்குழாய்க் கிணறு ஒன்றுக்கு ரூபாய் 5,000 வீதம் நிலவளவங்கி மூலம் கடன் வசதி செய்யப்படும்.

புதுக்கிணறுகள்

சிறு விவசாயிகளது நிலங்களில் பாசன வசதிக்காக 200 புதுக் கிணறுகள் வெட்டவும், மிகச்சிறு விவசாயிகளுக்காக 300 புதுக் கிணறுகள் வெட்டவும், கிணறு ஒன்றுக்கு ரூபாய் 5000/- வரை நீண்ட காலக் கடன் வசதி செய்யப்படும்.

பழைய கிணறுகளை ஆழப்படுத்துதல்

பழைய கிணறுகளை ஆழப்படுத்த கிணறு ஒன்றுக்கு ரூபாய் 3000 வீதம் 100 சிறு விவசாயிகளுக்கும் 100 மிகச் சிறு விவசாயிகளுக்கும் நீண்ட காலக் கடன் வசதி செய்து கொடுக்கப்படும்.

நிலச்சீர்திருத்தம்

சிறு மற்றும் மிகச் சிறு விவசாயிகளுடைய நிலங்களின் உற்பத்தித் திறனைப் பெருக்க சிறு விவசாயிகளுக்கு 1,500 ஏக்கருக்கும் மிகச் சிறு விவசாயிகளுக்கு 500 ஏக்கருக்கும் நிலச்சீர்திருத்தம் செய்வதற்கு ஏக்கருக்கு ரூபாய் 700 வரை நீண்டகாலக் கடன் வசதி செய்து தரப்படும்.

நீண்ட காலக்கடன் தொகையில் சிறு விவசாயிகளுக்கு 25 சதவீதமும், மிகச் சிறு விவசாயிகளுக்கு 33-1/3 சதவீதமும் மான்யமாக வழங்கப்படும். நீண்ட காலக் கடன்கள் நிலவள வங்கிகள் மூலமாக வழங்க ஏற்பாடு செய்யப்படும்.

மேலும் சிறு மற்றும் மிகச் சிறு விவசாயிகளுக்கு சேறு கலக்கும் கருவி, பர்மீய சட்டும், கைதெளிப்பான், தூவுவான், கரும்பாலை மற்றும் இதர நவீன விவசாயக் கருவிகளை வழங்குவதற்காக ரூபாய் 3,00,000/- அளவுக்கு மான்ய விலையில் வழங்கப்படும்.

அரசுத் துறைகள் மற்றும் வேளாண்மைப் பணி நிறுவனங்களினின்றும் டிராக்டர், புல்டோசர் மற்றும் விசைத் தெளிப்பான்களைப் பயன்படுத்தும் வாடகைத் தொகையில் ரூபாய் 2,00,000/- அளவுக்கு மான்யம் வழங்கப்படும்.

பழச்செடிகள், மற்றும் தென்னங்கன்றுகள் ரூபாய் 1,00,000 அளவுக்கு மான்ய விலையில் மிகச் சிறு விவசாயிகளுக்கு மட்டும் வழங்கப்படும்.

ஒழுங்குமுறை விற்பனைக் கூடங்களில் சிறு மற்றும் மிகச் சிறு விவசாயிகளது உற்பத்திப் பொருட்களைச்சேமித்து வைக்கவும், விற்பனை செய்யவும் கிடங்கு ஒன்றுக்கு ரூபாய் 1,00,000 வீதம், நான்கு விற்பனைக் கிடங்குகளுக்கு ரூபாய் 4,00,000 மான்யம் வழங்கப்படும்.

மேலும் அந்தந்தப் பகுதிகளின் தேவைக்கேற்பப் புதுத் திட்டங்கள் வகுக்கவும், போதிய நிதி ஒதுக்கீடுகள் செய்யப்பட்டுள்ளன. எனவே சிறு மற்றும் மிகச்சிறு விவசாயிகள் விவசாயத் தொழிலாளர்கள் இத்திட்டத்தில் முழு ஈடுபாடு கொண்டு பயனடைய வேண்டும் என்று கேட்டுக் கொள்கின்றோம்.

—கே. அனுமந்தராவ்,
பி.எஸ்சி. (வே),

திட்ட அலுவலர்,
சிறுவிவசாயிகள் மேம்பாட்டுத் திட்டம்,
தஞ்சாவூர்.

கலைஞரின் சிலப்பதிகாரம்

டாக்டர் வ. சுப. மாணிக்கம்

'நெஞ்சையள்ளும் சிலப்பதிகாரம் என்று ஓர் ஆரம் படைத்த தமிழ் நாடு' என்றார் பாரதியார். இச்சிலப்பதிகாரம் இளங்கோ அடிகளால் 1800 ஆண்டுகட்குமுன் இயற்றப்பட்டது என நாம் அறிவோம். நாம் வாழும் இந்நாளில் 1968-இல் இன்னொரு புதிய சிலப்பதிகாரம் தோன்றியிருக்கிறது. இதனை, 'நெஞ்சை வெல்லும் சிலப்பதிகாரம் என்று ஓர் நேர்மை படைத்த தமிழ்நாடு' என்று பாராட்டுவோம். இப்புதிய சிலம்பைப் படைத்தவர் டாக்டர் கலைஞர் கருணாநிதி. கலைஞர் 1953-இல் திருச்சிராப்பள்ளிச் சிறையகத்துக் கடுங்காவலோடு வதிந்தகாலை, அஃதாவது தம் 29 ஆவது வயதில் இளங்கோவின் சிலப்பதிகாரத்தைக் கலையார்வத்தொடு திறனாய்ந்தார். உரைகளோடும் வரலாற்றோடும் வைத்து நிகழ்ச்சிகளை அலசிப்பார்த்தார். 15 ஆண்டுப் பார்வையின் விளைவே கலைஞரின் உரைநடைச் சிலப்பதிகாரம். பொதுப்பணித்துறை அமைச்சராக இருந்த ஞான்று இப்படைப்பு வெளியாயிற்று. முதலமைச்சர் பேரறிஞர் அண்ணாதுரையின் முன்னுரைப் பதிகத்தைப் பெற்ற சிறப்புடையது இச்சிலப்பதிகாரம்.

'சேரமான் தம்பி தந்த சிலப்பதிகாரத்தை என் தம்பி கருணாநிதி தனது வளமிகு செழுந்தமிழ்ச் சொல் திறத்தால் நாடகமாகத் தருவது பொருத்தமானதே' எனவும் 'இந்நாடக நூலை வெளிக்கொணர்வதன் மூலம் தம்பி கருணாநிதி தமிழ் இலக்கியத்திற்கு நற்பணி ஆற்றியுள்ளார்' எனவும் அறிஞர் அண்ணா முன்னுரையில் தம்பியுறவு சொல்லிப் பாராட்டுவர். இவ்வுறவுணர்ச்சி இந்நாடகத்தை எழுதும்போது கலைஞர்க்கும் உண்டு. இளங்கோ செங்குட்டுவனை 'அண்ணா, அண்ணா' என்று சொல்லும் போதெல்லாம், கலைஞர் தம் அண்ணாவையே காண்கின்றார். செங்குட்டுவனின் தேவியை அண்ணி என்று சுட்டும்போதெல்லாம் இராணி அண்ணியைக் காண்கின்றார் என்ற பாசம் நமக்குப் புலனாகின்றது.

கலைஞரின் பற்று

கலைஞரின் சிலப்பதிகாரப் பற்றும் பூம்புகார்ப் பற்றும் நற்றமிழ் நாடு அறிந்தவை. அத்தோன்றலிடம் காணப்படும் தமிழூற்றம், தமிழாழம், தமிழ்மறம் எல்லாம் சிலப்பதிகாரச் செய்யில் விளைந்தவை.

'பதியெழு வறியாப் பழங்குடி கெழீஇய
பொதுவறு சிறப்பிற் புகாரே யாயினும்
நடுக்கின்றி நிலைஇய என்பதல் லதை
ஒடுக்கங் கூறார் உயர்ந்தோர் உண்மையின்'

என இளங்கோவடிகள் புகார் என்னும் காவிரிப்பூம்பட்டினம் என்றும் நிலையான தலை நகர் எனவும், அதற்குக் காரணம் என்றும் உயர்ந்தோர் இருப்பது எனவும் பாடிச் சென்றுள்ளார். அங்ஙனம் பாடியது உண்மையே என்பார் போல் உயர்ந்த தமிழ் நெஞ்சம் வாய்ந்த நம் முதலமைச்சர் கருணாநிதி இன்று நம் கண்ணெதிரே பூம்புகார் நகரத்தைச் சிலப்பதிகாரக் குறிப்புக்களின் படி உருவாக்கி வருவதால் அறிந்து கொள்கின்றோம். அகக் கண்ணால் கண்ட பூம்புகாரை முகக்கண்ணாலும் உலகத்தார் காண வேண்டும் என்று பெருந்திட்டம் கோலும் கலைஞரை நன்றியொடு வாழ்த்துகின்றோம்.

'பூம்புகார் நகரத்துப் புகழும் பெயரும் யாராலும் மூழ்க அடிக்கப்பட முடியாதவை, சேர இளவல் செந்தமிழ்வித்தகர் இளங்கோவடிகள் இயற்றிய சிலப்பதிகாரம் உள்ளவரையில் பூம்புகாரின்புகழும் மதுரையின் மாண்பும் வஞ்சியின் வீரமும் பொதுவாகத் தமிழகத்தின் சிறப்பும் தாழாது தாழாது'

என்பது கலைஞரின் உள்ளத் துணிவு; அள்ள அள்ளக் குறையாது கூடும். இத்துணிபுணர்ச்சியைக் கலைஞரின் எண்ணம், சொல், செயலெங்கும் முரணின்றிக் காண்கின்றோம்.

பாராட்டு

அண்ணாமலைப் பல்கலைக் கழகம் கலைஞர்க்கு அளித்த டாக்டர் பட்டத்தினைப் பாராட்டும் பொருட்டுச் சென்னைக் கலைவாணர் அரங்கில் 17-10-1971-இல் நிகழ்ந்த பெருங்கூட்டத்தில் யானும் கலந்து கொண்டேன். அஞ்ஞான்று கலைஞரின் சொற்றிறம், புலமை நுணுக்கம், கவிதைப் படைப்பு முதலான பெற்றிகளை எடுத்துச் சொல்லி வருகையில், அவர் எழுதிய சிலப்பதிகார நாடகம் தனித்து ஆராய்வதற்குரிய இலக்கியத் தகுதியுடையது என்று குறிப்பிட்டேன். நான்கு ஆண்டுக்கு முன் சுட்டிய குறிப்பினை இன்று ஒருவாறு விரித்துரைக்கும் வாய்ப்புப் பெற்றமைக்கு மகிழ்கின்றேன். ஒருவாறு என்று ஒருசொல் பெய்ததற்குக் காரணம் இந்நாடகத்தைப் பலவாறு ஆராயலாம் எனினும் இக்கட்டுரைக்கண் ஒரு கூறே இன்று என்னால் ஆராயப்படுவது என்று காட்டுதற்கு!

கலைஞர், இன்று வாழும் ஆசிரியர்; பல கலைகளையும் திறனாய வல்லவர்; செல்வாக்கு மிக்க

எதிரான ஓர் கிழமையிதழ் பாராட்டியதுபோலத் தமிழ்ப் புலமை சான்றவர்; ஆற்றலொடு விளங்கும் முதலமைச்சர். அவர் எழுதிய ஒரு நாடக நூலைத் திறன் செய்வது அருமை கலந்த பெருமையாகும். உண்மைத் திறனெறிகளை வெளிப்படுத்துவதற்கு ஒரு வாய்ப்பும் ஆகும். இலக்கியப் பெருநோக்கில் இக்கட்டுரை வரையப்படுதலின், இதனைப் படிப்பவரும் இந்நோக்கொடு படிப்பாராக என்று கேட்டுக் கொள்கின்றேன். 'பாம்பு அறியும் பாம்பின் கால்' என்றபடி இந்தக் கட்டுரை மாணவ உலகிற்கு ஓர் விருந்தாகும் என்று நம்புகின்றேன்.

இலக்கிய ஆராய்வு என்பது, படைத்த புலவன் உள்ளத்தை உள்ளபடி எடுத்துக் காட்டுவது. அதுமட்டுமன்று. புலவன் உள்ளம் பொருந்திய உள்ளந்தானா? என்று உள்ளத் தளத்தையும் அசைத்துப் பார்ப்பது. உள்ளபடி எடுத்துக் காட்டுவதால் எழுத்தாளனை மதிக்கின்றோம். உள்ளத்தை அசைத்துப் பார்ப்பதால் புலமையுரம் பெறுகின்றோம்.

கலைஞரின் சிலப்பதிகாரம் உரைநடையில் யாத்த ஒரு நாடக நூல்; இந்நூலில் 1. கலைஞரின் தமிழ் நடையை ஆராயலாம்; 2. நாடக உத்திகளை விரிவாக ஆராயலாம்; 3. பாத்திரப் பண்புகளை ஆராயலாம்; 4. இளங்கோ சிலப்பதிகாரத்துக்கும் கலைஞர் சிலப்பதிகாரத்துக்கும் உள்ள ஒற்றுமை வேற்றுமைகளைப் பல முனைகளில் அலசலாம். எனது இக்கட்டுரை இறுதியில் கூறிய ஒற்றுமை வேற்றுமைகளை வெளிக்காட்ட முற்படுகின்றது.

கலைஞரின் முன்னுரையில் ஒரு பகுதி.:

'மூலக்கதையின் ஆசிரியர் கொண்ட கருத்துக்கு மேலும் வலுவூட்டுவது போன்ற மாற்றங்களும்-அவரால் படைக்கப்பட்ட பாத்திரங்களின் பண்பு கெடாமல் தரப்படுகின்ற உருவகமும் - மறுக்கத்தக்கன அல்ல. காலத்திற்கேற்ற சில மாற்றங்களைக் கதையின் நோக்கம் கெடாதவாறு அமைப்பதும் தவறல்ல. மூலக்கதை ஆசிரியர் விட்ட கருத்துக்களையோ காட்டத் தவறிய காரணங்களையோ அடிப்படைக்குக் குந்தகமின்றிப் புகுத்திடுவதும் குற்றமல்ல. இந்த நோக்கத்துடன் நான் சில மாறுதல்களைச் சிலப்பதிகாரத்தை நாடகக் காப்பியமாக்கும் இந்த முயற்சியில் கையாண்டிருக்கின்றேன்.'

சில மாறுதல்களையே செய்திருப்பதாகக் கூறும் கலைஞர் தம் முன்னுரை அடக்கமான முன்னுரை என்பது என் கருத்து. தொடக்கம், நடு, இறுதி என்ற நூலமைப்பிலும் பாத்திர வடிப்பிலும் கதை நிகழ்ச்சியிலும் உணர்ச்சியிலும் கட்டுமானப் பொருளிலும் கதை நோக்கிலும் தொட்ட தொட்ட இடமெல்லாம் கலைஞர் சிலப்பதிகாரம் இளங்கோ சிலப்பதிகாரத்திலும் வேற்றுவீற்றுப் பாங்கு உடையதாகவும் தனித்தன்மையாகவுமே நான் காண்கின்றேன். இளங்கோ காப்பியம் மூல நூலாகவும் கலைஞர் நாடகம் அதன் வழித்தட நூலாகவும் எனக்குத் தோன்றவில்லை. இந்நாடக நூல் ஒரு மூல நன்னூலாகவே இலங்குகின்றது. இப்புதுக் கோட்பாட்டை நிறுவுதற்குச் சான்றுகள் நிரம்பவுள.

நாடக நூலமைப்பு

இந்நூல் 38 காட்சிகள் கொண்டது. மேடையும் நடிப்பும் நோக்கிக் காட்சிகள் விறுவிறுப்பாக அமைக்கப்பட்டுள்ளன. காட்சி சேரநாட்டுத் தலைநகரான வஞ்சி மூதூரில் தொடங்குகின்றது. அம் மூதூரிலேயே இறுதியில் முடிகிறது. செங்குட்டுவனில் தொடங்கி சேரன் செங்குட்டுவன் வாழ்க என்றும் முடிகின்றது. சிலப்பதிகாரக் காப்பியத்தில் இளங்கோ துறவு இறுதிக் காதை இறுதியில் இடம் பெற்றிருப்ப, இந்நாடகத்தில் அது தொடக்க இடம் பெறுவதையும், செங்குட்டுவன் பிறந்தநாள் விழாவில் துறவுச் செயல் தோன்றுவதையும் காண்கின்றோம். கண்ணகியின் உரைசால் புகழுக்குச் செங்குட்டுவன் வடகற் சிலை எடுத்ததைக் காட்டிலும் இளங்கோ தென்றமிழ்க் காப்பியம் படைத்தது பெருங் காரணம் ஆதலின் ஆசிரியன் சிறப்பினை 'விழாவும் விளைவும்' 'இளங்கோ துறவு' என இரு காட்சிகளில் கலைஞர் வீறுபெறப் பேசுகின்றார். 'இளங்கோ' இளங்கோ அடிகளாக மாறி நிற்கிறான்' என்ற தொடராற்றல் கலைஞரின் தமிழாற்றலுக்கு ஒரு சான்று. காப்பியக் கடைசியில் ஒளிந்திருந்த இளங்கோவை ஒரு பாத்திரம் ஆக்கி நாடக நாயகனாக உயர்த்துவர் கலைஞர். சிலப்பதிகாரம் கண்ணகியின் மண மங்கலத்தில் தொடங்கி இளங்கோ துறவில் முடிந்திருப்ப, கலைஞரின் நாடகச் சிலம்போ இளங்கோ துறவில் தொடங்கி கண்ணகியின் கடவுள் மங்கலத்து முடிவதைப் பார்க்கின்றோம். இளங்கோவின் காதைப் பெயர்கள் வேறு கலைஞரின் காட்சிப் பெயர்கள் வேறு. அவர் தலைப்புக்களை இவர் யாதும் பின்பற்றாமையினாலே, கலைஞரின் சிலப்பதிகாரம் மூலத்தன்மையுடையது என்பது வெளிப்படை.

குன்றக் குறவர்கள், கண்ணகி கோவலனொடு வான்வழிச் சென்ற இறும்பூதான செய்தியைச் செங்குட்டுவனிடம் கூறும்போது உடனிருந்தவர்கள் யார் யார் என்று காண்பது சிலப்பதிகாரச் சிக்கல்களுள் ஒன்று. தண்டமிழ் ஆசான் சாத்தனார், இளங்கோவடிகள் இருவருமே அப்போது இருந்தனர் என்று கொள்வாரும் உண்டு. இளங்கோ அப்போது இருந்திலர் எனக் கொள்வாரும் உண்டு. இதனைச் சிலப்பதிகார மூலத்தோடும் உரைகளோடும் ஒட்டி ஆராய்ந்த கலைஞர் அதனைச் சிறிது வேறுபட நாடகப் பாங்கில் அமைத்துக் காட்டுவர். இளங்கோ மலைக் குறவர்களை எதிர்பாராது வழியிடைக் கண்டார் எனவும் அவர்களையும் அழைத்துக் கொண்டு மலைவளம் காண முன்னரே வந்திருந்த அண்ணன் செங்குட்டுவனையும் அண்ணி வேண்மாளையும் ஆசான் சாத்தனாரையும் சென்று பார்த்தார் எனவும் இந்நால்வர் முன்னிலையில் மலைக்குறவர்கள் தாம் கண்ட கண்ணகி நிகழ்ச்சியைச் சொல்லினர் எனவும் கலைஞர் நூல்

தெளிவு செய்யும். இதனால் 'இளங்கோ வேண்மாள் உடனிருந்தருளி' என்ற சிலம்பின் அடிக்குக் கலைஞர் துணிந்த உரைத்தெளிவு புலனாகும். சிலம்பின் தோற்றம் எனப் பெயரிய ஐந்தாங்காட்சி சிலப்பதிகாரக் காப்பியம் எழுதத் தொடங்கியதைக் குறிக்கின்றது. இதனால் கலைஞரின் சிலப்பதிகாரம் இளங்கோவையும் அவரின் சிலப்பதிகாரத்தையும் உள்ளடக்கியது என்பது போதரும்.

'முடிகெழு வேந்தர் மூவர்க்கும் உரியது
அடிகள் நீரே அருளுக'

என்ற பதிகத் தொடருக்கு இரு பொருள் உரைப்பதை நாம் அறிவோம். எனினும் நாடகக் கலைஞர் நமக்கு ஒரு வழியே காட்டுகின்றார். 'முடியுடை மூவேந்தர்க்கும் இக்கதை உரியதாகையால் இளங்கோ வடிகள் இதனை எழுவதே பொருத்தமாகும்' என்று சாத்தனார் தெளிவாகச் சொன்னார் எனவும் 'இளங்கோ அதற்கு இலக்கியம் படைப்பான்' என்ன தம்பி சரிதானே' என்று செங்குட்டுவன் இளங்கோ பக்கம் திரும்பிக் கேட்டான் எனவும், அண்ணன் சொல்லுக்கு உடன்படுவாராகி 'சரி' அண்ணா' என்று இளங்கோ இசைந்தார் எனவும் இந்நாடகப் போக்கு அமைகின்றது.

காப்பியக் கதையும் நாடகக் கதையும்

இளங்கோவடிகட்கும் கலைஞர்க்கும் தமிழுணர்வில் தமிழ் நாகரிகத்தில் தமிழ்க் கலைகளில் தமிழகப் பற்றில் தமிழின மேன்மையில் வேறுபாடில்லை எனினும் சமுதாயக் கொள்கை, பகுத்தறிவுக் கொள்கை, சமயக்கொள்கை என்றின்னவற்றில் அடிப்படையான வேறுபாடு, மிக்குள. அடிகள் சிலவற்றில் நம்பிக்கை கொண்டாரோ இல்லையோ, நிமித்தங்களையும், அப்பால் நிகழ்ச்சிகளையும், சமுதாயத்தில் பலர் கொண்ட கொள்கைகளையும் பழக்க வழக்கங்களையும் தம் காப்பியத்துக்குக் கட்டுமானப் பொருள்களாகத் தழுவிக் கொண்டுள்ளார் என்பது மறுக்க இயலா உண்மை. பெரியார் அண்ணா வழி வந்த கலைஞர் இவ்வகையில் இளங்கோ வழிப் புகார் என்பதும் வெளிப்படையான உண்மை. வேறுபட்ட இவ்வுண்மைகளின் விளைவு என்னும்? இளங்கோ மேற்கொண்ட கட்டுமானப் பொருள்கள் கலைஞர் நாடகத்து வெட்டுமானப் பொருள்கள் ஆகிவிடும் என்று நாம் எதிர்பார்க்க வேண்டியதே. மேலும் இவர் ஆளும் கட்டுப் பொருள்கள் புதியனவாக இருக்கும் என்பதனையும் நாம் எதிர்பார்க்க வேண்டும். இதனால் கதைச் செலவிலும் பாத்திரப் பண்பிலும் பெரு மாற்றங்கள் ஆசிரியர்தம் கொள்கைகட்கு ஏற்பப் புகுகின்றன. கொள்கை வேறாகும் போது செல்கையும் வேறாகத் தானே இருக்கும்?

கலைஞர் தம் நாடக நூலில் மதிக்கு இடமுண்டேயன்றி விதிக்கும் நிமித்தத்துக்கும் இடமில்லை. 'ஊழ்வினை உருத்து வந்து ஊட்டும்' என்பது சிலப்பதிகாரக் காப்பியத்து ஓர் உயிரான பரவலான கொள்கை. கோவலன் மாதவியைப் பிரியுமிடத்தும், அவன் கண்ணகியொடு மதுரைக்குப் புறப்படுமிடத்தும், கல்லாக் களிமகன் அவனை வெட்டுமிடத்தும் இன்னும் பல இடங்களிலும் ஊழ்வினைப் பேச்சைப் பார்க்கின்றோம். ஊழ்வினையைச் சுட்டாத பாத்திரம் இல்லை என்னும் அளவிற்குச் சிலப்பதிகாரம் ஊழதிகாரமாக மாறி நிற்கின்றது. கலைஞர் நாடகத்தில் ஊழ் ஒளிந்த இடம் தெரியவில்லை. இளங்கோவே நிமித்தத்தையும் ஊழையும் தந்தை சேரலாதன்முன் இகழ்வதாகக் கலைஞர் படைத்துக் காட்டுகின்றார். 'பொய்க்காது படைத்தவர்களுக்கு நிமித்திகர் வாக்குப் பொய்க்காது. இது உண்மைக் காது, அவர் ஆருடம் கேட்டுக் கலங்காது' எனவும் 'விதிவிட்ட வழியில் நடப்போமென்று இருந்தால் வேதனைக் களமாகிவிடும் தமிழ்நாடு' எனவும் வரும் இளங்கோ பேச்சு உண்மையில் கலைஞரின் பேச்சு.



கீரியைக் கொன்ற மனைவியை விட்டுச் சென்றான் அந்தணக் கணவன். கருமக் கழி பலமாகிய வடமொழி ஏட்டினைப் பெரும் பொருள் கொடுத்து வாங்கிக் கானம் சென்ற கணவனைக் கூட்டி வைத்தான் கோவலன் என்று சிலப்பதிகாரம் கூறும். கலைஞரின் கோவலனோ வினைவழிச் செல்லவும் இல்லை, பொருள் கொடுக்கவும் இல்லை. விளக்கஞ் சொல்லி அந்தணனைத் திருத்துகின்றான்.

'அந்தணரே! பாம்பு குழந்தையைக் கடிக்குமா, கடிக்காதா என்று தெரியாமலே கீரி அதைக் கொன்றுவிட்டது. அதுபோலவே கீரி குழந்தையைக் கடித்ததா கடிக்கவில்லையா என்று தெரியாமலே உமது மனைவி அதைக் கொன்றுவிட்டார்கள். அதனால் சரிக்குச் சரி ஆகிவிட்டது. உமது மனைவியொடு வீட்டுக்குப் போவதே முறை'

என்பது மதி வழிப்பட்ட விளக்கம். கீரிக்கதையைச் சிலப்பதிகார மதுரைக் காண்டத்தில் மாடலன் கோவலனுக்கு முன் கண்ணகி கேட்கச் சொல்லுகின்றான்; கோவலன் இப் பிறப்பில் செய்தனவெல்லாம் நல்வினைகளே என்று காட்டுவதற்குச் சொல்லுகின்றான். கலைஞரின் நாடகத்தோ எனின் கீரி நிகழ்ச்சி புகார் நகரத்துக் கடற்கரையில் மாதவி கோவலன் அருகிருக்க நடப்பதாகக் காண்கின்றோம். பிரிந்த பார்ப்பனியை அவள் கணவனோடு சேர்த்து வைத்த கோவலனுக்குத் தான் விட்டுப் பிரிந்த கண்ணகியை நினைவூட்ட இக் கீரிக் கதை பயன்படுவதாகவும் காண்கின்றோம். அந்தணன் கானம் போனான் என்று இளங்கோ கூற, அவன் கடல் வழிப்போனான் என்று கலைஞர் கூறுவர். இந்த ஒரு சிறு கதையளவில் இரண்டு அதிகாரத்துக்கும் இத்துணை வேறுபாடு தொடக்க முதலே குற்றமற்றவன் என்று காண்கின்றோம். அதுபோல் இளங்கோ வடித்த கண்ணகியும் கலைஞர் படைக்கும் கண்ணகியும் வேறு. மண்மகள் அறியா வண்ணச் சீறடியளாக, கலையறியாப் பேதையாக, யாதும் அறியா ஏழையாகக் காப்பியக் கண்ணகி இருக்கின்றாள். நாடகக் கண்ணகியோ கோவலனை எதிர் பார்த்துக் கடலலையில் குதித்து விளையாடுவதையும், மாதவி நடனம் பார்க்கச் செல்வதையும், கோவலனுக்கு அறிவுரை

கூறுவதையும் ஊடலாடி உரையாடல் நிகழ்த்துவதையும் அமைதிப் பெண்ணாக இன்றி இருபதாம் நூற்றாண்டுப் பாரதியின் புதுமைப் பெண்ணாக இலங்குவதையும் காண்கின்றோம்.

கதைத் திருத்தம்

'கூடல் மகளிர் ஆடல் தோற்றமும்
பாடற் பகுதியும் பண்ணின் பயங்களும்
காவலன் உள்ளம் கவர்ந்தன என்றுதன்
ஊடல் உள்ளம் உள்கரந் தொளித்துத்
தலைநோய் வருத்தம் தன்மே லிட்டுக்
குலமுதல் தேவி கூடாது ஏக'

என்ற சிலப்பதிகாரத்தில் பாண்டியன் தேவி அரசவையில் ஊடிக்கொண்டு போனாள் என்று அறிகின்றோம். இது நாகரிகமாகப்படவில்லை. பொற்கொல்லன், தேவியின் சிலம்பை எவ்வாறு எவ்விடத்துத் திருடினான் என்று இக் காப்பியத்துக் குறிப்பில்லை. மேலும் ஒரு பொற்கொல்லன் திருடினான் என்பதற்காக அவ்வினத்தில் ஆயிரம் பொற்கொல்லரைக் கொன்று களவேள்வி செய்ததும் அரசுமுறையாகச் செங்கோலாகத் தோன்றவில்லை. தமிழ்ச் சங்கம் வைத்துத் தமிழ் வளர்த்த மதுரையை ஆளும் பாண்டியன் தமிழ்ப்புலமையுடையவன் ஆக்கக் காட்டப்படவில்லை. இவற்றையெல்லாம் உள்ளிப் பார்த்தார் கலைஞர். பாண்டிமாதேவியின் ஒரு சிலம்பு பழுதுபட்டது எனவும் அதனைப் பொற்கொல்லனிடம் செம்மை செய்யக் கொண்டுசென்ற அதிகாரியே திருடினான் எனவும் சிலம்பு செப்பனிட்டு உடனே வாராமையால் தேவி ஊடல் கொண்டு அரசவை வர மறுத்தாள் எனவும் பாண்டியன் நெடுஞ்செழியன் சிலம்பையும் மனைவியின் ஊடலையும்பொருட் படுத்தாது கல்வியின் பெருமை காட்ட 'உற்றுழி உதவியும் உறுபொருள் கொடுத்தும்' என்ற தமிழ்க் கவிதையை ஓலையில் எழுதிக் கொண்டிருந்தான் எனவும் கலைஞர் கதையோட்டத்தை முற்றும் மாற்றியமைப்பர். மாற்றியமைத்துப் பொற்கொல்லரினத்தை வழிவழி வந்த பழியினின்று காத்துப் போற்றினார். மனைவியின் ஊடலாயினும் அது வீட்டளவில் இருக்க வேண்டுமேயன்றி நாட்டவையில் தோன்றக் கூடாது என்று அடக்கம் காட்டினார். புறநானூற்றில் நெடுஞ்செழியன் பாடியிருந்த ஒரே ஒரு செய்யுளை நினைவுகொண்டு வாய்ப்பாகப் பயன்படுத்தித் தன் மனைவி ஊடலிலும் தமிழ்ப் பாடல் இனிது என மொழிப் பற்று ஊட்டினார். 'செவிக்குத் தேனென இராகவன் புகழைத் திருத்திய கவிக்கு நாயகன்' என்ற கம்பர் பாராட்டு நம் முதலமைச்சர் கலைஞர்க்கும் பொருந்துவதாகும்.

பகுத்தறிவுக் கதை

இருநூலிலும் மதுரை எரிபடுகின்றது. சிலம்புக் காப்பியத்தில் நெருப்புவானவன் தோன்றி மதுரையைக் கொளுத்துகின்றான். சிலம்பு நாடகத்தில் கணவன் கொலைப் பட்டான் என்பது கேட்டுக் கண்ணகி மயங்கி ஓடும்போது குத்துவிளக்குச் சாய்கிறது. குடிசை எரிகிறது. பெருங் குழப்பத்தில் அணைப்பவரின்றித் தீப் பரவுகின்றது. சிலம்புக் காப்பியத்தில் தேவர்கள் கோவலனோடு சேரநாடு வந்து கண்ணகியை வானவூர்தியில் வானுலகு அழைத்துச் செல்கின்றனர். சிலம்பு நாடகமோ, கணவன் வருவான் வருவான் என்று கண்கலங்கி வேங்கை மரநிழலில் கண்ணகி பலநாள் நின்று கொண்டிருந்தாள்; திடீரென ஒருநாள் அவளைக் காணவில்லை என்று நிறுத்துகின்றது. சிலம்புக் காப்பியம் கண்ணகி கோயிலுள் வழிபடு தெய்வமாகவும் பார்ப்பனத் தேவந்தி பெண்பூசாரியாகவும் முடிக்கின்றது. சிலம்பு நாடகம் கற்புக் கண்ணகிக்குச் சிலைக் கல் இமயத்திலிருந்து கனகவிசயர் தலைமேல் தூக்கி வைத்துக் கொணர்ந்த மன்னனை வீரர்கள் 'சேரன் செங்குட்டுவன் வாழ்க' என்ற வாழ்த்துவதோடு முடிகின்றது. கண்ணகியின் எதிர்காலம் குறிக்கும் சாலினியும், பாண்டியன் பழம் பெருமை புகலும் மதுரைத் தெய்வமும், கோவலன் முன்னோனைக் கடலின்று காப்பாற்றிய மணிமேகலைத் தெய்வக் கதையும், செங்குட்டுவன் வானத்துச் சிலம்புக் காட்சியும், கோவலன் பழவினைக் கதையும் இன்னபிற அப்பால் நிகழ்ச்சிகளும் கலைஞர் தம் நாடகச் சிலம்பில் ககளவும் புக இடங்கொடுக்கவில்லை. அவர் தம் பகுத்தறிவுடு கோட்பாடே இதற்கெல்லாம் காரணமாம். அப்பால் நிகழ்ச்சிகளை ஒழித்து, தமிழ், தமிழ்ச் சால்பு, தமிழிலக்கியம், தமிழ்க் கலை, தமிழர் மானம், தமிழின் ஒற்றுமை, தமிழகப் பெருமை என்ற தமிழ்மைக்கு எல்லா இடத்தும் முதன்மை கொடுத்துப் பற்றினைத் தூண்டியுள்ளார் என்பதனை நான் அழுத்தமாகச் சொல்ல விரும்புகின்றேன்.

தமிழ் மயம்

'துறவு பூண்டாலும் இன்பத் தமிழகத்தை விட்டு எங்கும் போய்விடமாட்டேன்' என்று இளங்கோ நாட்டுப் பற்றுக் காட்டுகின்றார். 'வாழ்க செந்தமிழர் தாயகம்' என்று முரசு முழங்குகின்றது. தமிழ் கற்றுத் தமிழிலே எல்லாரோடும் பேசுகின்றான் கிரேக்கக் கிழவன். 'பழத்துக்குள் இருக்கின்ற சுளைபோலச் சுவையேறும் செந்தமிழே' என்று அமுதூற மொழிகின்றான் கோவலன். 'எல்லாம் தமிழ் மறை தந்த பழக்கம்' என அந்தணன் அறிந்து கொள்கின்றான். 'தமிழரல்லவா தேவந்தி' என்று கண்ணகி தமிழின மறத்தைப் பாராட்டுகின்றாள். 'குழலையும் யாழையும் வெல்லுகின்ற குறளையும் வெல்லும் உன் குறுஞ்சிரிப்பு' என்று குழந்தை மணிமேகலை சீராட்டப் பெறுகின்றாள். 'மானம் காக்கும் தமிழச்சி நீ மனம் தளரலாமா' என்று தேவந்தி ஆறுதல் கூறுகின்றாள். 'தாய்மேல் ஆணையாக-தமிழ்மேல் ஆணையாக-தாயகத்து மக்கள் மேல் ஆணையாகத் தீர்ப்புக் கூறுவீர்' என்று துடிக்கின்றாள் கண்ணகி. என் தமிழையல்லவா இகழ்ந்தார்கள்; முரசு தட்டுங்கள்; இமயத்தை முட்டுங்கள்; தமிழன் தோற்றதில்லை என்று முழங்குகின்றான் செங்குட்டுவன். கலைஞர் கன்னித் தமிழ்க் கொள்கையர் ஆதலின், தமிழ்ப் பரப்பு இன்று கொள்ள வேண்டிய கோட்பாடு ஆதலின் இளங்கோ சிலம்பில் இல்லாத தமிழாட்சி, கலைஞர் நாடக நூலில் வீற்றிருக்கக் காண்கின்றோம்.

புதிய சிலப்பதிகாரம்

இளங்கோ சிலப்பதிகாரத்தின் வழி வந்தது தன் சிலப்பதிகாரம் என்று கலைஞர் ஒப்பியிருந்தாலும், கதை மாற்றத்தாலும் பாத்திரப் பண்பாலும் ஊழுக்கு இடங் கொடாமைமையாலும் தெய்வக் கூறு இன்மையாலும் பகுத்தறிவு நோக்

காலும் சீர்திருத்தப் பாங்காலும் தமிழ்க்குறிக்கோளாலும் கலைஞர் சிலப்பதிகாரம் இருபதாம் நூற்றாண்டில் நல்லுரை நடையில் எழுந்த தனிமூலத் தன்மை வாய்ந்த புதுச் சிலப்பதிகாரமே என்பது என் துணிபு. இளங்கோ சிலப்பதிகாரம், கலைஞர் சிலப்பதிகாரம், பாவேந்தர், பாரதிதாசன் கண்ணகி புரட்சிக்காப்பியம் என்ற மூன்றையும் ஒப்பீட்டுப் பொருளாக மேற்கொண்டு ஓர் ஆய்வாளன் திறன் தெரிந்தால் படைப்பிலக்கியங்கள் காலக் கண்ணோட்டத்தில் எத்தகைய மாற்றுருப் பெறுகின்றன. என்று படைப்புக் கோட்பாடுகளை நெறிப்படுத்த முடியும்; ஆசிரியனுடைய சமய, இன, அரசியற் கொள்கை வேறுபாடுகளால் பழங்கதைகள் எவ்வாறெல்லாம் புத்தம் புது வடிவெடுக்கின்றன என்ற அடிப்படைகளை வெளிப்படுத்த முடியும். இளங்கோவிற்கும் கலைஞர்க்கும் கொள்கை வேற்றுமைகள் பலப்பல. அதனால் இருவர்தம் சிலப்பதிகாரம் மேலே காட்டியபடி வேறுபடுதல் இயல்பே. கலைஞர்க்கும் பாவேந்தர்க்குமோ கொள்கை ஒற்றுமைகளே பல. அப்படியிருந்தும் இருவர் படைப்புக்களிலும் நுனித்தகு வேற்றுமைகள் உள; இவையெல்லாம் எதிர்கால ஆய்வாளருக்குத் தக்க புலமை விருந்துகள், நுழைபுலத்தார்க்குத் தக்க ஆய்வுக் களங்கள். கலைஞரின் சிலப்பதிகாரம் இன்னும் ஓரிரு புதிய சிலப்பதிகாரங்களுக்கு அடிகோலினாலும் அது வியப்புக்கு உரியதில்லை. கண்ணகி கற்பும் சிலம்பொலியும் தமிழாற்றலும் எத்துணை இலக்கியப் படைப்புக்கும் விரிந்து இடங்கொடுக்க வல்லது அல்லவா? 'பழைய இதிகாசங்களைக் காட்டி விதியை நிலைநிறுத்த எண்ணாதீர்! இதோ நான் படைக்கின்றேன் புதிய இதிகாசம்' என்பது கலைஞர் படைத்த சிலப்பதிகாரத்தில் இளங்கோ கூறும் வாய்மொழி. பாத்திரம் புலவனின் படைப்பு. அவன் எண்ணப்படி பாத்திரம் நினைக்கும், சொல்லும், செய்யும். கலைஞரின் நாடகத்தில் இளங்கோவும் ஒரு பாத்திரம் ஆகிவிட்டார். பாத்திர இளங்கோ கலைஞரின் சிந்தனைகளை வெளியிடுகின்றார். தன் கருத்துச் சொல்லியாக யாரையும் பாத்திரப்படுத்துவது தானே அன்று முதல் இன்று வரை புலவனுக்கு உள்ள தனியுரிமை. இவ்வுரிமை கலைஞர்க்கு மட்டும் விலக்காகுமா?

நத்தையோ நத்தை!

நத்தைகள் நம் நண்பர்களா பகைவர்களா?

உணவாகப் பயன்படும் சில வகை நத்தைகளுக்கு நல்ல விலை கிடைக்கும். மருந்துப் பொருளாகவும் சில பயன்படும். நத்தைக் கூடு, உள் சதை இரண்டுமே பயனாகும்.

சில வகை நத்தைகள் நம் பகைவர்கள் ; ஏனெனில் நோய்க் கிருமிகள் அவற்றில் தொற்றிக் கொண்டு, நோய்களைப் பரப்புகின்றன.

எவ்வகை நத்தைகள் வருவாய் தரும் ; எவை நோயைப் பரப்பும் என்று கண்டறியும் ஆராய்ச்சிப் பணியில் தமிழகத்திலுள்ள ஒரு நீர்வாழ் உயிரின நிலையம் ஈடுபட்டுள்ளது. பரங்கிப் பேட்டையிலுள்ள இந் நிலையத்தை அண்ணாமலைப் பல்கலைக் கழகம் நடத்தி வருகிறது.

சிப்பியின உயிர்களின் வாழ்க்கை வரலாறுகளை உற்று நோக்குவதே இந்த ஆராய்ச்சியின் நோக்கம். முத்துச் சிப்பிகள், நத்தைகள், சிப்பி மீன், இரட்டைச் சிப்பி நத்தை முதலியன சிப்பியின் உயிர்கள்.

சிப்பி, நத்தை ஓடு, கிழிஞ்சல் ஆகியவற்றில் சுண்ணாம்புச் சத்து (கால்ஷியம்கார்பனேட்) அதிகம். சிப்பியின் உயிர்களின் உள் சதையில் (மாமிசத்தில்) மிகுந்த புரதச் சத்து உண்டு; கொழுப்புச் சத்து மிகக் குறைவு. சுண்ணாம்புக்காகக் கிழிஞ்சல் பயன்படுகின்றது. ஆனால் இறைச்சியை வீணாக்குகிறார்கள். இரண்டையும் பயன்படுத்தி, பறவைத் தீனி உருவாக்க முடியுமானால், கோழிகள் விரும்பி உண்ணும் என்று ஆராய்ச்சியில் தெரிய வந்துள்ளது.

நமது நாட்டில் நோய் பரப்பும் நத்தை வகைகள் எவை?

நல்ல தண்ணீரில் வாழும் ஒரு வகை நத்தை 'சிஸ்டோஸோமியாஸிஸ்' என்னும் நோயைப் பரப்பி வருவதாக மேல் நாட்டு வல்லுநர்கள் கண்டுள்ளனர். இந்த நோய் பீடிப்பவர்கள் உடலில் இரத்தம் குன்றுகிறது ; உடல் திசுக்கள் கேடுறுகின்றன. ஒருவகை நாடாப் புழுதான் காரணம். பறவை, விலங்குகளுக்கும் இந் நோய் வருவதுண்டு. புழு, முட்டைகளாகஇருக்கும்போது நத்தைகளைத் தொற்றிக் கொண்டு பரவுகிறது. புழுவாக வளர்ந்ததும், தோலைத் துளைத்துக் கொண்டு, குருதியில் புகுந்து விடுகிறது. கல்லீரல், குடல் போன்ற உள் உறுப்புக்களில் புழுக்கள் ஒட்டிக் கொண்டு, அங்கு முட்டையிடுகின்றன. நோய் வலுக்கிறது. மலம், நீர் வெளிவரும் போது, முட்டைகளும் வெளிவந்து மீண்டும் நத்தைகள் வழியாகப் பரவுகின்றன. நோயாளிகள் சோகையில் வாடி, வலுவிழந்து, நடைப்பிணமாக வாழ்ந்து இறுதியில் மடிந்து போகிறார்களாம்.

சில ஆசிய, ஆப்பிரிக்க நாடுகளிலும் மேற்கிந்தியத் தீவுகளிலும் இந் நோய் பரவியுள்ளது. ஏறத்தாழ 20 கோடிப் பேர் உலகம் முழுவதிலும் இந் நோயால் வாடுவதாக 'உலக உடல் நல நிலையம்' கூறுகிறது.

நல்ல வேளை, இந்தியாவில் மனிதர்களுக்கு இந்த நோய் வந்ததாகத் தகவல் இல்லை! எனினும், உள் நாட்டு நல்ல தண்ணீர் நீர்நிலைகளைப் பாதுகாக்கத் தடுப்பு நடவடிக்கைகள் எடுக்காவிட்டால், நோய் இங்கும் வரக்கூடும் என்று அஞ்சுகிறார்கள். வருமுன் காக்கும் பணிக்குப் பரங்கிப் பேட்டை நிலைய ஆராய்ச்சி பெரிதும் துணை செய்யும்.

பரங்கிப் பேட்டை நிலைய ஆராய்ச்சியில், அமெரிக்காவில் உள்ள மிச்சிகன் பல்கலைக் கழகமும் ஒரு கூட்டாளியாகச் சேர்ந்து இத் துறையில் பல அரிய தகவல்களை வழங்குகிறது.

மறவாதீர்கள்;

உங்கள் மகள் ஒருநாள்

மணமகளாக அமர வேண்டியவள்!

திருமணம் என்றாலே-அதுவும் உங்களது மகளின் திருமணம் என்றால்—செலவுதான். அதற்கென இன்றே சேமிக்கத் துவங்கினால் எதிர்காலத்தில் எந்த செலவையும் சமாளிக்க இயலும். உங்கள் சேமிப்புத் தொகை உங்களுக்கு தக்க சமயத்தில் கைகொடுத்துதவும்.

பல சிறப்பு அம்சங்களுடன் உங்களுக்கென இரு சேமிப்பு திட்டங்களை நாங்கள் வழங்குகின்றோம். மாதச் சேமிப்புத் திட்டத்தின்படி ரூ. 20,000/- வரை டிபாசிட்டுகள் வரி விதிப்பின்றி ஏற்றுக்கொள்ளப்படும். ரெக்கரிங் டிபாசிட் திட்டத்தின் கீழ் ஒரு சிறப்புச் சலுகை அளிக்கப்படுகிறது—இதன் கீழ் கணக்குத் துவக்கியவர்கள் திடீரென மரணமடைந்தால் 5 ஆண்டு இறுதியில் கிடைக்கவேண்டிய தொகை முழுதும் உடனடியாக அவர்களது வாரிசுகளுக்குக் கிடைக்கும். இந்த இரு திட்டங்களுக்கும் உங்களது சேமிப்புத் தொகையை உங்களது சம்பளப் பட்டியல் மூலம் மாதாமாதம் பிடித்துக்கொள்ள செய்யலாம். தற்போது அஞ்சலக சேமிப்புகளுக்கு அதிக வட்டி அளிக்கப்படுகிறது. அஞ்சலக காலவரை வைப்புத் திட்டங்களுக்கு 10% வட்டி அளிக்கப்படுகிறது.

இதோ சில முக்கிய விவரங்கள்

	மாதம் செலுத்தும் தொகை	5 ஆண்டு இறுதியில் கிடைப்பது	10 ஆண்டு இறுதியில் கிடைப்பது
	ரூ.	ரூ.	ரூ.
ரெக்கரிங் டிபாசிட்	5/-	375/-	...
	10/-	750/-	...
வளரும் மாதச் சேமிப்பு	5/-	...	825/-
	10/-	...	1,650/-

இயக்குநர், சிறு சேமிப்புத் துறை, தமிழ் நாடு அரசு, சென்னை-600 002

தேனுவமை

கவிஞர் முருகுசுந்தரம்

பூக்காமல் இளவேனில் பிறப்ப தில்லை
புதுமையில்லாச் சிந்தனைக்குப் பெருமை யில்லை
வாக்கெடுத்து முடிந்தாலும் பெண்ணின் கூந்தல்
வண்ணமலர் சூடாமல் சிறப்ப தில்லை!
நாக்குளிரச் சொல்லுகிறேன்: காத லின்றி
நன்னூல்கள் பிறப்பதில்லை; உவமை யின்றி
ஆக்கிவைத்த சொற்குப்பை கவிதை யில்லை,
அழகுநிலா நீந்தாத வானம் போல.

அதங்கோட்டா சான்முன்னல் இலக்க ணத்தை
அரங்கேற்றும் காப்பியனும், உவமை நான்கு
விதஞ்சொன்னுன்; விரவிவரும் மரபும் சொன்னுன்;
விளக்கமுடன் நிலைக்களமும் உருபும் சொன்னுன்
புதுப்பொருளும் உவமைகளும் மணமக் கள்போல்
பொருந்துகிற முறைசொன்னுன்; உவமப் போலி
குதிக்கின்ற நிலைசொன்னுன்; உவமம் செய்யுட்
கோயிலுக்கு வனப்பூட்டும் சிற்பம் என்ருன்.

நங்கையர்க்குப் பொங்கிவரும் நாணம் வேண்டும்
நல்லதமிழ்ப் பாட்டிற்கோ உவமை வேண்டும்
பொங்கிவரும் உவமையிலே புதுமை வேண்டும்.
போக்கின்றிச் செக்குசுற்றும் மாட்டைப் போலச்
சங்கத்தார் பாட்டிற்குள் உவமை தேடிச்
சலித்தெடுத்துக் கூறுவதை நிறுத்த வேண்டும்.
திங்களைப் பொன்வலைக்குள் நிரப்பல் போலத்
தேனுவமை பாட்டுக்குள் நிரப்ப வேண்டும்.

உள்ளத்தின் தன்மைகளின் வேறு பாட்டால்
உவமைகளும் வேறுபடும்; நிலவைக் கண்டால்
கள்ளநகை கடைக்கண்ணில் காட்டும் காளை
காதலியின் முகமென்பான்; அமுதம் என்று
சொள்ளொழுகப் பாட்டிசைப்பான் கவிஞன்; ஏழை
சோற்றுருண்டை என்றுசொல்வான்; கெட்ட லோபி
வெள்ளிநிலா இதுவல்ல; யாரோ வானில்
விட்டெறிந்த பணமென்று விரைந்து சொல்வான்.

மின்னலினை, மேகத்துக் குதிரை மீது
விழுகின்ற சாட்டையென்ருல் பொருத்த மன்ருே?
கன்னலிலே கணுப்போலத் தெளிந்த பாட்டில்
கடுஞ்சொற்கள் இருக்குதென்ருல் பொருத்த மன்ருே?
புன்னகையைக் கன்னமெனும் சிவந்த வானில்
புறப்பட்ட மின்னலென்ருல் பொருத்த மன்ருே?
அன்னநடைப் பெண்ணடியை அசைந்து செல்லும்
அழகுவெள்ளைப் புருவென்ருல் பொருத்த மன்ருே?

வில்லம்பு மேனியிலே தைக்கும்; கூறும்
வெஞ்சொற்கள் நெஞ்சத்தில் தைக்கும் என்று
சொல்லுஞ்சொல் எடுத்துக்காட் டணியாம்; பாட்டில்
சுவையேற்றிக் காட்டுதற்குக் கவிஞர் பல்லோர்
'மெல்லவந்து கண்சிமிட்டும் நிலவைப் போல
மெல்லியலார் முகவட்டம் தோன்று மென்றே
இல்பொருளை இனிப்பான உவமை யாக்கி
இயம்புவதும் இலக்கியத்தில் வழக்க மாகும்.



விலை உயர்ந்த ரசாயன உரத்தைக் களைகள் தின்று விடுகின்றன

மாசேடி அவற்றை முளைக்கும் முன்னரே அழித்துவிடுகிறது

இனி உங்கள் நெல் வயல்களில் களைகளினால் ஏற்படும் பயிர்ச் சேதம் வெகுவாகக் குறைந்து விடும். மாசேடி ரசாயன உரத்தின் முழுப் பயனும் உங்கள் நெற்பயிருக்குக் கிடைக்க வழிசெய்கிறது. நீங்கள் அமோகமான நெல் விளைச்சலையும், அபாரமான லாபத்தையும் பெறுகிறீர்கள்.

களைகளைப் போக்கி விளைச்சலைப் பெருக்குங்கள்

மாசேடி®

களை நீக்கி தயாரிப்பாளர் **Monsanto** மான்ஸான்டோ

50% ஈஸி மற்றும் 5% குறுணைகளாகக் கிடைக்கிறது.

மான்ஸான்டோ கெமிகல்ஸ் ஆஃப் இந்தியா பிரை. லி.

தலைமை அலுவலகம்: வேக்ஃபீல்ட் ஹவுஸ், 11, ஸ்ப்ராட் ரோடு,
பாலர்டு எஸ்டேட், பம்பாய் 400 001
கிளைகள்: 3/8, அஸஃப் அலி ரோடு, புது டெல்லி 110 001
19, ராஜேந்திரநாத் முகர்ஜீ ரோடு, கல்கத்தா 700 001
310/311, லிங்கி செட்டி தெரு, சென்னை 600 001

மான்ஸான்டோ-இந்திய விவசாயிக்குச் சேவைபுரியும், களைக்கொல்லி தயாரிப்போர்.

® மான்ஸான்டோ கம்பெனியின் ரெஜிஸ்டர்டு டிரேட்மார்க். அங்கீகாரத்துடன் மான்ஸான்டோ கெமிகல்ஸ் ஆஃப் இந்தியா பிரைவேட் லிமிடெட் உபயோகிப்பது.

Grant.18.TM(R)



பரிசு பெற்ற கொரடாச்சேரி

பா. செயப்பிரகாசம்

எரிந்து கொண்டிருக்கும் விளக்கு, மேலும் ஒளிவிட்டு எரிவதற்கு வகை செய்ய ஒரு தூண்டுகோல் தேவை என்றார் ஒரு பேரறிஞர். "பெரும்புணை வழிப்படூஉம் தெள்ளம்" என்று வெள்ளத்தின் வழியே செல்லும் ஓடத்தின் நிலை பகர்வர் பெரியோர். ஆயினும், அதற்கும் துடிப்புக் கொடுத்து, வேண்டிய திசை திருப்பலாம், வேகத்தையும் மிகுதிப்படுத்தலாம் என்பது உலகோர் கண்ட உண்மை. இதை மையமாய்க் கொண்டே ஆக்கப் பூர்வமான பற்பல திட்டங்கள் செயற்படுத்தப்பட்டுக் கொண்டிருப்பினும், ஊக்கந் தந்து, உயர்வுக்குரிய வழி வகைகளைக் காண முயன்று வருகிறது தமிழ்நாடு அரசு. உற்சாகப் படுத்துவதற்குப் பரிசுகள் பல வழங்கி செறிவுடன் செயற்பட வைக்கிறது. மைய அரசும், மாநில அரசும் மாவட்ட அளவில் வழங்குகின்ற பரிசுக்குரிய தகுதியை 1973-74-ஆம் ஆண்டில் ஆக்கிக் கொண்டிலங்குவதுதான் தஞ்சை மாவட்டம், கொரடாச்சேரி ஒன்றியத்திலுள்ள பெருந்தரக்குடி, குளிக்கரை கிராமங்களாகும்.

அரசு விதித்துள்ள பல்வேறு விதிகட்கும் பல தரப்பட்ட வரையறைகட்கும் தன்னை உட்படுத்திக் கொண்டு பரிசு பெற்ற சிறப்புடையது கொரடாச்சேரி ஊராட்சி ஒன்றியம்.

இந்திய அரசு வேளாண்மை அமைச்சகம் ஒரு பரிசுத் திட்டத்தை அறிவித்தது. 1972-73-ஆம் ஆண்டில் சிறந்த கிராம ஊராட்சிக்குப் பரிசளிக்கப் படும் என்ற திட்டம் இது. ரொக்கமும், சான்றிதழும் வழங்கப்படவிருக்கும் இந்தப் பரிசு, தேசிய அளவில் சிறந்த கிராமம் என்றும், மாநில அளவில் சிறந்த கிராமம் என்றும் முறைப்படுத்தி வழங்கப்படும்.

தேசிய அளவில் சிறந்த கிராமப் பஞ்சாயத்து எனத் தெரிவு செய்யப்படும் பஞ்சாயத்திற்கு முதற்பரிசு ரூ. 5,000/- இரண்டாம் பரிசு ரூ. 3000/-.

மாநில அளவில் முதற் பரிசு பெறுகின்ற பஞ்சாயத்திற்கு ரூ. 1000/-, இரண்டாம் பரிசு பெறுகின்ற பஞ்சாயத்திற்கு ரூ. 500/-, மூன்றாவது பரிசு பெறுகின்ற பஞ்சாயத்திற்கு ரூ. 300/- வழங்கப்படும்.

சிறந்த கிராமத்திற்குரிய தகுதிகள் என்று இந்திய அரசு குறிப்பிடுகின்ற விதிகள் இங்குத் தரப்படுகின்றன.

1. ஒரு கிராமப் பஞ்சாயத்து ஐந்தாண்டுக் காலத்திற்கு முறையான பணிகள் ஆற்றியிருக்க வேண்டும்.

2. ஒரு கிராமப் பஞ்சாயத்து எந்த விதமான குறைபாட்டிற்கும் அப்பாற்பட்டதாக இருத்தல் வேண்டும்.

3. அந்தக் கிராமப் பஞ்சாயத்து வரிசைக் கிரமமான தேர்தல்களை நடத்தியிருக்க வேண்டும்.

4. வழங்கப்பட்ட அதிகாரங்களைக் கொண்டு முடிந்த அளவு பெரும் பகுதியான வசதிகளைப் பெருக்கியதாக இருத்தல் வேண்டும்.

இந்தப் போட்டிக்குரிய பரிசுத் தொகை, இந்திய அரசின் 'இந்திய மையக்' கணக்கிலிருந்து வழங்கப்படும்.

மாநில அளவில் பரிசுக்குரிய கிராமத்தைத் தெரிவு செய்வதற்கு இந்திய அரசு தேர்வுக்குழு ஒன்றைக் குறிப்பிட்டுள்ளது. அந்தத் தேர்வுக் குழு பஞ்சாயத்து அரசுத்துறைச் செயலரைத் தலைவராகவும், பஞ்சாயத்துத்துறை இயக்குநரையும் சட்டமன்ற உறுப்பினர்கள் இருவரை உறுப்பினராகவுங் கொண்ட அமைப்பாக இருக்கும்.

இந்தத் திட்டத்தின் அடிப்படையில், மாநில அளவில் அமையுங்குழு மாநில அளவில் சிறந்த மூன்று பஞ்சாயத்துக்களைத் தேர்ந்தெடுக்க, குழு ஒன்றைத் தமிழக அரசு அமைத்துள்ளது.

மாவட்ட ஆட்சித் தலைவர்கள், மாவட்டத்தின் கண்ணேயுள்ள மூன்று சிறந்த கிராமங்களை, இந்திய அரசு குறிப்பிட்டுள்ள விதி முறைகளின் அடிப்படையில் தெரிவு செய்து கிராமங்களின் பெயர்களையும் அவற்றைப் பற்றிய குறிப்புக்களையும் கிராமவளர்ச்

சித்துறை இயக்குநருக்கு அனுப்பி வைப்பார்.

கிராம வளர்ச்சித்துறை இயக்குநர், இவ்வகைக் குறிப்புக்களை மாவட்ட ஆட்சித் தலைவர்களிடமிருந்து பெற்று, மேற் குறிப்பிட்ட குழு முடிவுக் கெனப் படைப்பார்.

ஆய்வுக்குழுவினர் இக்குறிப்புக்களின் அடிப்படையில் ஆராய்ந்து, சிறந்த பஞ்சாயத்துக்களைத் தெரிவு செய்வர்.

விதிகளுக்குட்பட்டு, தஞ்சை மாவட்டத்தில் சிறந்த பஞ்சாயத்து எனத் தேர்ந்தெடுக்கப்பட்ட கிராமப் பஞ்சாயத்து பெருந்தரைக்குடிஎன்பதாகும். இது கொரடாச்சேரி ஒன்றியத்திலுள்ளது. 1924-ஆம் ஆண்டில் துவங்கப்பட்ட இந்தப் பஞ்சாயத்து 48 ஆண்டு 5 மாதங்களின் நிறைவைக் காணுகின்றது. இந்தப் பஞ்சாயத்தின் மொத்தப் பரப்பு 1994 ஏக்கர் 80செண்ட் ஆகும். இது, பெருந்தரைக்குடி, குளிக்கரை என்ற இரண்டு ரெவின்யூ கிராமங்களைத் தன்னகத்தே கொண்டுள்ளது. 1971-ஆம் ஆண்டுக் கணிப்பின்படி இதன் மக்கள் தொகை 4182. இந்தக் கிராமப் பஞ்சாயத்திற்குரிய அலுவல் காலம் ஐந்து ஆண்டுகள்.



இந்தப் பஞ்சாயத்திற்கான முதல் தேர்தல் 1924-ஆம் ஆண்டில் நிகழ்வுற்றது. அண்மையில் நடைபெற்ற தேர்தல் 1970 ஜூலை 28-ல் நடந்ததாகும். பஞ்சாயத்துச் சட்டப்படிப் பதினான்கு தேர்தல்கள் நடந்திருக்க வேண்டும். இரண்டாம் உலகப் பெரும் போர்க் காலத்தில் (1938-1948) நடைபெறாமற் போய்விட்ட தேர்தல்கள் தவிர மொத்தம் 10 தேர்தல்கள் நடைபெற்றுள்ளன. இதுகாறும், நடைபெற்ற தேர்தல் முறைகளில் எந்தவிதமான முறைகேடும்—குறைபாடும் நிகழ்ந்ததில்லை. கடந்த ஆண்டான 1972-73-ல் பஞ்சாயத்து முறைப்படி நடக்க வேண்டிய கூட்டங்கள் அனைத்தும் முறையாக நடைபெற்றுள்ளன. 1958-ஆம் ஆண்டின் பஞ்சாயத்து விதிகளின்படி 1972-73-ஆம் ஆண்டில் மொத்தம் 12 கூட்டங்கள் நடத்தப்பட்டுள்ளன. இதில் 1.4.72—31.3.73 கால கட்டத்தில்,

இயல்பான கூட்டங்கள்	10
விரைவான கூட்டங்கள்	5
சிறப்புக் கூட்டம்	1
	16

ஆக மொத்தம் 16 கூட்டங்கள் நடைபெற்றுள்ளன.

வருவாய் முறைகள்

இந்தப் பஞ்சாயத்தில் வீட்டு வரி, தொழில் வரி, வாகன வரி ஆகியவற்றின் மூலம் வருவாய் திரட்டப்படுகின்றது. இதனடிப்படையில் கடந்த 1971-72 ஆம் ஆண்டில் மொத்த வரி வசூல் ரூ. 5127.31 ஆகும். 1972-73-ல் மொத்த வரி வசூல் ரூ. 5114.59 ஆகும்.

இந்தப் பஞ்சாயத்தினால் ஊராட்சி ஒன்றியத்திற்கு 1971-72, 1972-73 ஆண்டு வரை கட்டப்பட்ட மொத்தத் தொகை ரூ. 1588/- ஆகும். மேலும், அரசுக்கு இந்தப் பஞ்சாயத்து மூலம் வரியாகவும் மற்றும் இதர தொகையாகவும் 1971-72, 1972-73 ஆண்டு வரை செலுத்திய மொத்தத் தொகை ரூ. 24830.89 ஆகும்.

லைசென்ஸ் கட்டணம், மர வரி, புறம்போக்கு நில ஆக்கிரமிப்புக் கட்டணம், குள (மீன்) வாடகைகள், மற்றும் சில வருவாய்கள் மூலம் 1971-72, 1972-73 ஆகிய வருடங்களில் இப்பஞ்சாயத்திற்குக்கிடைத்த வருமானம் ரூ. 3545.16ஆகும்.

தார்பாலின், தெளிப்பான், எண்ணெய்இயந்திரங்கள்இவற்றின் மூலமாக 1972-73க்கு முன்பு, ஆண்டு வருமானம் ரூ. 139.32. 1972-73-ஆம் ஆண்டில் ரூ. 510.50. இது 1972-73-ஆம் ஆண்டின் வருமானத்துடன் ஒப்பிடும் பொழுது 250 சதவீதம் அதிகமாகும்.

1972-73-ஆம் ஆண்டு வரை இவ்வூராட்சி மன்றத்தினால் மேற்கொள்ளப்பட்ட முன்னேற்ற வேலைகள் பற்றிய விவரம் வருமாறு:—

குடி தண்ணீருக்காக ஒரு மேல்நிலை நீர்த் தொட்டியும், இரண்டு தானியங்கி அழுத்த நீர்த் தொட்டிகளும், 15 பொதுக் கிணறுகளும், 37 கை பம்புகளும், 45 தண்ணீர் பைப்களும் போடப்பட்டுள்ளன.

மேலும், இவ்வூராட்சியில் 19 கி.மீ. இணைப்புச் சாலையும், 4.2 கி.மீ. தார் சாலையும், 1 கி.மீ. சல்லி சாலையும், 14 கி.மீ மண் சாலையும் போடப்பட்டுள்ளன.

138 தெரு விளக்குகள் போடப்பட்டுள்ளன. அதில் குழல் விளக்குகள் 58 ஆகும்.

4 படுக்கைகளுடன் கூடிய அரசு மருத்துவமனை ஒன்று நன்முறையில் இயங்கி வருகிறது.

ஓர் உயர்நிலை ஆரம்பப் பள்ளியும் உள்ளது. மேலும், இப்பஞ்சாயத்தில் 5 வானொலி நிலையங்களும் வேளாண்மைத் துறைப் பிரிவு ஒன்றும், கிளை நூல் நிலையம் ஒன்றும், மாதர் சங்கம் ஒன்றும், கூட்டுறவு வங்கி ஒன்றும், பால்வாடி ஒன்றும், கோழிப்பண்ணை ஒன்றும் கால்நடை மையம் ஒன்றும், கூட்டுறவு வீட்டு வசதிக் கழகம் ஒன்றும், கூட்டுறவுப் பால் பண்ணைக் கழகம் ஒன்றும் செயல்பட்டு வருகின்றன.

இப் பஞ்சாயத்திற்கென வாங்கப்பட்ட தனிச் சொந்தக் கட்டடத்தில் பஞ்சாயத்து மன்ற அலுவலகம் இயங்கி வருகிறது.



வேளாண்மை

வேளாண்மை மேம்பாட்டிற்காக இப்பஞ்சாயத்தினுல் மேற்கொள்ளப்பட்ட திட்டங்கள்:

குடி மராமத்து வேலைகள் ஆண்டுதோறும் இப்பஞ்சாயத்தினுல் மேற்கொள்ளப்படுகின்றன. இவையன்றியும் சி.ஓ. 33 ரக நெல் பயிரிடுவது பற்றி ஒரு ஏக்கர் பரப்பில் செயல் விளக்கம் நடத்திக் காட்டப்படுகிறது. பருப்பு வகைகள் பற்றிய செயல் விளக்கமும் நடத்தப்படுகின்றன. இவை தவிர 16 ஆழ்குழாய்க் கிணறுகள் செயல்படுகின்றன. விவசாயிகளுக்கு வேண்டிய வசதிகளைச் செய்து தர ஒரு துணை விவசாயக்கிடங்கு செயல்படுகிறது. இவை தவிர, நிலம் பண்படுத்தும் இயந்திரம் ஒன்றும், தார்பாலின் நான்கும், தெளிப்பான்கள் மூன்றும், எண்ணெய்இயந்திரம் ஒன்றும், பயன்படுத்தப்பட்டு வருகின்றன. இந்தச் சாதனங்களெல்லாம் விவசாயிகளுக்குக் குறைந்த வாடகையில் கொடுத்து உதவப்படுகின்றன.

சமுதாய வளர்ச்சி

மேற்கூறியவை தவிர 1972-73-ஆம் ஆண்டில் பல சமுதாய வளர்ச்சித் திட்டங்களுக்கு வழங்கிய தொகை வருமாறு:

அரசினர் உயர்நிலைப்பள்ளி தொடங்குவதற்கு பொது மக்கள் சார்பாக ரூ. 10,000/- கொடுக்கப்பட்டுள்ளது. அதில் வேலை செய்த தொழிலாளர்களுக்கு ஊதியம் முழுமையும் இவ்வூராட்சி மன்றத்தினுல் வழங்கப்பட்டுள்ளது. மேற்குறிப்பிட்ட தொகை வழங்குவதற்கு இந்த ஊராட்சியிலுள்ள 25 சதவீதம் குடும்பத்தினர் முன்வந்து உதவியுள்ளனர். இவ்வூராட்சியின் சிறப்பான பணிகள் என்ற வகையில் குறிப்பிட வேண்டுமாயின், அரிசனக் குடியிருப்புகள் முழுமைக்கும் தெரு விளக்குகள் அமைத்துக் கொடுத்ததும், இவ்வூராட்சியைச் சுற்றியுள்ள எல்லா வீடுகளுக்கும் பாதுகாக்கப்பட்ட குடிநீர் வழங்கியதும், எல்லாச் சிற்றூர்களுக்கும் இணைப்புச் சாலைகள் அமைத்துக் கொடுத்ததும், 1972 ஜூன் திங்களில் அரசினர் மருத்துவமனை நிறுவப்பட்டதும், 1973 ஜூன் திங்களில் அரசினர் உயர்நிலைப் பள்ளி ஒன்று துவக்கியதுமாகிய இத்தனை சிறப்புப் பணிகளும் இவற்றில் அடங்கும்.

நலம் நாடுகின்ற ஓர் நாடு, தன்னிறைவைக் காண வேண்டுமாயின் அதன் கண்ணேயுள்ள கிராமங்கள் தன்னிறைவையுடைத்தாயிருத்தல் வேண்டும் என்பது நமது நாட்டு நலனில் அக்கறை கொண்ட பெரியோர் பலரின் கருத்தாகும். அதனடிப்படையில் தனித்தியங்கும் கிராமங்கள் செம்மையுடனும் சிறப்புடனும் இயங்குவதற்கு ஊக்கம் நல்கிடும் வகையில் அமைக்கப்பட்டதுதான் இது போன்ற பரிசுத் திட்டங்கள்.

அரசாங்கம் தன்னுலியன்ற உதவிகளைச் செய்தபோதும், அதை முறையே பயன்படுத்திக் கொள்ளும் கிராமப் பஞ்சாயத்துக்களில் அந்த வரிசையில் கிடைத்த உதவியை விழுமிய வகையால் பயன்படுத்திய தஞ்சை மாவட்டம் கொரடாச்சேரி ஒன்றியத்திற்கு நமது பாராட்டுக்களை உரித்தாக்குவோம்.



அய்யங்கார்குளம் கிராமத்தில் குடிநீர் வசதி.

மக்களின் அன்றாட அடிப்படைத் தேவையான குடிநீர்ப் பிரச்சினைக்குத் தீர்வு காண்பதில், தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியம் ஆற்றிவரும் மகத்தான பணிகளுக்கு இன்னொரு சிறந்த சான்று இதோ!

2,000 பேர்கள் வாழும் அய்யங்கார்குளம் ஊராட்சி, காஞ்சி நகரை அடுத்துள்ளது. இங்குள்ள மக்களின் குடிநீர்ப்பிரச்சினையைத் தீர்க்க ரூ. 45,000 செலவில் ஒரு திட்டத்தினை உருவாக்கி நிறைவேற்றியுள்ளது.

அய்யங்கார்குளத்திலுள்ள சுற்றுலா மாளிகைக்குப் பின்புறம் ஒரு மேடான பகுதி. இங்கு 10,000 லிட்டர் கொள்ளளவுள்ள எஃகுத்தொட்டி ஒன்றினைக் குடிநீர் வடிகால் வாரியம் அமைத்துள்ளது. பாலாற்றுக் கரையிலிருந்து இத்தொட்டிக்கு அரை மைல் நீளமுள்ள குழாய் வழியாக நீர் கொணரப்படுகிறது. பின்னர் இங்கு அய்யங்கார்குள மக்களுக்குக் குழாய்கள் மூலமாக குடிநீர் வழங்கப்படுகிறது.

இத்திட்டத்தினை 13-4-'75 அன்று மாண்புமிகு சமூகநலத் துறை அமைச்சர் சி. வி. எம். அண்ணாமலை அவர்கள் தொடங்கி வைத்தார்கள்.

ஒப்பரிய ஓட்டப்பிடாரம்

இரா. நடேசன்.

திருநெல்வேலி மாவட்டத்தில் உள்ள ஓட்டப்பிடாரம் பல வரலாற்றுச் சிறப்புகள் உடைய ஊராகும். இந்நகர் சிறப்புப் பற்றி வ.உ. சிதம்பரனார் தமது சுயசரிதையில்

வேண்டிய தெல்லாம்
  வேண்டியாங் களிக்கும்
பாண்டிய நாட்டிற்
  பண்டை நாளினில்
அளகன் விருப்புடன் அமர்ந்தர
  சாண்டதென்
அளகையம் பதிஎனும் ஆதிப்
  பெயரினை
ஏட்டினிற் கொண்டதும் இந்த
  நாளினில்
ஓட்டப்பிடாரம் என்றுரைக்கப்
  பெற்றதும்
அருந்திறன் நாட்டி ஆங்கில
  ரோடமர்
பொருந்திய கட்ட
  பொம்மு நாயகன்
பாஞ்சால நகர்மதில் பக்கத்
  துள்ளதும்
உலக நாயகி உவந்து
  வடக்கும் சிலசிறு தேவர்கள்
  சிறந்து கிழக்கும்
குணமே புரியும் கணேசன்
  தெற்கும்
திருமால் உடனே சிவபெரு
  மான் மேற்கும்
வானொடு நின்று நலனுறக்
  காப்பதும்
நுதலிய பொருளெலாம்
  இதமுற அளிப்பதும்
பண்பினை இயற்றிப் பகையினை
  ஒழித்து
நண்பினை ஆக்கும் நல்லோர்
  நிறைந்ததும்
திறத்தினை வளர்த்துச்
  செல்வம் ஈட்டி
அறத்தினைப் புரியும்
  அழகியநகரிலே—

என்று இவ்வூர் வரலாறும் சிறப்பும் தோன்றப் பாடியுள்ளார்.

இவ்வூரிலுள்ள உலகநாயகி அம்மன் மிகவும் புகழ் பெற்ற தெய்வமாகும். அடங்காத பேய்களை ஓட்டும் வல்லமை படைத்த பிடாரியாவாள். அதனால் ஓட்டும்பிடாரி என்பது ஓட்டப்பிடாரம் ஆனது என்பர். இந்த உலகம்மை தெய்வம் தான் வசைகவி ஆண்டான் கவிராயருக்கு நேரில் தோன்றி அவரது நாவில் வேப்பங் குச்சியால் எழுதினாள் என்றும் அதனால் அவர் நல்லனவென நினைத்துப்பாடும் கவிகள் இறுதியில் வசைகவியாக மாறி தீமை விளைவித்து வந்தனவாம். அவர் பிறந்து வளர்ந்ததும் அருள் பெற்றதும் இவ்வூரிலேதான்.

நெல்லை மாவட்டத்தில் மாவட்ட ஆட்சியாளர் அலுவலகம் ஏற்பட்டதே இந்தப் பகுதி மக்களின் அடக்க முடியாத தொல்லைகளை அடக்குவதற்கே ஆகும். பாஞ்சாலங் குறிச்சி பாளையக்காரர் ஜெகவீர கட்டபொம்மனை அடக்குவதற்காக வரவழைத்த படைதான் பின்னர் பாளையங்கோட்டையில் நிலை நிறுத்தப்பட்டது. 1744-ல் திருநெல்வேலி மாவட்டம் அமைக்கப்பட்டது. திருநெல்வேலி மாவட்டம் எனத் தனியாக அமைக்கப்பட்டாலும் வரி வசூல் வேலைகளையும் ஆட்சிப் பொறுப்புகளையும் கவனிக்கும் ஆட்சியாளர் இராமநாதபுரத்தில் தான் இருந்தார். அதனால்தான் பாஞ்சை மன்னன் வீரபாண்டிய கட்டபொம்மன் மாவட்ட ஆட்சியாளரைப் பேட்டி காண இராமநாதபுரம் சென்றதும் அங்கு மாவட்ட ஆட்சியாளர் இருந்த இராமலிங்கவிலாஸ் மாளிகையில் கலகம் நேர்ந்ததும் நினைவு கூரத்தக்கது.

இராமநாதபுரத்தில் மாவட்ட ஆட்சியாளர் இருந்து கொண்டு திருநெல்வேலி மாவட்டத்தை ஆண்டுவந்தார். கட்டபொம்மன் கிழக்கிந்திய கம்பெனியின் ஆட்சியை இந்த மாவட்டத்தில் வேரூன்ற விடாமல் செய்துவந்தார். தொல்லைகள் பொறுக்க முடியாமல் கிழக்கிந்தியப் படைகள் 1799-ல் பாஞ்சைப்பதி மீது முற்றுகை இட்டது. பின்னர் வீரபாண்டிய கட்டபொம்மனைப் பிடித்துக் கயத்தாற்றில் தூக்கில் போட்டுக் கொன்றனர். அதன்பிறகு கிளர்ச்சி வலுத்தது. இந்தப்பகுதி மக்கள் கட்டபொம்மனை தூக்கில் போட்டுக் கொன்றாலும் ஆயிரக்கணக்கான கட்டபொம்மன் தோன்றிவிட்டோம் என ஊமைத்துரை தலைமையில் பாஞ்சாலங்குறிச்சிக் கோட்டையை மீண்டும் கட்டினார்கள். அதாவது ஆறு நாட்களில் மிகப் பெரும் கோட்டையைக் கட்டி முடித்தார்கள். 1801-ல் மீண்டும் ஆங்கிலேயர்கள்போர் தொடுத்துப் பாஞ்சாலங் குறிச்சிக் கோட்டையை அழித்தனர். கோட்டை அழிந்தாலும் இப்பகுதி மக்கள் கொதித்து எழுந்து கொண்டே இருந்தனர். பின்னர் இராமநாதபுரத்திலிருந்து இந்தப் பகுதியை ஆள்வது மிகவும் கடினம் என உணர்ந்த கிழக்கிந்தியக் கம்பெனியார் திருநெல்வேலியில் 1801-ல் மாவட்ட ஆட்சியாளர் அலுவலகம் ஏற்படுத்தினர். நெல்லை மாவட்ட ஆட்சியாளராக லூஷிங்டன் துரை என்பவர் நியமிக்கப்பட்டார். அப்பொழுதுதான்ஓட்டப்பிடாரம் வட்டம் ஏற்படுத்தப்பட்டது. அதில் இன்றைய கோவில்பட்டி, விளாத்திகுளம் முதலிய பகுதிகள் அடங்கியிருந்தன.

ஓட்டப்பிடாரத்தில் வட்டார அலுவலகம், சப்-மாஜிஸ்ரேட் அலுவலகம், காவல் நிலையம், சப்-ஜெயில் முதலானவை ஏற்படுத்தப்பட்டுள்ளன. திருநெல்வேலி மாவட்டத்தில் உள்ள மற்ற வட்டங்களில் ஒவ்வொரு சப்-மாஜிஸ்ரேட் கோர்ட் அமைத்தவர்கள் ஓட்டப்பிடாரம் வட்டத்தில் மட்டும் ஓட்டப்பிடாரம், விளாத்திகுளம், கயத்தாறு, எட்டயபுரம், தூத்துக்குடி ஆகிய ஊர்களில் காவல்நிலைய சிறை, சப்-மாஜிஸ்ரேட் கோர்ட் அமைத்துத் தங்களது ஆட்சியை நடத்திவந்தார்கள். இதே ஓட்டப்பிடாரம் வட்டார அலுவலகத்தில், தான் கப்பலோட்டிய தமிழன் வ.உ. சிதம்பரனார் இளமைக் காலத்தில் எழுத்தராக வேலை பார்த்திருந்தார்.

நெல்லை மாவட்டத்தில் இருப்புப் பாதைகள் போடப்படுகின்றன. தூத்துக்குடி-மதுரை இருப்புப் பாதை 1-1-1875-ல் துவக்கப்பட்டது. கோவில்பட்டியில் புகைவண்டி நிலையம் அமைந்திருந்தது. அதன் பின்னர் கோவில்பட்டி பெரிய ஊராகவளர்ச்சிபெற்று விட்டது. ஒட்டப்பிடாரம் வட்டத்தை மாற்றி 1920-ல் கோவில்பட்டி வட்டம் என மாற்றம் செய்துவிட்டனர். ஒட்டப்பிடாரத்திலுள்ள வட்டார அலுவலகம், சப்-மாஜிஸ்ரேட் அலுவலகம் எல்லாம் கோவில் பட்டிக்கு மாற்றம் செய்யப்பட்டன. அன்று வட்டார அலுவலகமாக இருந்த அதே கட்டடத்தில்தான் இன்று வ.உ. சிதம்பரனார் பெயரில் ஓர் உயர்நிலைப்பள்ளி நடந்து கொண்டிருக்கிறது.

வட்டார அலுவலகம் கோவில்பட்டிக்கு மாற்றம்ஆன உடனே ஒட்டப்பிடாரம் பொலிவு இழக்க ஆரம்பித்து விட்டது — ஆங்கிலேயர்கள் வ.உ. சிதம்பரனார் பெயரில் மட்டும் கோபம் கொள்ளவில்லை. அவர் பிறந்த ஊரின் மீதும் கோபம் அடைந்தனர். அந்த ஊரையே இருளடையச் செய்து விட்டனர்.

வ.உ. சிதம்பரனார் சிறையில் செக்கிழுக்கிறார் என்ற துயரச் செய்தி கேட்டு இப்பகுதியிலுள்ள மணியாச்சிப் புகைவண்டி நிலையத்தில் வீரன் வாஞ்சி நாதன் என்பவர் தூத்துக்குடி மாவட்ட ஆட்சியாளர் ஆஷ்துரையைத் துப்பாக்கியால் சுட்டுக்கொன்று விட்டுத்தானும் துப்பாக்கியால் சூட்டு, தற்கொலை செய்து கொண்டார். வாஞ்சிநாதன் நினைவாக ஒட்டப்பிடாரம் ஊராட்சி ஒன்றியம் மிகப் பெரியதாக இருப்பதால் அதை இரண்டாகப் பிரித்து வீர வாஞ்சி ஊராட்சி ஒன்றியம் ஏற்படுத்தும் திட்டம் அரசின் ஆய்வில் உள்ளது. தியாகிகளையும் வீரர்களையும் தமிழக அரசு சீரும் சிறப்புடனும் காத்து வருகிறது. ஒட்டப்பிடாரம் வட்டம், தியாகிகள் நிறைந்த பூமியாகும். இந்தியா சுதந்தரம் பெற்ற பின்னர் நமது புகழ் மீண்டும் வெளி வரத் துவங்கியது.

14-4-1961-ல் 58 ஊராட்சி மன்றங்களைச் சேர்த்து ஒட்டப்பிடாரம் ஒன்றியம் அமைக்கப்பட்டது. வ.உ. சிதம்பரனார் பிறந்த வீட்டை விலைக்கு வாங்கி ரூபாய் 65,000/- செலவில் 21-6-62-ல் வ. உ. சிதம்பரனார் நினைவு மண்டபம் கட்டியிருக்கிறார்கள். அதில் தற்போது நூலக ஆணைக்குழுவினர் பொது நூலகம் ஒன்றினை இயக்கி வருகிறார்கள்.

பாஞ்சாலங்குறிச்சி வீர பாண்டிய கட்டபொம்மனின் தானாபதி சிவசுப்ரமணிய பிள்ளையின் பரம்பரையினர் இன்றும் ஒட்டப்பிடாரம் கிராமத்தில் வசித்து வருகின்றனர். வ.உ. சிதம்பரனார் நினைவாக இவ்வூரில் வ.உ.சி. உயர்நிலைப் பள்ளி ஒன்று ஏற்படுத்தப்பட்டுள்ளது. 1962-ல் அரிசன மாணவர்களுக்கு 'அரசு மாணவர் இல்லம்' ஒன்று ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

1-8-1968ல் ஒட்டப்பிடாரம் கிராமத்தில் துணை வட்டார அலுவலகம் துவக்கப்பட்டது. வ.உ.சி. நூற்றாண்டு விழாவை முன்னிட்டு நடந்த விழாவில் மாண்புமிகு முதல்வர் கலைஞர் அவர்கள் வ. உ. சிதம்பரனாரின் உருவச் சிலையையும், வ. உ. சி. நூற்றாண்டு நினைவு மண்டபத்தையும் திறந்துள்ளார்கள்.

பாஞ்சாலங்குறிச்சி நினைவுக் கோட்டை கால்கோள்விழாவில் மாண்புமிகு முதல்வர் கலைஞர் அவர்கள், இப்பகுதி மக்களின் நீண்டநாள் கோரிக்கையையும் இழந்த புகழையும் மீண்டும் அடையத் தக்க விதத்தில் ஒட்டப்பிடாரம் வட்டாரம் ஏற்படுத்தப்படும் என அறிவித்தார்கள். கட்டபொம்மன் நினைவாக ஒரு கோட்டையும் கட்டப்படும் என்று அறிவித்தார்கள். அதன்படியே கட்டபொம்மன் நினைவுக் கோட்டை ஒன்றும் கட்டி அதன் திறப்புவிழா 18-8-74-ல் அரசு விழாவாக மிகச்சிறப்பாக கொண்டாடப்பட்டது. கட்டபொம்மனுக்கு நினைவு மண்டபம் கட்டியதோடு கட்டபொம்மனுடன் தோளோடு தோள் நின்று வீரமரணம் எய்திய வீரர்களுக்கும் நினைவுச் சின்னமாகக் கட்டபொம்மன் நுழைவு வாயில், வீரன் 'ஊமைத்துரை தோரண வாயில்' 'வீரன் தானாபதிப் பிள்ளை தோரண வாயில்', 'வீர சக்கம்மாள் தோரண வாயில்' என அலங்கார நுழைவு வாயில்கள் கட்டப்பட்டுள்ளன.

கிராமக் கணக்குகளை முறைப்படுத்த...

நிருவாகச் சீர்திருத்த ஆணைக் குழுவின் பரிந்துரையை அரசு ஏற்று, வட்டவாரியாக, கிராமக் கணக்குகளை முறைப்படுத்தவும் ஒவ்வொரு உடைமைக்கும் சரியான தொகையைத் தெரிவிக்கும் முறையை ஏற்படுத்தவும் பிராட்மா இயந்திரங்களைப் பொருத்துவது என்று 1974 சூலை மாதத்தில் ஆணை பிறப்பித்துள்ளது. தஞ்சை மாவட்டத்தின் எல்லா வட்டங்களிலும், செங்கற்பட்டு, தென்னார்க்காடு, திருச்சிராப்பள்ளி, கோவை, மதுரை ஆகிய மாவட்டங்களில் தேர்ந்தெடுக்கப்பட்ட சில வட்டங்களிலும் ஆக மொத்தம் 25 வட்டங்களில் இம்முறை தொடங்கி வைக்கப்பட்டது. பிராட்மா இயந்திரங்கள் 25 வட்டங்களிலும் அமைக்கப்பட்டுவிட்டன. தக்க நமூனாக்கள் வரையறுக்கப்பட்டுள்ளன. கிராமப் பேரேடு, வருடாந்தர கேட்பு வசூல், நிலுவை நமூனாக்கள் நடப்புப் பசலி ஆண்டில் பிராட்மா இயந்திரங்களில் அச்சடிக்கப்பட்டுக் கேட்புத் தொகை அறிவிப்புகள் கிராம மக்களுக்கு வழங்கப்படும். பட்டாதாரரின் நில அளவு விவரங்கள், செலுத்த வேண்டிய தொகை முதலிய விவரங்கள், கேட்புத் தொகை அறிவிப்பில் காணலாம். அடுத்த பசலி ஆண்டிலிருந்து இவ்வட்டங்களிலுள்ள கிராம அடங்கல் பதிவேடுகள் பிராட்மா இயந்திரங்களால் முறைப்படுத்தப் படும்.

'பிராட்மா' இயந்திரம்

மறைந்த புகழை வெளிக் கொண்டு வந்த முதல்வர் கலைஞர் அவர்களின் நினைவாக குறுக்குச் சாலையில் ஓர் அலங்கார நுழைவு வாயில் இப்பகுதி மக்களால் ஏற்படுத்தப்பட்டிருக்கிறது. 18-8-74-ம் தேதியில் கட்டபொம்மன் கோட்டை திறப்பு விழாவில் முதல்வர் கலைஞர் அவர்கள் பாஞ்சாலங்குறிச்சியைப் பொலிவும் வளமும் நிறைந்த இடமாக மாற்ற அதிகாரிகளும் பொது மக்களும் பூரண ஒத்துழைப்புக் கொடுக்க வேண்டுமென்றும் எவ்வளவு பொருள் செலவானாலும் அரசாங்கத்திலிருந்து செலவு செய்வதாய் மக்கள் மத்தியில் உறுதி கூறியுள்ளார்கள். பாஞ்சாலங்குறிச்சியில் ஒரு கூட்டுறவு நூற்பு ஆலை கட்டல் அரசின் பரிசீலனையில் உள்ளது. இதனால் ஏறக்குறைய 1,000 பேர்களுக்கு வேலை கிடைக்க வாய்ப்பு உள்ளது. வீரபாண்டிய கட்டபொம்மன் நேரடி வாரிசுதார் 5 பேர்களுக்கு மாத ஒய்வு ஊதியமும் அரசாங்கத்திலிருந்து வழங்கியுள்ளார்கள். மேலும் வீரபாண்டிய கட்டபொம்மன் வாரிசுதாரர்களுக்கு 200 குடும்பங்களுக்கு 600 ஏக்கர் புஞ்சை நிலமும் வீடு கட்ட 15 ஏக்கர் நிலமும் பட்டா செய்து கொடுக்கப் பட்டிருக்கிறது. இன்னும் பாஞ்சாலங்குறிச்சிக் கோட்டையில் ஒரு பொருட்காட்சி நிலையம் ரூ. 40,000 செலவிலும் ஒரு சிற்றுண்டி விடுதியும் கட்ட முடிவு செய்துள்ளார்கள்.

திருநெல்வேலி மாவட்டம், கன்னியாகுமரி மாவட்டங்களில் ஓடிக் கொண்டிருந்த தமிழக அரசுப் போக்குவரத்துப் பேருந்துகளை ஒன்றாக இணைத்துக் கட்டபொம்மன் போக்குவரத்துக் கழகம் என ஏற்படுத்தியிருக்கிறார்கள். மேலும் பாஞ்சாலங்குறிச்சி - பாளையங்கோட்டை என ஒரு பேருந்தும் விடப்பட்டிருக்கிறது.

வீரபாண்டிய கட்டபொம்மனின் மெய்க் காப்பாளரும், பாஞ்சைப் போரில் வீர மரணம் அடைந்தவருமாகிய வீரன் சுந்தரலிங்கம் நினைவாக ஒரு நுழைவு வாயிலும் கட்ட முடிவு செய்யப்பட்டுள்ளது. ஆகவே ஓட்டப்பிடாரமும் அதன் பகுதிகளும் வீரம் செறிந்தவை. வரலாற்றுச் சிறப்பு மிக்கவை. நெல்லை மாவட்டச் சரித்திரம் எழுதப் புகுந்தால் அதில் ஓட்டப்பிடாரம்தான் உயிரோட்டமான இடத்தை வகிக்கும். இத்துணைச் சிறப்பு மிக்க ஊரில், இழந்த புகழை மீண்டும் அடைவதைப்போன்று இன்று ஓட்டப்பிடாரம் வட்டம் என 20—3—'75—ல் உருவாகியுள்ளது. 1920-ல் மறைக்கப்பட்ட ஓட்டப்பிடாரம் வட்டம் 1975-ல் மீண்டும் புத்துயிர் பெறுகிறது.

புதிதாக உருவாகியுள்ள ஓட்டப்பிடாரம் வட்டம் ஓட்டப்பிடாரம், எப்போதும் வென்றான், மணியாச்சி ஆகிய மூன்று பகுதிகளைக் கொண்டது.

மறைந்த புகழை வெளிக் கொண்டு வந்த பெருமையும், துணை வட்டாரத்தை வட்டாரமாக்கிய பெருமையும் மாண்பு மிகு முதல்வர் கலைஞர் அவர்களுக்கும் மற்றும் மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்களுக்கும் உரியதாகும்.

சேலம் மத்திய கூட்டுறவு வங்கி (வரை.) எண் 151

தபால் பை எண் : 171 — **தொலைபேசி எண் : 240**

சேலம்-1.

கிளைகள் : நாமக்கல், திருச்செங்கோடு, ஆத்தூர், மோகனூர், இராசிபுரம், ஓமலூர், தாரமங்கலம், வேலூர், சங்ககிரி, சேந்தமங்கலம், கொங்கணபுரம், சிறப்பு அங்காடி, சேலம் கடை வீதி, எடப்பாடி, பி. கொமாரபாளையம், பள்ளிபாளையம், தம்மம்பட்டி, ஜலகண்டபுரம், ஆட்டையாம்பட்டி, செவ்வாய்பேட்டை, சேலம்-2, பெத்தநாயக்கன்பாளையம், மேட்டூர், டேம், நாமகிரிபேட்டை, கொண்டலாம்பட்டி, மல்லூர், தலைவாசல், எருமைப்பட்டி, வாழப்பாடி, ஏற்காடு, எளம்பிள்ளை, மகுடஞ்சாவடி.

சொந்த நிதி ரூ. 327 லட்சம். — **நடைமுறை மூலதனம் ரூ. 1,711 லட்சம்.**

வட்டி விகித அட்டவணை 16-1-75 தேதி முதல்.

கால் டெபாசிட்டுகள் :	ரூ. 5,000-க்கும் அதற்கு மேலும் மேற்பட்ட தொகைக்கும் (முன் அறிவிப்பு இல்லாமல்)	$3\frac{1}{4}$%
	ரூ. 10,000-க்கும் அதற்கு மேற்பட்ட தொகைக்கும் (3 நாள் முன் அறிவிப்பின் பேரில்)	$3\frac{1}{2}$%
சீசன் டெபாசிட்டுகள் :	ரூ. 1,000-க்கும் அதற்கு மேலும் 15 நாட்களுக்கும் அதற்கு மேல் 45 நாட்களுக்கும்	3 %
	46 நாட்களுக்கும் அதற்கு மேல் 90 நாட்களுக்கும்	$3\frac{1}{2}$%

பிக்செட் டெபாசிட்டுகள் :

1. 61 மாதங்களுக்கு மேல்...... $10\frac{1}{2}$%
2. 36 முதல் 61 மாதங்களுக்குள் $9\frac{1}{2}$%
3. 12 முதல் 36 மாதங்களுக்குள் $8\frac{1}{2}$%
4. 9 முதல் 12 மாதங்களுக்குள் $7\frac{1}{2}$%
5. 6 முதல் 9 மாதங்களுக்குள் $6\frac{1}{2}$%
6. 91 நாட்கள் முதல் 6 மாதங்களுக்குள் 6%

நடப்புக் கணக்கு $\frac{1}{2}$% — **சேமிப்புக் கணக்கு $5\frac{1}{2}$%**

*ரூ. 5,000/- மேற்கொண்டு பிக்செட் டெபாசிட் போடுபவர்களுக்கு இலவசப் பாதுகாப்பு பெட்டக வசதி உண்டு. *பிக்செட் டெபாசிட்டுகளின்மீது மாதாந்திர வட்டி உண்டு. *ரெக்கரிங், பிராவிடெண்ட் டெபாசிட்டுகளும் ஏற்றுக்கொள்ளப்படுகின்றன. *இதர விவரங்களுக்கு எமது தலைமை மற்றும் 31 கிளைகளிலும் தொடர்பு கொள்க.

எம். அய்யனார்,
துணைப் பதிவாளர்
நிர்வாக அதிகாரி.

எஸ். ஆறுமுகம் எம்.எல்.ஏ,
தலைவர்.

கே. இராசப்பன், எம்.ஏ.,
சி.ஏ.ஐ.ஐ.பி., சி.சி.,
உதவிச் செயலாளர்.

அனைத்திந்திய அளவில் முதற் பரிசு பெற்ற ஊர்நல ஊழியர்

அனைத்திந்திய அளவில் 1973-74-ஆம் ஆண்டுக்கென, சிறந்த கிராம நல ஊழியராக திரு. ஏ. பி. சுப்பிரமணியன் தேர்ந்தெடுக்கப்பட்டு, மத்திய வேளாண்மை, பாசன வசதி அமைச்சரான மாண்புமிகு திரு ஜெகஜீவன்ராம் அவர்களால், ரொக்கப்பரிசு ரூ. 1,250/-ம், ஒரு மிதிவண்டியும் 1975-ஆம் ஆண்டு மார்ச் 25-ஆம் நாள் பரிசுகளாகப்பெற்று, தமிழகத் துக்குப் பெருமை தேடித் தந் தார். தமிழக அரசுக்கும், ஊர் வளர்ச்சித்துறைக்கும் இதனால் பெரும் புகழும் வளர்ந்துள்ளன.

திரு. சுப்பிரமணியம், தர்மபுரி மாவட்டத்தில் பாலக்கோடு ஊராட்சி ஒன்றியத்தில் கிராமநல ஊழியராகப் பணி புரிகிறார். இப்பணியில் 13 ஆண்டுகள் அனுபவமுள்ளவர். இவர் மாரண்டஹள்ளி பகுதியில் கடந்த 2 ஆண்டுகளாகப் பணியாற்றுகிறார். இவரது பகுதி 43,815 மக்கள் தொகையும் 8006 எக்டேர் விளைநிலமும் உள்ளன.

கிராமநம ஊழியராகப் பணியேற்பதற்கு முன்பு, 1962-ஆம் ஆண்டில் திரு. சுப்பிரமணியம், பள்ளி ஆசிரியராக இருந்தவர். ''கிராம மக்களுக்குப் பெருமளவு சேவை செய்ய முடியும் என்ற நம்பிக்கையே என்னை இவ்வேலையை மேற்கொள்ளச் செய்தது'' என்கிறார் சுப்பிரமணியம்.

அவரது ஆழ்ந்த நம்பிக்கை புத்தொளி பெற்று, தமிழகத்திற்கே பெருமை தேடித் தந்துள்ளது. இத்தகைய சிறப்பினை அவர் எவ்வாறு பெற முடிந்தது என்பது, நமது கவனத்திற்குரியதாகும்.

திரு. சுப்பிரமணியம், நாள்தோறும் நான்கு கிராமங்களுக்குச் செல்வதை முறையாகக் கொண்டிருந்தார். பெரும்பாலும் மாலைப் பொழுதெல்லாம் வேளாண்மை வளர்ச்சி பற்றிய கலந்துரையாடலாகவே இருக்கும். இதற்கென மத்திய, மாநில அரசுகளின் பத்திரிகைகளைத் தொடர்ந்து படிக்கிறார்.



வேளாண்மை வளர்ச்சியில், இவரது பகுதியில் 4360 எக்டேரிலும் எல்லாப் பயிர்களிலும் பொறுக்கு விதை பயன்படுத்தப்படுகிறது. 27,800 டன் கம்போஸ்ட் உரம் தயாரிப்பதில் உதவி இருக்கிறார். 2,305 எக்டேரில் தழையுரப் பயிர் தொடர்ந்து சாகுபடி செய்யப்படுகிறது. 2,147 எக்டேர் விளைநிலத்தில் செய்யப்பட்டுள்ள பயிர்ப் பாதுகாப்பு சுப்பிரமணியத்தின் பெயரைச் சொல்லுகிறது.

போட்டியிட்ட ஆண்டில், இவர் பகுதியில் 59 தனியார் கோழிப்பண்ணைகள் தொடங்கப்பட்டு இலாபகரமாக இயங்கின. கால்நடைகளுக்குச் செயற்கை முறையில் கருத்தரிக்க ஏற்பாடு செய்து, நல்லின வளர்ச்சிக்குப் பெரிதும் உதவியுள்ளார்.

மக்களிடம் அன்றாடம் நெருங்கிப் பழகியதே, திரு. சுப்பிரமணியம் பெற்றுள்ள இந்த மாபெரும் வெற்றிக்கு அடிப்படைக் காரணமாகும். இதனால், குடும்பநலத் திட்டம், சிறுசேமிப்பு, கிராமத்தைத் துப்புரவாக வைத்திருக்கும் முறை ஆகியவற்றில் குறிப்பிடத்தக்க சாதனை செய்ய முடிந்துள்ளது. அனைத்திலும் அரிசன மக்களின் முன்னேற்றத்திற்கான சேவை செய்வதில் மிகுந்த ஆர்வம் கொண்டிருந்தார்.

திரு. சுப்பிரமணியத்தின் வெற்றி, நாட்டின் சமுதாய முன்னேற்றத்துக்கெனப் பாடுபடும் அனைத்துக் கிராமநல ஊழியர்களும், முன்னோடியாக கொள்ளத்தக்கதாகும்.

தமிழகத்திற்குத் தனிப் பெரும் பெருமை தேடித்தந்துள்ள திரு சுப்பிரமணியத்தின் சேவையைப் பெரிதும் பாராட்டுகிறோம்.

நல்லதோர் எடுத்துக்காட்டு

சமுதாய வளர்ச்சியை
மையமாகக் கொண்ட மக்க
ளாட்சின் அடித்தளமாக
ஊராட்சிகள் உருவாகின;
நாட்டின் முதுகெலும்பாக
விளங்கும் கிராமங்களில் புதிய
தொரு சக்தியும், விழிப்பு
உணர்ச்சியும் பெருக்கெடுத்
திருப்பதற்கு, ஊராட்சித்
தலைவர்களின் தன்னலங்
கருதாச் சேவை தக்கதொரு
பக்க பலமாக அமைந்துள்ளது.

குறிப்பாக, முப்பது ஆண்
டுகள் மக்களின் நம்பிக்கைக்
குரிய தலைவராக, போட்டி
யின்றித் தேர்ந்தெடுக்கப்பட்
டுப் பணிபுரிவதென்பது, சமு
தாய நலத்திட்டச் சாதனைக்கு
நல்லதொரு எடுத்துக்காட்
டாகும்.

ஸ்ரீபெரும்புதூர் நகராட்சித்
தலைவரான திரு. எஸ்.ஏ.எஸ்.
காதர் அவர்கள் 30 ஆண்டு
களாகப் போட்டியின்றித்
தலைவராகப் பணியாற்றி வரு
கிறார். பெரும்பாலும் இந்துக்
கள் நிறைந்துள்ள, ஸ்ரீபெரும்
புதூர் ஊராட்சி ஒன்றியத்தி
லும் கடந்த 15 ஆண்டுக
ளாகத் தொடர்ந்து ஒன்றியப்
பெரும் தலைவராகப் பொறுப்
பினை மேற்கொண்டுள்ளார்.

"தொடர்ந்து முப்பது ஆண்
டுகள்...உங்கள் வட்டார மக்
களின் பேராதரவைப் பெற
நீங்கள் கைக்கொள்ளும் நடை
முறை என்ன?" என்று
கேட்கும்போது,

புன்னகையுடன் பதில்
சொல்லும் திரு. காதர் குறிப்
பிடுகிறார்:

"நானொரு ஏழை முஸ்லீம்.
முப்பது ஆண்டுகளுக்கு முன்
மக்கள், ஏக மனதாக என்
னைத் தேர்ந்தெடுத்தார்கள்.
தொடர்ந்து இப்பொறுப்பில்
நிலைத்திருப்பதற்கும், செவ்
வனே என் கடமைகளைச் செய்
வதற்கும், பாகுபாடு இல்
லாமல் எனது வட்டார மக்
களிடம் உள்ளன்போடு நெருங்
கிப் பழகுவதே காரணமாகும்.
மக்கள் சகோதரப் பாசத்தோடு
என்னிடம் தங்கள் தேவை
களைச் சொல்லும்போது, அதே
உணர்வோடு என்னால் இயன்
றதைச் செய்ய முடிகிறது.
இந்தப் பொதுநலப் பணியில்
மிகுந்த மன நிறைவையே
பெறுகிறேன். இதுவே எனக்கு
மாபெரும் ஆதாயமாகிறது"
என்கிறார்.

1972-73,—1973-74-
ஆம் ஆண்டுகளில் செங்கற்
பட்டு மாவட்டத்திலேயே
முதன்மையானதாக ஸ்ரீபெரும்
புதூர் ஊராட்சி ஒன்றியம்
பரிசு பெற்றுள்ளது.

ஸ்ரீபெரும்புதூர் ஒன்றியத்துக்குச் சிறப்பளிக்கும் தச்சுப் பட்டறை

ஸ்ரீபெரம்புதூர் ஊராட்சி
ஒன்றியத்தின் தச்சு உற்பத்தி
நிலையம் 8.11.1960-ஆம்
ஆண்டு தொடங்கப் பெற்றது.

இந்தத் தச்சுப்பட்டறையில்
வருடம் ஒன்றுக்கு $1\frac{1}{2}$
இலட்சம் ரூபாய் பெறுமான
முள்ள பொருள்கள் செய்யப்
படுகின்றன. இவற்றில் உறுதி
யும், அழகும் இந்தத் தச்சுப்
பட்டறைக்குப் பெரும்புகழைத்
தேடிக் கொடுத்துள்ளன.
குறிப்பாக, தமிழ்நாட்டிலுள்ள
அஞ்சலகங்களுக்குத் தேவை
யான, மேசை, நாற்காலி
போன்றவை இங்கே
உருவாக்கப்பட்டு அனுப்பப்
படுகின்றன.

இந்தத் தச்சுப்பட்டறையில்
73 பேர் தற்போது பணி
யாற்றுகின்றனர்.

அரசினர் நடத்தும் இந்த
யூனிட் இலாபகரமானதாக
வும், சிறப்பான, பயனுள்ள
பொருட்களை உற்பத்தி
செய்யக் கூடியதாகவும்
அமைந்திருப்பது, ஸ்ரீபெரும்
புதூர் ஊராட்சி ஒன்றி
யத்துக்குப் பெருமை தேடித்
தருவதாகும்.

முதல்பரிசு பெற்ற A மல்லபுரம்

தர்மபுரி மாவட்டம், பாலக்கோடு ஊராட்சி ஒன்றியத்தைச் சேர்ந்த A மல்லபுரம், 1973-74 ஆம் ஆண்டுக்கென இந்தியாவிலேயே சிறந்த கிராமமாகத் தேர்ந்தெடுக்கப்பட்டு ரூ. 7,000/- பரிசு பெற்றுள்ளது.

A மல்லபுரம் 8,194 மக்கள் தொகை கொண்டதாகும். 1,500 எக்டேர் விளைநிலம் உள்ளது. இதில் 986 எக்டேர்களில் பொறுக்கு விதை பயன்படுத்தப்பட்டுள்ளது. எல்லா நிலங்களிலும் பயிர் பாதுகாப்புமுறை கையாளப்பட்டுள்ளது. அனைத்துக் குடும்பங்களும், கூட்டுறவுச்சங்கங்களின் வாயிலாகப் பயன்பெறுகின்றன. 1973-74 ஆண்டு மட்டும் 114 நபர்களுக்குக் குடும்பநலத்திட்ட அறுவைச் சிகிச்சை செய்யப்பட்டுள்ளது. சீரணித் தொண்டர்களால்- அதே ஆண்டில் திறந்தவெளிக் கலையரங்கம் கட்டப்பட்டுள்ளது.

A மல்லபுரம் ஊராட்சி மன்றத்துக்கு உளமார்ந்த பாராட்டுதலைத் தெரிவித்துக் கொள்கிறோம்.

நரிக்குறவப் பெண் — ஊராட்சி ஒன்றியத்தில் கூட்டு உறுப்பினரானார்.

செங்கல்பட்டு மாவட்டம், சோழவரம் ஊராட்சி ஒன்றியத்தில். திருமதி. ஞானசௌந்தரி என்னும் நரிக்குறவ இனத்தைச் சார்ந்த பெண், நியமன உறுப்பினராகியுள்ளார். படத்தில் ஆந்திர மாநில ஊராட்சித்துறை அமைச்சர் லெட்சுமணதாசு அவர்களுடன் கையில் கெடிகாரம் கட்டிக் கொண்டிருப்பவரே திருமதி. ஞான சௌந்தரி.

'தாழ்த்தப்பட்ட, பின்தங்கிய வகுப்பினரின் முன்னேற்றத்திற்கு, இந்த நியமனம் தக்கதொரு சான்றாகும்' என்கிறார் சோழவரம் ஊராட்சி ஒன்றியப்பெருந்தலைவர் திரு. ஸ்ரீராமுலு அவர்கள்.

தன்னிறைவு பெற்ற ஊராட்சி ஒன்றியம்

செங்கல்பட்டு மாவட்டம், திருவள்ளூர் ஊராட்சி ஒன்றியத்திலுள்ள 44 தொடக்கப் பள்ளிகளும் சொந்தக் கட்டடங்களில் இயங்குகின்றன. இவ்வொன்றியத்திலுள்ள அனைத்துத் கிராமங்களுக்கும் சாலை வசதியுண்டு. மின்விளக்குகள் பொருத்தப்பட்டுள்ளன. கதர் விற்பனையில், மாநில அளவில், கடந்த மூன்று ஆண்டுகளாக முதன்மை பெற்றுள்ளது திருவள்ளூர் ஊராட்சி ஒன்றியம்.



தமிழகத்தில் சிறப்புமிகு ஊராட்சி முறை

ஆந்திர அமைச்சரின் பாராட்டு

ஆந்திர மாநிலத்திலுள்ள ஜில்லா பரிஷத்-பஞ்சாயத்து சமிதி ஆகிய ஊராட்சி நிறுவனங்களைச் சீரமைக்கும் பணியினை ஆந்திர அரசு தற்போது மேற்கொண்டுள்ளது.

தமிழ்நாட்டில் உள்ள ஊராட்சி நிறுவனங்களின் அமைப்பு முறைகளைக் கண்டறிந்தால் ஆந்திர மாநிலத்திற்குச் சிறந்த பயன் கிட்டும் என்ற நோக்குடன் அம்மாநில ஊராட்சி அமைச்சர் மாண்புமிகு எல். லட்சுமணதாசு அவர்கள் சென்ற ஆண்டு டிசம்பர் 17, 18, 19 ஆகிய நாட்களில் சென்னைக்கு வந்திருந்து நேரில் சென்று அவர்கள் ஆராய்ந்த தமது கருத்துக்களை வெளியிட்டார். அவற்றில் சில பகுதி இங்கே இடம் பெறுகின்றன.

''தமிழ்நாட்டிலுள்ள ஊராட்சி ஒன்றியங்களின் அமைப்பு முறைகள், அவை செயல்படும் விதம் முதலியவற்றை நேரில் கண்டறியவும் தமிழ்நாடு உள்ளாட்சித்துறை அமைச்சர் அவர்களுடன் கலந்துரையாடி அவருடைய சீரிய அனுபவங்களையும் பெறுவதற்கான நல்வாய்ப்பொன்று எனக்குக் கிட்டியது. தமிழ்நாட்டிலுள்ள ஊராட்சிகள், ஊராட்சி ஒன்றியங்கள் சிறப்பாக இயங்குவதற்குச் சிறந்த அடித்தளத்தைத் தமிழக அரசு உருவாக்கிச் செயல்படுவதைக் கண்டு மகிழ்ந்தேன்.

''ஆந்திரப்பிரேதேச அரசு, சில ஆண்டுகளுக்கு முன்னர் ஒரு குழுவினை நியமித்தது. அக்குழுவின் அறிக்கையில் தமிழ்நாட்டிலுள்ள ஊராட்சிகள் அரசிடமிருந்து இணைமானியங்களைப் பெற்று நிதி வளமடைந்து, தனித்து நின்று கிராம மக்களுக்கு நல்ல வசதிகளைச் செய்து தருகின்றன. இதே முறையை ஆந்திரமாநிலமும் பின்பற்றலாமென்று கூறப்பட்டுள்ளது. இந்தப் பரிந்துரையின் முழுப் பயனை இன்று நேரில் கண்டுணர்ந்தேன்.''

19-12-1974 அன்று ஆந்திர அமைச்சரும் அவர்தம் குழுவினரும் சோழவரம், கும்மிடிப்பூண்டி ஊராட்சி ஒன்றியங்களுக்கு அழைத்துச் செல்லப்பட்டனர்.

மேற்கூறிய ஊராட்சி ஒன்றியங்களுக்குச் சென்று சமுதாயப் பணிகளையும் ஊராட்சிகளையும் பற்றி நேரில் கண்டறிந்தார். இவ்வொன்றியங்களிலுள்ள பள்ளிக் கட்டடங்கள், அரிசன மக்கள் குடியிருப்புகள், வேளாண்மையில் புதுமுறைகள் கூட்டுறவுச் சங்கச் சாதனைகள், குடும்ப நலத் திட்ட வேலை முறை முதலியவற்றை ஆந்திர அமைச்சர் நேரில் கண்டு பாராட்டுத் தெரிவித்தார்.

சோழவரம் ஊராட்சி ஒன்றியத்திலுள்ள ஒரக்காடு என்னும் ஊரிலுள்ள நரிக்குறவர்களின் குடியிருப்பு ஆந்திர அமைச்சரின் கவனத்தைப் பெரிதும் கவர்வதாய் அமைந்தது.

சொந்த ஊரும் - சொந்த வீடுமின்றி அலைந்து திரியும் நரிக்குறவ மக்களை ஓரிடத்தில் நிலையாக வாழச் செய்ய ஒரக்காட்டிலுள்ள நரிக்குறவர்கள் குடியிருப்பு தமிழக அரசின் ஒரு சிறந்த சாதனையாகும்.

"அதைவிட விந்தை, நரிக்குறவகுப்பு மங்கை-நல்லாள் சோழவரம் ஊராட்சி ஒன்றியத்தில் உறுப்பினராகச் சேர்த்துக் கொள்ளப்பட்டு இருப்பது ஊராட்சியின் சரித்திரத்திற்கே பெரும் புகழ் தேடித் தருவதாகும். தமிழ் நாட்டிற்கு என் உளமார்ந்த பாராட்டுகள்'' என்று ஆந்திர அமைச்சர் புகழ்ந்தார்.

''ஊராட்சி ஒன்றியங்களுக்கு ஏற்படும் நிர்வாகச் செலவுகள் முழுவதையும் தமிழ்நாடு அரசே ஏற்றுக் கொண்டிருப்பது மிகச் சிறந்த சாதனைகளில் ஒன்றாகும். இவ்வாறு செய்திருப்பதன் பயனாக ஒன்றியங்கள் தங்கள் கைவசமுள்ள நிதிகள் அனைத்தையும் கிராம மக்களின் முழு நலனுக்கே செலவிட முடிகிறது. இம்முறையை ஆந்திர மாநிலம் கவனத்தில் கொண்டு ஆவன செய்யும்''

''தமிழ்நாடு அரசு பற்பல மானியங்களையும் - இணைமானியங்களையும் - ஒன்றியங்களுக்கு அளித்து ஒன்றியங்களின் நிதிநிலையை வளமுடையதாக்கியுள்ளது.

''குறிப்பாக வீட்டு வரி-தல-செஸ் சர்-சார்ஜ் முதலியவற்றிற்கு அரசு இணைமானியம் அளிப்பது மிகவும் பாராட்டுக்குரியது.

''ஊராட்சி முறையின் வளர்ச்சிக்கு இது மிகவும் சிறந்த அடித்தளமாக அமைந்து மிகுந்த ஊக்கம் அளித்து வருகிறது. மாவட்ட ஆட்சித்தலைவரின் தலைமையில் இயங்குவதைச் சிறந்ததொரு முறையாகக் கருதுகிறேன். அதேபோன்று ஊராட்சித் தலைவர்களை மக்களே தேர்ந்தெடுக்கும் முறையும் என்னைப் பெரிதும் கவர்கிறது.

"என்னுடைய இந்தத் தமிழ்நாட்டுப் பயணம் நல்ல அனுபவங்களை எனக்குத் தந்துள்ளது. ஆவன செய்த மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் டாக்டர் கலைஞர் அவர்களுக்கும், மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்களுக்கும் எனது உளங்கனிந்த நன்றி.

நான் அடிமையாக இருக்க மாட்டேன். இதுதான் ஜனநாயகக் கோட்பாட்டின் அடிப்படைத் தத்துவம்.

—ஆபிரகாம் லிங்கன்

வறட்சியை விரட்டினர்

புஞ்சரசன் தாங்கலில் வறட்சி நிவாரணப் பணி

ஊராட்சி ஒன்றியத்தின் ஒத்துழைப்புடன் மக்களின் ஆர்வமும் உழைப்பும் இணைந்து செயல்படும்போது, மக்களுக்கு எத்தகைய நன்மைகள் கிடைக்கக் கூடும் என்பதற்கு **புஞ்சரசன்தாங்கல்** ஊராட்சி ஒரு சிறந்த எடுத்துக்காட்டாக விளங்குகிறது.

புஞ்சரசன் தாங்கல் ஊராட்சி, காஞ்சிபுரம் ஊராட்சி ஒன்றியத்தைச் சார்ந்தது. இங்கு 500 பேர்களே வாழ்கின்றனர். இவர்கள் ஒன்றுகூடி, 45 ஏக்கர் நிலத்திலுள்ள நெற்பயிர்கள் வறட்சியால் மடிந்து விடாமலிருக்க, பாலாற்றின் நடுவினிலே கால்வாயினை வெட்டி, நீரினைக் கொணர்ந்து நெற்பயிரையும் காப்பாற்றித் தங்களையும் காப்பாற்றிக் கொண்டுள்ளனர்.

50 பேர்கள், நாள்தோறும் 6 மணிநேரம் வீதம் 15 நாட்கள் உழைத்து, ஆற்று மட்டத்திலிருந்து 12 அடி ஆழம் 10 அடி அகலமுள்ள பாசனக் கால்வாயைப் பாலாற்றிலேயே வெட்டியுள்ளனர்.

பாலாற்றில் இக்கால்வாயினைத் தோண்டும் வேலையை. காஞ்சிபுரம் ஊராட்சி ஒன்றியம் வறட்சி நிவாரணப் பணியாக மேற்கொண்டு, பாலாற்றில் ஏற்கெனவேயுள்ள முகத்துவாரத்திலிருந்து 250 மீட்டர் நீளக் கால்வாயினைப் புதிதாக வெட்டியது. இங்குள்ள பழைய கால்வாயில், கிராமமக்கள் குடிமராமத்துச் செய்து, கால்வாய் மூலம் நீரை வயலிற்குக் கொண்டு சென்றனர்.

குடிநீருக்கும் பயன்படும் இந்நீரினால் இதுவரை ஒருமுறை 45 ஏக்கர்களில் சாகுபடி செய்யப்பட்டுள்ளது • இன்னொரு முறையும் சாகுபடி செய்ய முயற்சிகள் நடக்கின்றன.

ஊராட்சி ஒன்றியமும், ஊர் மக்களும் சேர்ந்து செயல்பட்டதனாலேயே 45 ஏக்கர்களுக்குத் தொடர்ந்த பாசனவசதி கிடைத்தது மட்டுமின்றி, குடிநீர்ப் பிரச்சினையையும் தீர்த்து வைக்க முடிந்தது.

“ இந்த முழுத் திட்டமும் **புஞ்சரசன் தாங்கல்** மக்களின் யோசனையால் உருவானது. அதற்கேற்ப ஒன்றியமும் ரூபாய் .

3,000 அளித்து 250 மீட்டர் கால்வாயும் வெட்டித் தந்தது. மற்ற வேலைகளை நாங்களே செய்தோம். நாங்கள் நன்றாக வேலை செய்தோமோ, இல்லையோ, எங்களின் ஒத்துழைப்பால் எங்களையும், எங்களின் பயிர்களையும் காப்பாற்றிக் கொண்டோம் ” என்று பெருமிதத்துடன் கூறுகிறார், இவ்வூராட்சியின் தலைவர் திரு ஏழுமலை அவர்கள்.

வளத்தோட்டத்தில் கால்வாய் ஆழப்படுத்தப் பெறுகிறது

இந்தியாவின் 22-வது மாநிலம்

இந்தியாவின் வட எல்லையிலுள்ள சிக்கிம் முன்பு முடியாட்சியின் கீழ் இருந்தது. தற்போது குடியாட்சியாக மலர்ந்துள்ளது.

சிக்கிம் மாநிலத்தை இந்தியாவுடன் இணைக்கும் தீர்மானம் ஒன்று நாடாளுமன்றத்தில் அண்மையில் நிறைவேற்றப்பட்டது.

இந்தத் தீர்மானத்துக்குக் குறைந்த பட்சம் பதினேழு மாநிலங்கள் ஒப்புதல் அளிக்க வேண்டும். எனவே, மைய அரசு கேட்டுக் கொண்டதற்கிணங்கத் தமிழகச் சட்டப் பேரவை மே, 2 ஆம் நாள் அவசரமாகக் கூடி, சிக்கிம் மாநில இணைப்புக்கான தீர்மானத்தை ஒருமனதாக நிறைவேற்றியது.

சிக்கிம் இணைப்பை ஆதரிக்கும் தீர்மானத்தை அவையின் முன்னவர் டாக்டர் நாவலர் அவர்கள் முன் மொழிந்தார்.

தீர்மான வாசகங்கள் வருமாறு :—

'' சிக்கிமை, இந்தியாவின் ஒரு மாநிலமாக்குவதற்கு நாடாளுமன்ற இரு அவைகளிலும் நிறைவேற்றப்பட்டுள்ள அரசியல் சட்டத் திருத்தங்களை இப்பேரவை ஏற்று உறுதி செய்கிறது ''.

அவையின் முன்னவர் டாக்டர் நாவலர் அவர்கள் தீர்மானத்தை முன்மொழிந்த பிறகு அதன்மீது விவாதம் நடந்தது. விவாதத்தில் கலந்து கொண்டு பல உறுப்பினர்கள் பேசினார்கள்.

விவாதத்துக்குப் பதிலளித்து டாக்டர் நாவலர் அவர்கள் பேசியதாவது :—

'' சிக்கிமை நமது நாட்டுடன் இணைப்பதற்காக அரசியல் சட்டத்தைத் திருத்துவதற்காகப் பாராளுமன்ற இரண்டு அவைகளும் தீர்மானம் நிறைவேற்றி உள்ளன. இதனை நமது நாட்டில் உள்ள பகுதி அளவு மாநிலங்கள் ஏற்க வேண்டும். அப்படிப் பகுதி அளவு மாநிலங்கள் ஏற்றால் தான் குடியரசுத் தலைவரின் ஒப்புதல் கிடைக்கும்.

'' முதன் முதலில் சிக்கிம் நம்மோடு இணைந்த கூட்டு மாநிலமாக இருந்தது. இப்போது முழுமை பெற்று நம்மோடு சேருகிறது. அங்குள்ள மன்னர் சோக்கியால் மக்களவை நிறைவேற்றிய தீர்மானங்களை ஒப்புக் கொள்ள மறுத்தார். அங்குள்ள மக்களே 'இந்தியாவுடன் இணைந்து இருப்பதுதான் நமக்குப் பொருத்தமாக இருக்கும். பொருளாதார வகையிலும், பாதுகாப்பு வகையிலும் நமக்கு வசதியாகவே இருக்கும்' என்பதை உணர்ந்துள்ளனர்.

'' இந்தியாவோடு சேர வேண்டும் என்று சிக்கிம் சட்டசபையில் தீர்மானம் நிறைவேற்றப்பட்டது. பின்னர் பொது வாக்கெடுப்பு நடத்தப்பட்டது. அங்குள்ள 97 ஆயிரம் வாக்காளர்களில் 59,637 பேர் இந்தியாவோடு இணைவதற்கு ஆதரவு தெரிவித்துள்ளனர்.

இப்போது உள்ள 21 மாநிலங்களுடன் சிக்கிமும் சேர்ந்து 22-வது மாநிலம் ஆகிறது. அவர்களுக்குப் பாராளுமன்ற மக்களவையில் ஓர் இடமும், மாநிலங்களவையில் ஓர் இடமும் கொடுக்கப்படுகிறது.

கோவா, டையூ, டாமன் பகுதிகளை நமது நாட்டுடன் இணைக்கும்போதும் சரி, பாண்டிச்சேரி, மாகி, ஏனாம் பகுதிகளை இணைக்கும்போதும் சரி இது போன்றுதான் நாம் தீர்மானங்களைக் கொண்டுவர வேண்டியது இருந்தது.

''இங்குப் பேசிய உறுப்பினர்கள் சிலர், மாநில சுயாட்சி பற்றிப் பேசினார்கள். அவர்கள் மறுபடியும், மறுபடியும் இதைப் பேசுவது, எங்களுக்கு நல்லதுதான். எங்கள் கருத்துக்கு வலுவூட்டுவதாக இருக்கிறது.

''இப்போது 21 மாநிலமாக இருந்தது 22 மாநிலங்களாக ஆகி இருக்கிறது. முன்பு 21 மாநிலங்களுக்காக மாநில சுயாட்சி கேட்டோம். இனி 22 மாநிலங்களுக்காக மாநில சுயாட்சி கேட்கிறோம். கிடைக்கும் என்று நம்பிக்கை இருக்கிறது.

'' இன்னும் நேபாளம், பூடான் ஆகிய நாடுகள் நம்மோடு சேர்ந்தாலும் அவற்றுக்காகவும் மாநில சுயாட்சி கேட்கலாம்.

'' இந்தத் தீர்மானத்தை அனைவரும் ஏகமனதாக நிறைவேற்றித்தர வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன் ''.

இவ்வாறு நாவலர் பேசினார். பின்னர், தீர்மானம் ஒருமனதாக நிறைவேற்றப்பட்டது.

சட்டமன்ற மேலவையிலும், சிக்கிம் இணைப்புத் தீர்மானத்தை நாவலர் முன்மொழிந்தார். உறுப்பினர்கள் விவாதம் செய்தனர். பின்னர், தீர்மானம் ஒரு மனதாக நிறைவேற்றப் பட்டது.

அறவாழ்வுக்கு அருமருந்து!

அரண்மனை வாழ்வை உதறித் தள்ளிவிட்டு, அறிவொளி பெற வெளியேறிய பெரியார் யார்?

பன்னிரண்டு ஆண்டுக்காலம் அரும்பாடுபட்டு ஞானஒளியாய்த் திகழ்ந்த பேரறிஞர் யார்?

அவர்தான் 'எல்லா உயிர்களிடமும் இரக்கம் வேண்டும்' என்று இயம்பிய வர்த்தமான மகாவீரர்! அறவழி நின்று அகிம்சையைக் கடைப்பிடிக்கச் சொன்ன மாபெரும் மேதை!

அன்னாரின் பிறந்த நாள் விழா சென்னைக் கடற்கரைச் சீரணி அரங்கில் 24—4—'75 அன்று சீரும் சிறப்புமாக நடைபெற்றது.

முன்னதாகத் தங்கசாலையிலுள்ள சைனர் ஆலயத்திலிருந்து ஒரு பெரிய ஊர்வலம் நகரின் முக்கிய வீதிகள் வழியே வந்தது. ஊர்வலத்தில் அலங்கரிக்கப்பட்ட வண்டிகளில் மகாவீரரின் பெருமைகள் சித்திரிக்கப்பட்டிருந்தன.

சீரணி அரங்கில் நடந்த இந்தக் கூட்டத்துக்குத் திரு. கி.வா. ஜகந்நாதன் அவர்கள் தலைமை வகித்து 'சமண சுத்தம்' என்னும் நூலை வெளியிட்டார்.

தமிழகக் கல்வி அமைச்சர் டாக்டர் நாவலர் அவர்கள் விழாவில் கலந்து கொண்டு ஆற்றிய சிறப்புச் சொற்பொழிவில் குறிப்பிட்டதாவது :

"மகாவீரரின் போதனைகளைப் பின்பற்றி அறவாழ்வு வாழ்ந்தால் நாடும் சமுதாயமும் நலம் பெறும். வாழ்க்கை வழித்துணையாக-ஊன்றுகோலாக மகாவீரரின் போதனைகள் உள்ளன. அறவாழ்வுக்கு அவர் போதனை அருமருந்து."

ஆரம்பத்தில் அனைவரையும் வரவேற்றுப் பேசிய திரு. மிலாப் சந்த்ஜி தாதா அவர்கள் ஒரு மகிழ்ச்சியான செய்தியைக் குறிப்பிட்டார்—

"ஜெயின் பவன், மகாவீரர் பவன் என்கிற பெயரில் இரு சமுதாயக் கூடங்கள், கண் மருத்துவமனை, எக்ஸ்ரே நிலையம் போன்ற பல சமுதாயப் பணிகள் இவ்வாண்டு செயல்படவிருக்கின்றன."

இவ்விழாவில், கோயில்களில் பலியிடுவதைத் தடுக்க அரும்பாடுபட்ட ஜீவபந்து திரு. டி. எஸ். ஸ்ரீபால் அவர்களுக்குப் பட்டாடை அணிவித்துச் சிறப்பிக்கப்பட்டது.

விழாவில், தமிழக முதல்வர் கலைஞர் திரட்டும் தமிழக வறட்சி நிவாரண நிதிக்காக சைனப் பெருமக்கள் சார்பில் ரூபாய் 2 இலட்சத்துக்கான காசோலை வழங்கப்பட்டது குறிப்பிடத்தக்கது.

தமிழகத்திலிருந்து பிற மாநிலங்களுக்குப் பசு ஏற்றுமதி செய்யப்படுவதைத் தடை செய்தும், தமிழகத்தில் பசுவதையைத் தடை செய்தும் சட்டமியற்ற வேண்டும் என்றும் விழாவில் கோரப்பட்டது.

விழாவினையொட்டி ஏழைகளுக்கு உணவும், சிறைக் கைதிகள் மூவாயிரம் பேர்களுக்கு இனிப்பும் வழங்கியது மகிழ்ச்சிக்குரிய செய்தியாகும்.

மகாவீரரின் பிறந்த நாள் விழாவினையொட்டி இவ்வாண்டு ஏப்ரல் திங்கள் 24-ம் நாள் பொது விடுமுறை நாளாகத் தமிழக அரசு அறிவித்ததையும், அன்று நகரில் இறைச்சிக் கடைகளை மூடிவிடத் தமிழக அரசு ஆணையிட்டதையும் சைனப் பெருமக்கள் நன்றியறிதலோடு குறிப்பிடுகிறார்கள்.

கிராமப்பணி நிறுவனம்

கிராம அலுவலர்கள் முழு நேர அரசு ஊழியர்களல்லர், பகுதி நேர ஊழியர்கள் என்ற முறையில் அவர்கள் பணிக்கொடை, ஓய்வூதியம், குடும்பப் பாதுகாப்புத் திட்டம் போன்ற ஓய்வுக்காலச் சலுகைகளுக்கு அருகதையற்றவர்களாயிருக்கின்றனரென்ற போதிலும் நிர்வாகத்தின்கண் அவர்களுடைய உயர்ந்த பணியினைக் கருத்திற்கொண்டு 1975 ஏப்ரல் மாதத்திலிருந்து குடும்பப் பாதுகாப்புத் திட்டத்தைக் கிராம அலுவலர்களுக்கும் கிராமப்பணியாளர்களுக்கும் பொருந்தும் வகையில் விரிவுபடுத்தும் முடிவு எடுக்கப்பட்டுள்ளது. கிராம அலுவலர்களுக்கும் பணியாளர்களுக்கும் அளிக்கப்பட்டு வரும் சிறப்பு ஊதியத்தை பிப்ரவரி மாதம் முதல் ஏழு ரூபாய் உயர்த்தியிருப்பது மற்றொரு சிறப்பு அம்சமாகும்.

தமிழ்நாட்டில் போக்குவரத்துக் கழகங்கள்

எஸ். ஜெகதீசன்

தமிழ்நாட்டில், போக்குவரத்துத் துறை வெகு சிறப்பாகப் பணியாற்றி வருகிறது.

இந்தியத் துணைக்கண்டத்தின் மற்ற மாநிலத்தவர் இங்கு வந்து இத்துறையின் சிறப்புகளைக் கற்றுக்கொள்ளும் அளவிற்கு, இத்துறை புகழ் பெற்று விளங்குகிறது.

தற்போது, அரசுப்போக்குவரத்துத் துறை தவிர போக்குவரத்துக் கழகங்கள் ஏழு உள்ளன.

பல்லவன் போக்குவரத்துக் கழகம், பாண்டியன் சாலை போக்குவரத்துக் கழகம், சேரன் போக்குவரத்துக் கழகம், சோழன் சாலைப் போக்குவரத்துக் கழகம், அண்ணா போக்குவரத்துக் கழகம், கட்டபொம்மன் போக்குவரத்துக் கழகம், தந்தை பெரியார் போக்குவரத்துக் கழகம் ஆகியன தமிழ்நாட்டில் மக்களுக்காகச் செயல்பட்டு வருகின்றன.

பல்லவன் போக்குவரத்துக் கழகமானது, முக்கியமாக பெருநகரப் பகுதிகளில் இயங்கி வருகிறது.

1972-ம் ஆண்டு இக் கழகம் 1,298 பேருந்துகளுடன் அமைக்கப்பட்டது.

வருவாயைப் பெருக்கவும், வழியில் நிற்கும் பயணிகளை ஏற்றாமல் செல்வது போன்ற பிரச்சினைகளைச் சமாளிக்கவும் ''ஊக்கத்தொகை வசூல் 'திட்டத்தை இக்கழகம் கொண்டு வந்தது. இத்திட்டம், போக்குவரத்துத் துறையின் வரலாற்றில் புரட்சிகரமான மாறுதலை அளித்துள்ளது.

பேருந்துகள் நின்று தங்களை ஏற்றிச் செல்வது இல்லை என்று பொதுமக்களிடம் இருந்து புகார் எதுவும் தற்போது வருவது இல்லை.

பயணச் சீட்டுகளை அச்சடித்துப் பெறுவதற்குப் பிற அச்சகங்களை நம்பியிருக்கும் நிலை மாற்றித் தன்னிறைவு அடையும் நோக்கத்துடன் பயணச் சீட்டு அச்சடிக்கும் அச்சகம் ஒன்று அமைக்கப்பட்டுள்ளது.

தொழிலாளருக்குப் பயன்படும் வகையில் மருந்தகம் ஒன்றையும் பல்லவன் போக்குவரத்துக் கழகம் நடத்தி வருகிறது.

சேரன் போக்குவரத்துக் கழகம் 1972-ஆம் ஆண்டு மார்ச் திங்கள் 1-ம் நாளில் இருந்து செயல்படத் தொடங்கியது. இக்கழகத்தில் தற்போது 453 பேருந்துகள் உள்ளன.

பொதுமக்களின் வசதிக்காகக் கோயம்புத்தூர் நகரத்தில் தானியங்கி சாலைப் போக்குவரத்து அடையாள விளக்கை இக்கழகம் அமைத்துள்ளது.

கோயம்புத்தூர், உதகமண்டலம் நகரங்களில் பேருந்து நிறுத்தங்களில் பயணிகள் நிற்பதற்கான நிழற்குடைகளை நிறுவியுள்ளது.

இக்கழகம் தொடர்ந்து ஆதாயத்தில் இயங்கி வருகிறது. 1974-75-ல் 17 இலட்சம் ரூபாய் ஆதாயம் ஈட்டும் எனவும் 1975-76-ல் 20 இலட்சம் ரூபாய் ஆதாயம் ஈட்டும் எனவும் எதிர்பார்க்கப்படுகிறது.

எரிபொருளை மீண்டும் சுத்தப்படுத்தும் இயந்திரம் ஒன்றை அமைப்பதற்கான சாத்தியக் கூறுகள் பற்றி இக்கழகம் ஆராய்ச்சி செய்து வருகிறது.

இக்கழகத்தின் ஊழியர்களுக்கு ஊதியத்தில் 32.5 சதவீதம் ஊதியக் கொடையாக வழங்கியது இக்கழகம் பெறும் பெருமைகளில் ஒன்றாகும்.

சோழன்சாலைப் போக்குவரத்துக் கழகம் 1971-ம் ஆண்டு மார்ச் திங்கள் 1-ம் நாளில் இருந்து செயல்படத் தொடங்கியது.

176 பேருந்துகளுடன் துவக்கப்பட்ட இக்கழகம், தற்போது 462 பேருந்துகளாக அதிகமாகியுள்ளது. தஞ்சாவூர், திருச்சி மாவட்டங்களில் பேருந்துப் போக்குவரத்துப் பணியை நடத்தும் பொறுப்பு இதனிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளது.

கும்பகோணத்தில் 40 இலட்சம் ரூபாய் செலவில் நவீன தொழிற்கூடம் ஒன்றை இக்கழகம் கட்டியுள்ளது.

தஞ்சாவூர் நகரில் போக்குவரத்துத் தீவுகளைக் கட்டுவதற்கு இக்கழகம் ரூ. 1 இலட்சம் செலவிட்டது.

கும்பகோணத்தில் கண் சிகிச்சை மருத்துவமனை ஒன்றைக் கட்டுவதற்காகவும் உடல் ஊனமுற்றோருக்கான முதலமைச்சர் புதுவாழ்வு நிதிக்கும் கணிசமான தொகையை இக்கழகம் அளித்துள்ளது.

அண்ணா போக்குவரத்துக் கழகம் 1973-ம் ஆண்டு பிப்ரவரித் திங்கள் 15-ம் நாளில் இருந்து செயல்படத் தொடங்கியது.

இக்கழகத்திடம் தற்போது 123 பேருந்துகள் உள்ளன. 1974-75-ல் 3 இலட்ச ரூபாய் வருவாயும் 1975-76-ல் 10 இலட்ச ரூபாய் வருவாயும் இக்கழகம் ஆதாயமாகப் பெறும் என்றும் எதிர்பார்க்கப்படுகிறது.

கட்டபொம்மன் போக்குவரத்துக் கழகம் 1974-ம் ஆண்டு சனவரித் திங்கள் முதல் நாள் துவக்கப்பட்டது. இக்கழகம் 458 பேருந்துகளுடன் தனது பணியைத் தொடங்கியது. தற்போது இக்கழகத்தில் 522 பேருந்துகள் உள்ளன. 1974-75-ல் நட்டம் எதுவும் இன்றிச் செயல்பட்டு இருக்கிறது. 1975-76-ல் ரூ. 22 இலட்சம் ஆதாயத்தை இது அடையும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

பாண்டியன் சாலைப் போக்கு வரத்துக் கழகம் 1972-ம் ஆண்டு சனவரித் திங்கள் முதல் நாள் துவக்கப்பட்டது. 446 வண்டிகளுடன் துவக்கப்பட்ட இக்கழகத்தினிடம் தற்போது 507 பேருந்துகள் உள்ளன.

1974-75-ல் இக்கழகம் 5.13 இலட்சம் ஆதாயத்தை அடையும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

வடஆர்க்காடு, தென்ஆர்க்காடு மாவட்டங்களில் உள்ள பேருந்துப் போக்குவரத்து முறைக்காக தந்தை பெரியார் போக்குவரத்துக் கழகம் 1975 ஜனவரித் திங்கள் 16-ம் நாள் துவக்கப்பட்டது. 172 பேருந்துகளுடன் துவக்கப்பட்ட இக்கழகத்திற்குத் தலைமையிடம் விழுப்புரமாகும்.

1975-76-ல் இக்கழகம் நல்ல ஆதாயத்தை அடையும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

தமிழ்நாட்டில் நீண்ட தூர விரைவுப் போக்குவரத்தைத் தமிழ்நாடு அரசு போக்குவரத்துத்துறை நடத்தி வருகிறது.

சென்னையில் இருந்து திருவனந்தபுரம், இராமேஸ்வரம், கன்னியாகுமரி, திருப்பதி, வேதாரண்யம், மதுரை, கோயம்புத்தூர், பெங்களூர் ஆகிய நகரங்களுக்கு இத்துறையின் விரைவுப் பேருந்துகள் செல்கின்றன.

சென்னையில் இருந்து மைசூருக்கு நாள்தோறும் ஒப்பந்தப் பேருந்து ஒன்றையும் இத்துறை அனுப்புகிறது. தற்போது இத்துறையின் வசம் 304 விரைவுப் பேருந்துகள் உள்ளன. 77 வழித்தடங்களில் நாள்தோறும் சுமார் ஒரு இலட்சத்து 30 ஆயிரம் கிலோ மீட்டர் தூரம் இப்பேருந்துகள் ஓடுகின்றன.

விரைவுப்பேருந்துகள் தவிர மாவட்ட வழித்தடப் பேருந்துகள் சிலவும் இத்துறையின் வசம் உள்ளன.

இத்துறைக்காகப் பாரிமுனையில் உள்ள விரைவுப் பேருந்து நிலையத்தில் 8 மாடிக்கட்டடம் ஒன்று கட்டப் பெற்று வருகின்றது. இதற்காக அரசு அனுமதித்துள்ள தொகை ஒரு கோடியே 30 இலட்சம்.

இங்கு ஒரு பேருந்து நிலையமும் இத்துறையின் அலுவலகத்திற்கான இடங்களும், மற்றும் பயணிகள் வசதிக்கான இடங்களும் அமைக்கப்படும்.

இத்துறைக்கு 1974-75-ஆண்டில் சுமார் ஒரு கோடியே 77 இலட்ச ரூபாய் லாபம் கிடைக்கும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

விரைவுப் பேருந்துகள், மின்னல்வேகப் பேருந்துகள், சொகுசுப் பேருந்துகளின் காரணமாக, மாநிலத்தின் பெரிய நகரங்களுக்கிடையேயும், வெளி மாநில நகரங்களுக்கிடையேயும் சிறப்பான போக்குவரத்து நடைபெறுகிறது.

தழைத்தோங்கும் தமிழ் நாட்டின் சமூக, பொருளாதார, பண்பாட்டு வளர்ச்சியில் போக்குவரத்துத் துறையும் ஏனைய போக்குவரத்துக் கழகங்களும் சிறப்பாகச் சேவை செய்து வருகின்றன.

இச்சேவை மென்மேலும் வளரும் என்பதில் ஐயமில்லை.



சுவைமிக்க பலாப்பழ சுவைநீர்!

தமிழ்நாட்டில் உள்ள கனி வகைகளில் பலா மிகவும் முக்கியமானது. தற்பொழுது சுமார் 5,000 ஏக்கரில் பலா பயிரிடப்பட்டு வருகின்றது. மற்ற எல்லாக் கனிகளையும்விட ஒரு ஏக்கரில் இருந்து கிடைக்கும் மகசூல், பலாவில் மிகவும் அதிகம். இதைப் பயிரிடுவதற்கும் அதிகக் கவனிப்புத் தேவையில்லை. பலாப் பழத்திலுள்ள எல்லாப் பாகங்களும் உபயோமுள்ளவை. பலாச் சுளையை மக்கள் விரும்பி சாப்பிடுவதற்கும், பலாக் கொட்டையைச் சமையலுக்கும், மாவு தயாரிப்பதற்கும், பலாத்தோலை கால்நடைகளுக்கு உணவாக அளிக்கவும் உபயோகப்படுத்தலாம்.

பலாச்சுளையில் இருந்து பல்வேறு பொருட்கள் தயாரிக்கலாம். பலாச்சுளையில் இருந்து தயாரிக்கப்பட்ட பலாப்பழச் சுவைநீர் . (Jack Fruit Squash) மிகவும் மலிவாகவும், சுவை மிக்கதாகவும், யாவராலும் விரும்பத்தக்க நிலையிலும் உள்ளது. வேளாண்மைப் பல்கலைக் கழகத்திலுள்ள உணவியல் துறையில் மேற்கொள்ளப் பெற்ற சோதனைகளில் இருந்து பின்கண்டவாறு பலாப்பழச் சுவைநீர் தயாரிக்கலாம் என்பது தெரியவருகிறது.

தேவையானவை

பலாச்சுளைகள்—1 கிலோ.
(நன்கு பழுத்த, விதை இல்லாத சுளைகள்)
சர்க்கரை—1.75 கிலோ.
'சிட்ரிக்' அமிலம்—40 கிராம்.
'பொட்டாசியம் மெடாபைசல்பைட்'—3 கிராம்.
தண்ணீர்—1.2 லிட்டர்.

செய்முறை

நன்றாகப் பழுத்த பலாப் பழங்களை எடுத்துக்கொண்டு, சுளைகளைத் தனியாகப் பிரித்து விதைகளை எடுத்துவிடவும் சுளைகளைச் சிறு சிறு துண்டுகளாக நறுக்கி, 500 மில்லி லிட்டர் தண்ணீருடன் கலந்து நன்றாகப் பதம் வரும் வரை அரவை இயந்திரத்தில் அரைக்கவும். மீதமுள்ள தண்ணீரில் (700 மில்லி லிட்டர்) சர்க்கரையைப் போட்டு, கொதிக்க வைத்துச் சர்க்கரைப் பாகு தயாரிக்கவும். கொதி வந்தவுடன் சர்க்கரைப் பாகை மெல்லிய 'மஸ்லின்' துணி மூலம் வடிகட்டவும். 'சிட்ரிக்' அமிலத்தையும், பொட்டாசியம் மெடா பைசல்பைட்டையும் சிறிதளவு நீரில் தனித் தனியாகக் கரைத்து, சர்க்கரைப் பாகுடன் நன்றாக கலக்கவும். பின்பு பழச் சாற்றையும், சர்க்கரைப் பாகையும் ஒன்றாகக் கலக்கவும். நன்கு கலக்கிய பழச்சாற்றை மெல்லிய 'மஸ்லின்' துணியின் மூலம் வடிகட்டி நார்ப்பொருட்களை நீக்கி விடவும்.

நன்றாகக் கழுவிய பாட்டில்களை கொதிக்கும் நீரில் சுமார் ஐந்து நிமிடம் போட்டு எடுக்கவும். தயாரிக்கப்பட்ட சுவைநீரைப் பாட்டில்களில் ஊற்றி 'கார்க்' போட்டு மூடி விடவும்.

மேற்கூறியவாறு தயாரிக்கப்பட்ட ஒரு பாகம் சுவைநீருடன் மூன்று பாகம் தண்ணீரைக் கலந்து வீட்டிற்கு வரும் விருந்தினர்களுக்கு வழங்கலாம்.

நாமே இவற்றை வீட்டில் தயாரிக்கும் பொழுது, செலவு குறைவதல்லாமல், நாமே தயாரித்தது என்ற மன நிறைவும், மகிழ்ச்சியும் கிடைக்கின்றன.

ஒருகிலோ பலாச் சுளையில் இருந்து சுமார் நான்கு பாட்டில் சுவைநீர் தயாரிக்கலாம். ஒரு பாட்டில் தயாரிப்பதற்கு சுமார் மூன்று ரூபாய்தான் செலவாகின்றது.

இவ்வாறு தயாரிக்கப்பட்ட சுவைநீர், 'பொட்டாசியம் மொபைசல்பைட்' போடப்படுவதால் நீண்ட நாட்கள் கெடாமல் நல்ல முறையில் இருக்கின்றது.

தகவல்: இரா. சதாசிவம்,
எஸ். நீலகண்டன்,
உணவியல் துறை,
தமிழ்நாடு வேளாண் பல்கலைக் கழகம்,
கோவை-3

கோய்யாப்பழ அல்வா பத்து பைசா!

கொய்யா, இந்தியாவின் எல்லா பகுதிகளிலும், நிறைந்த அளவில் பயிரிடப்பட்டு வருகின்றது. கொய்யாப்பழங்களில் உணவுச்சத்துக்கள், குறிப்பாக உயிர்ச்சத்து 'சி', சுண்ணாம்புச்சத்து, மணிச்சத்து ஆகியவை நிறைந்த அளவில் உள்ளன. கொய்யாப்பழங்கள் இனிய மணத்துடன், சிறிது புளிப்பு கலந்த வாசனையோடு இருக்கும். கொய்யாப் பழங்களிலிருந்து வீட்டிலேயே மிக எளிய முறையில் அல்வா செய்து, நீண்ட நாட்கள் கெடாமல் வைத்துச் இருக்கலாம்.

செய்முறை

நன்கு பழுத்த ஆனால் கெட்டியாக உள்ள பழங்களை எடுத்துக் கொள்ளவும். பழங்களின் மேல் உள்ள அழுக்கை நன்றாக நீரில் கழுவவும். அடிபட்ட பழங்களை நீக்கிவிடவும். பழங்களைச் சிறு துண்டுகளாக 'ஸ்டெயின்லெஸ்' கத்தியினால் வெட்டவும். வெட்டிய துண்டுகளை ஒரு பாத்திரத்தில் போட்டு சம அளவு தண்ணீரை ஊற்றி அடுப்பின் மீது வைத்து பழத் துண்டுகள் மிருதுவாகும்வரை வேக வைக்கவும். பின்பு மெல்லிய 'மஸ்லின்' துணியினால் அதை வடிகட்டி விதைகளையும், தோல்களையும் நீக்கிவிடவும். கீழ்க்கண்ட அளவில் வடிகட்டிய பழச்சாறு, சர்க்கரை, வெண்ணெய், 'சிட்ரிக்' அமிலம், உப்பு ஆகியவற்றை எடுத்துக் கொள்ளவும்.

பழச்சாறு—1000 கிராம்
சர்க்கரை—1000 கிராம்
வெண்ணெய்—150 கிராம்
சிட்ரிக் அமிலம்—3 கிராம்
உப்பு—1 மேசைக் கரண்டி

முதலில் பழச்சாறு, சர்க்கரை, வெண்ணெய் ஆகியவற்றைச் சேர்த்து நன்றாகக் கெட்டிப் பதம் வரும் வரை கிளறிக் கொண்டே காய்ச்சவும். பின்பு 'சிட்ரிக்' அமிலம், உப்பு இரண்டையும் தண்ணீரில் கலந்து ஊற்றவும். தேவைப்பட்டால் சிறிது கலர் பவுடரை தண்ணீரில் கலந்து ஊற்றலாம். நன்றாக அல்வா பதம் வந்தவுடன் கீழே இறக்கி வைக்கவும். சைனா பிளேட் ஒன்றை எடுத்துக் கொண்டு அதன் மீது வெண்ணெய்யைத் தடவி சுமார் 0.5 செ.மீ. கனத்திற்கு காய்ச்சியப் பழக் கலவையை ஊற்றிக் குளிர வைக்கவும். நன்கு கெட்டியானவுடன், சிறிது நெய் தடவிய 'ஸ்டெயின்லெஸ்' கத்தியினால் தேவையான அளவிற்குச் சிறு துண்டுகளாக வெட்டவும். வெட்டி எடுத்த துண்டுகளை மெல்லிய காகிதத்தில் சுற்றி உலர்ந்த கண்ணாடி குடுவையில் போட்டு மூடி வைக்கவும். இதற்கென ஆகும் செலவு ஒரு துண்டிற்கு பத்து பைசாதான்.

சென்னை-செங்கற்பட்டு வட்டாரத் திட்டம்

தமிழக அரசின் திட்டக் கோட்பாடின்படி தமிழ்நாடு எட்டு வட்டாரங்களாகப் பிரிக்கப்பட்டுள்ளது. இதில் சென்னை செங்கற்பட்டு வட்டாரம் மிக முக்கியத்துவம் வாய்ந்த வட்டாரமாகும். இந்த வட்டாரத்திற்கென ஏனைய வட்டாரங்களைக் காட்டிலும் தனியான பிரச்சினைகள் உள்ளன. இவ் வட்டாரத்தின் வளர்ச்சியில் சென்னைப் பெருநகர்ப் பகுதி பெருமளவுசம்பந்தப்படுகிறது. எனவே சென்னை-செங்கை வட்டார திட்டத்தைத் தயாரிக்கையில் சென்னைப் பெருநகர்ப் பகுதியின் வளர்ச்சியும் கருத்திற் கொள்ளப்படுவதுடன், அதற்கான திட்டம், சீராக சிறந்த முறையில் செயல்படுத்தப்பட வேண்டும் என்பதும் வட்டார திட்டத்தின் தலையாய கொள்கையாகும்.

சென்னை-செங்கை வட்டாரம் மாநிலத்தின் வடகிழக்குப் பகுதியில் வங்காள விரிகுடாவைக் கிழக்கு எல்லையாகக் கொண்டு அமைந்துள்ளது. வட்டாரத்தின் பரப்பு 13,393 சதுர கி. மீ. ஆகும். இது மாநிலத்தின் பரப்பில் பத்தில் ஒரு பங்கு ஆகும். 1971-ஆம் ஆண்டு மக்கள் தொகைக் கணக்கெடுப்பின்படி வட்டாரத்தில் 6,856,851 பேர்கள் இருந்தனர். இது மாநில மக்கள் தொகையில் 16.6 சதம் ஆகும். சென்னை மாநகரமும், செங்கற்பட்டு மாவட்டமும், வடஆர்க்காடு மாவட்டத்தில் அரக்கோணம், செய்யாறு, வந்தவாசி வட்டங்களும், மற்றும் தென்ஆர்க்காடு மாவட்டத்திலுள்ள திண்டிவனம், செஞ்சி வட்டங்களும் இவ் வட்டாரத்திலுள்ள ஆட்சி அமைப்புக் கூறுகளாகும் (Administrative Units).

இவ் வட்டாரத்தில் கடற்கரையை ஒட்டிய நிலப்பகுதி சமதளமாகவும், சில பகுதி வறட்சியுடையதாகவும், பள்ளங்கள் நிரம்பியதாகவும், சில இடங்கள் குன்றுகள் நிறைந்த பகுதியாகவும் காணப்படுகின்றன. இவ்வட்டாரத்தில் உள்ள பெரிய நதி பாலாறு ஆகும். செங்குன்றம் ஏரி, செம்பரம்பாக்கம் ஏரி, செங்கற்பட்டு ஏரி, மதுராந்தகம் ஏரி மற்றும் காளிவேலி ஏரி, வட்டாரத்தில் உள்ள இதர பெரிய நீர்நிலைகள் ஆகும்.

இங்கு வேளாண்மைத் தொழில் மழையை நம்பியுள்ளதால் வடகிழக்குப் பருவகாலம் மிகவும் முக்கியமானதாகக் கருதப்படுகிறது. வருடத்தில் சராசரி மழையின் அளவு 1,546 மி.மீ. எனவும் மிக, அதிக மழையின் அளவு நவம்பர் மாதத்தில் 302 மி.மீ. எனவும், குறைவான மழையின் அளவு பிப்ரவரி மாதத்தில் 100 மி.மீ. எனவும் கணிக்கப்பட்டுள்ளது.

செங்கற்பட்டு மாவட்டத்திலும், குறிப்பாக வட்டாரத்தின் தெற்கு, தென்மேற்குப் பகுதிகளிலும் கருங்கற்களும், செல்வமிக்க பாறைக் கற்களும் பூமிக்கடியில் பரவிக்கிடக்கின்றன. இங்கு மிகச் சில கனிப் பொருட்கள் காணப்படுகின்றன.

வட்டாரத்தில் மண்ணின் தன்மை பொதுவாக மிகவும் வளமையாக இல்லாமல் மணலும், உவர்க்காரமும், காரமும் கலந்ததாக உள்ளது. கடற்கரை ஓரப்பகுதியில் உள்ள இத்தகைய இடங்களில் தென்னையும், சவுக்கும் பயிரிடப்படுகின்றன. பாலாறும் மற்ற நதிகளும் பாயும் பகுதிகள் வண்டல்மண் செழித்த இடங்களாக இருப்பதால் விவசாயத்திற்கு ஏற்றதாக அமைந்துள்ளது.

தொழிற்சாலை நடத்துவதற்கான கனிப்பொருட்கள் செங்கற்பட்டு மாவட்டத்தில் கிடைக்கின்றன. திருவள்ளூரிலும், திருமழிசையிலும் உள்ள பெரிய தொழிற்சாலைகள் அங்குக்கிடைக்கும் களிமண்ணை கனிப் பொருளாகப் பயன்படுத்துகின்றன. களிமண்ணைக் கொண்டு கட்டடப் பொருட்களும், மட்பாண்டங்களும், பீங்கான் பொருட்களும் தயாரித்திட வாய்ப்புள்ளன. வட்டாரத்தில் மொத்தம் 20 மில்லியன் டன்கள் களிமண் வகைப் பொருட்கள் படிந்துள்ளதாகக் கணக்கிடப்பட்டுள்ளது. சில இடங்களில் மொத்தமாக 315,000 டன்கள் அளவிற்குச் சுண்ணும்புக் கற்களும், கிளிஞ்சலும் கிடைக்குமென கண்டுபிடிக்கப்பட்டுள்ளது. இவைகள் சுண்ணும்பை மூலப் பொருளாகக் கொண்டு இயங்கும் தொழிற்சாலைகளுக்கு மிகவும் பயன்படுகின்றன. அண்மையில், துத்தநாகம், செம்பு ஆகிய கனிப்பொருள்களும் இவ்வட்டாரத்தில் அமையப் பெற்றுள்ளதாகக் கருதப்படுகிறது.

கடற்கரையை ஒட்டியுள்ள வயலூர், தில்லை, அத்திப்பட்டு, வள்ளூர், கோவலம், செய்யூர் சூணும்பேட்டை ஆகிய இடங்களில் ஒவ்வொரு ஆண்டும் டிசம்பர் முதல் செப்டம்பர் வரை உப்பு தயாரிக்கப்படுகிறது. சராசரியாக 120,000 டன் உப்பு இங்குத் தயாரிக்கப்படுகிறது. இது மாநிலத்தின் மொத்த உற்பத்தியில் 14 சதம் ஆகும். உப்பு உற்பத்தியின் மதிப்பீடு ரூ. 3.40 மில்லியன் என மதிப்பிடப்பட்டுள்ளது. ஜிப்ஸம் என்ற களிக்கல் உப்பு பயன்படுத்தப்படும் தொழிற்சாலைகளில் துணை மூலப் பொருளாகப் பயன்படுத்தப்படுகிறது.

வட்டாரத்தில் சென்னையையும், பாலாற்றையும் சுற்றியுள்ள பகுதிகள் நீர்வளம் மிக்க இடங்களாக விளங்குகின்றன.

இவ்வட்டாரத்தில் அனல் மின் நிலையங்கள் பேசின்பிரிட்ஜிலும் (117 மில்லியன் வாட் சக்தி), எண்ணூரிலும் (120 மில்லியன் வாட் சக்தி) நிறுவப்பட்டுள்ளன. மின்சக்தியைப் பெருக்கும் பொருட்டு எண்ணூர் அனல் மின் நிலையத்தில் கூடுதலாக 330 மில்லியன் யன் வாட் மின்சாரம் உற்பத்தி செய்யவும் திட்டமிடப்பட்டுள்ளது.

மொத்த மின்சக்தி உற்பத்தியில் 3/4 பங்கு வேளாண்மைக்கும், மீதி தொழிற்சாலைக்கும் பயன்படுத்தப்படுகிறது.

பரிசுச் சீட்டுகள்
வரிசையில் முதலிடம்!
76 வது
குலுக்கல்
கடந்த 75 குலுக்கல்களில்
379 லட்சாதிபதிகள் உருவாகியுள்ளனர்!
தமிழ்நாடு பரிசுச் சீட்டுத் திட்டத்தின்
முதல் குலுக்கலில் உருவாக்கப்பட்ட
லட்சாதிபதியைச் சந்தியுங்கள்.
இவர்தான் திரு. எஸ். பி. கண்ணுதல்
தமிழ்நாடு அரசு பரிசுச் சீட்டு
இன்றே வாங்குங்கள்
முதல் பரிசு ரூ. 1,00,000
(ஒவ்வொரு வரிசைக்கும்)
வளர்ந்து வரும் தமிழ்நாடு பரிசுச் சீட்டுத் திட்ட
லட்சாதிபதிகள் குழுவில் நீங்களும் சேர்ந்திடலாம்.
முதல் மற்றும் இரண்டாம் பரிசுக்குரிய எண்களுக்கு
முன்னும் பின்னும் உள்ள எண்களுக்கு ஆறுதல்
பரிசுகளும் மற்றும் பல பரிசுகளும் உண்டு.
குலுக்கல் நாள்: 31-5-1975
ஒரு பரிசுச் சீட்டின் விலை
ரூ. 1/- தான்!
செலவு ஒரு ரூபாய்
Rs. 1,00,000
வரவோ லட்ச ரூபாய்
இயக்குநர், தமிழ்நாடு பரிசுச் சீட்டு,
தமிழ்நாடு அரசு, சென்னை-600 002.
DIPR

குழாய்க் கிணறுகள் மூலம் விவசாய நிலங்களுக்கு நீர்ப்பாய்ச்ச இம்மின்சக்தி பயன்படுத்தப்படுகிறது. 1970-71-ஆம் ஆண்டில் 82,125 விசை ஏற்றங்கள் (Pump Sets) நிறுவப்பட்டு மின்சக்தியினுல்பயிர்த் தொழில் மேற்கொள்ளப்பட்டது.

சென்னை, செங்கற்பட்டு வட்டாரத்தின் சென்னைப் பெருநகர்ப் பகுதி நீங்கலாக, பொருளாதார அமைப்பு வேளாண்மையையே அடிப்படையாகக் கொண்டுள்ளது. வட்டார பரப்பில் 43 சதம் வேளாண்மைக்காகப் பயன்படுகிறது. வேளாண்மை செய்யப்படாத நிலப்பரப்பில் 5.3 சதவீதம் தரிசு நிலமாகவும், 4.3 சதவீதம் காடுகளாகவும், 17.7 சதவீதம் வேளாண்மைக்குப் பயன்படுத்தாத நிலமாகவும், செஞ்சி மற்றும் திண்டிவனம் வட்டங்களில் 50 சதத்திற்கும் மேலான நிலப்பகுதியில் பயிர்த் தொழில் நடைபெறுகிறது. சைதைப் பகுதியில் 32.9 சதமே வேளாண்மை செய்யப்படுகிறது.

வட்டாரத்தில் மொத்தப் பரப்பில் குளங்களின் மூலம் 80 சதமும், கிணறுகள் மூலம் 14.34 சதமும் நீர்ப்பாசனம் செய்யப்படுகிறது.

இங்கு விளையும் பயிர்களில் நெல் தலையாய பயிர் ஆகும். நிலக்கடலையும், கம்பும் மற்றும் கரும்பும் பெரும்பாலும் பயிரிடப்படுகிறது. ஆண்டொன்றுக்குச் சுமார் 3.21 மில்லியன் டன் நெல் உற்பத்தி செய்யப்படுகிறது. ஊத்துக்கோட்டை, புத்தூர், கோலண்டலூர் (திருவள்ளூர் வட்டம்), காஞ்சிபுரம் சிறு காவிரிப்பாக்கம், மற்றும் பிச்சிவாக்கம் (திருபெரும்புதூர் வட்டம்) ஆகிய இடங்களில் மாநில விதைப் பண்ணைகள் அமைக்கப்பட்டுள்ளன. நெல், வேர்க்கடலை போன்ற தானிய வகைகளையும், பருப்பு வகைகளையும், காய்கறி விதைகளையும் இப்பண்ணைகள் ஆராய்ந்து அமோக விளைச்சலுக்கு ஆலோசனை கூறுகின்றன. திருவள்ளூருக்கருகே திருக்குப்பம் கிராமத்தில் அரிசி ஆராய்ச்சி நிலையம் ஒன்று உள்ளது. மற்றும் வட்டார ஆராய்ச்சி நிலையம் ஒன்று திண்டிவனத்திற்கு அருகே நிறுவப்பட்டுள்ளது.

சென்னை செங்கற்பட்டு வட்டாரத்தின் நிலப்பரப்பில் 5 சதம் காடுகளாக உள்ளது. இது மாநிலத்தின் பரப்பில் காடுகள் 15.4 சதமாகும். இக்காடுகளில் பெரும்பாலும் முட்கள் நிறைந்த புதர்கள் காணப்படுகின்றன. இவைகள் எரிபொருளாகப் பயன்படுகின்றன. காடுகள் செங்கற்பட்டு, திருவள்ளூர், செஞ்சி, மற்றும் பொன்னேரி வட்டங்களில் காணப்படுகின்றன. இக்காடுகளில் இருந்து முந்திரிப்பருப்பும், பல பழவகைகளும் மரப்பட்டைகளும் கிடைக்கின்றன.

சென்னை செங்கற்பட்டு வட்டாரம் 210 கி.மீ. நீள கடற்கரை அமையப் பெற்றுள்ளது. மொத்த மீன் பிடிப்பில் 60 சதம் கடலைச் சார்ந்த பகுதிகளில் நடைபெறுகிறது. இம் மீன் பிடிப்பு ஆண்டிற்கு ரூ. 63.37 மில்லியன் தொகையை ஈட்டுகிறது. வட்டாரத்தில் அடையாறு, பூண்டி, மரக்காணம், செங்கற்பட்டு, ஆகிய இடங்களில் மீன் சேமிப்பு நிலையங்கள் உள்ளன. மேலும் இரண்டு படகு கட்டும் துறைகளும், ஆறு பனிக்கட்டி நிலையங்களும், குளிர்ப்பதன நிலையங்களும் சென்னையிலும் அதனைச் சுற்றியுள்ள பகுதியிலும் அமைக்கப்பட்டுள்ளன. இவை மீன் வளம் பெருக பெரிதும் உதவுகின்றன.

வட்டாரத்தில் மொத்தம் சுமார் 2.9 மில்லியன் கால் நடைகளும், 1.3 மில்லியன் கோழிகளும் உள்ளன. இவற்றால் ஆண்டொன்றுக்கு 130 மில்லியன் கிலோ கிராம் பாலும், 150 மில்லியன் முட்டைகளும் உற்பத்தி செய்யப் படுகின்றன.

சென்னை செங்கற்பட்டு வட்டாரத்தில் தண்ணீரும், மின் சக்தியும் கிடைப்பதாலும் துறைமுகம் அருகாமையில் அமைந்துள்ளதாலும், போக்குவரத்துச் சாதனங்கள் மிகுந்துள்ளதாலும், விற்பனை செய்வதற்கும் அங்காடிகள் இருப்பதாலும், சென்னை மாநகர்ப் பகுதியிலும், சென்னை பெருநகர்ப் பகுதியிலும் பலவிதத் தொழிற்சாலைகள் நிறுவப்பட்டுள்ளன. சென்னைப் பெருநகர் மிக வேகமாக முன்னேறி வருவதால் அதன் வளர்ச்சி வட்டாரத்தின் மற்றப் பகுதியில் தொழில் நிறுவனங்கள் இடம் பெறுவதை ஓரளவு தடை செய்கிறது. வட்டாரத்



தில் மொத்தம் 900 தொழிற்சாலைப் பகுதிகள் உள்ளன. இவற்றில் கனிப்பொருட்கள் மூலமாகக் கொண்ட தொழிற்சாலைகள் 276 ; பொறியியல் கனிப்பொருட்கள் மூலமாகக் கொண்ட தொழிற்சாலைகள் 276; பொறியியல் சம்பந்தப்பட்ட தொழிற்சாலைகள் 523; வேளாண்மை சம்பந்தப்பட்ட தொழிற்சாலைகள் 61 ஆகும். சென்னை மாநகரிலும் சைதாப்பேட்டை வட்டத்திலும், மட்டும் முறையே 586, 269 தொழிற்சாலைப் பகுதிகள் அமைந்துள்ளன. அம்பத்தூர், ஆவடி, மாதவரம், திருவொற்றியூர், எண்ணூர், பல்லாவரம் ஆகிய இடங்களில் பல முக்கியத் தொழிற்சாலைகள் ஒருங்கே அமைந்துள்ளன.

தொழிற்சாலைகள் வட்டாரமெங்கும் பரவி இருக்க வேண்டும் என்ற கொள்கைக்கிணங்க தொழிற்பேட்டைகள் நிறுவப்பட்டன. கிண்டியிலும், அம்பத்தூரிலும் இரு பெரும் தொழிற்பேட்டைகள் உருவாக்கப்பட்டுள்ளன. இவை தவிர, கக்கலூரிலும் திருவான்மியூரிலும் மின்சாரப் பொருட்களும், மாதவரத்தில் தோல் பொருட்களும் தயாரிக்கப்படும் தொழிற்பேட்டைகள் அமைக்கப்பட்டுள்ளன. பரம்பரையாக நடைபெற்றுவரும் தொழில்களை வளர்க்கும் பொருட்டு காஞ்சிபுரத்திலும், அரக்கோணத்திலும் தொழிற்பேட்டைகள் உருவாக்கப்பட்டுள்ளன. மற்றும் கீழ்க்கட்டளை, பூவிருந்தவல்லி, கடம்பத்தூர் ஆகிய இடங்களில் கைத்தொழில் வளர்ச்சிக்கென தொழிற்பேட்டைகள் திட்டமிடப்பட்டுள்ளன. எண்ணூரில் உந்துவண்டி இயந்திரப் பகுதிகள் தயாரிக்கும் தொழிற்பகுதியும், மாதவரத்தில் தோல் பொருட்கள் தயாரிக்கும் தொழிற்கூடமும் தனியார் தொழிற் பேட்டைகளாகச் செயலாற்றுகின்றன.

சென்னை-செங்கற்பட்டு வட்டாரத்தில் 9 சதவீதம் தொழிலாளர்கள் வணிகத் துறையில் ஈடுபட்டுள்ளார்கள். மொத்தம் பத்து இடங்களில் மாவட்ட வணிகக் குழுவினால் விற்பனை அங்காடிகள் நிறுவப்பட்டுள்ளன. இவைகள் மூலம் நிலக்கடலை, எள், நெல், வெல்லம் ஆகிய பொருட்கள் விற்பனையாகி ஆண்டொன்றுக்குச் சுமார் ரூ. 8.05 மில்லியன் ஈட்டித் தருகின்றன. தவிரவும், வட்டாரத்தில் மொத்தம் 41 விற்பனைச் சங்கங்களும், 49 வாரச் சந்தைகளும், 282 வங்கிகளும் பல்வேறு பகுதிகளில் அமைந்துள்ளன. இவை வணிகத் துறையில் வளர்ச்சி பெற முன்னோடியாக இருக்கின்றன.

சென்னை-செங்கற்பட்டு வட்டாரத்தின் தலைவிகித வருமானம் ரூ. 630 என 1971-ம் ஆண்டு கணிக்கப்பட்டுள்ளது. (மாநிலத்தின் தலைவிகித வருமானம் ரூ. 606 ஆகும்). சென்னைப் பெருநகர்ப் பகுதியைத் தவிர மற்ற பகுதியில் வட்டாரத்தின் வருமானம் மாநிலத் தலைவிகித வருமானத்தைவிட மிகக் குறைந்ததாகும். இது வட்டாரப் பொருளாதாரத்தின் பின்தங்கிய நிலையைக் காட்டுகிறது.

மக்கட்தொகையும், செறிவும்:

1971-ஆம் ஆண்டு கணிக்கப்பட்ட மக்கட்தொகைக் கணக்குப்படி சென்னை-செங்கற்பட்டு வட்டாரத்தின் மக்கட்தொகை 6.856 மில்லியனாக இருந்தது. இதில் 3.62 மில்லியன் (மொத்த மக்கட் தொகையில் 53 சதவீதம்) நகரப் பகுதியில் இருப்பதாகக் கணக்கிடப்பட்டது. மாவட்டத்தின் 50.5 சதவீத மக்கள் சென்னைப் பெருநகர்ப் பகுதியில் வசிக்கிறார்கள். இது வட்டாரத்தின் நகரமக்கட் தொகையில் 87.64 சதமாகும். வட்டாரத்தின் மக்கட்செறிவு சதுர கிலோ மீட்டருக்கு 527 பேர் ஆகும். சென்னைப் பெருநகரின் மக்கட்செறிவு சதுர கிலோ மீட்டருக்கு 3,000 பேர் ஆகும்.

1971-ஆம் ஆண்டு மக்கட்தொகைக் கணக்கின்படி 45.9 சதம் கல்வி அறிவு பெற்றவர்கள் இருப்பதாகக் கணிக்கப்பட்டுள்ளது. (மாநிலத்தில் படித்தவர்கள் 39.4 சதம் ஆகும்). கல்வியறிவு பெற்றவர்களில் 64.6 சதம் பேர்கள் ஆண்கள் எனவும் மீதி பெண்கள் எனவும் கணக்கிடப்பட்டுள்ளது. வட்டாரத்தின் மொத்தக் கல்வி அறிவு பெற்றவர்களில் 60.5 சதம் சென்னை மாநகரிலும், சைதாப்பேட்டை வட்டத்திலும் பரவியுள்ளனர். இவ்வட்டார மக்கட்தொகை வளர்ச்சி, 1901-ல் 2,688,628 லிருந்து 1971-ல் 6,856,851 ஆக பெருகியுள்ளது. 1961-71-ல், அதிக அளவில் (23.9 சதம்) வளர்ச்சி பெற்றுள்ளது. சைதை வட்டம் 1961-71-ல் 75.93 சதம் அதிக வளர்ச்சி பெற்றுள்ளது. (சென்னை 42.81 சதம்). வந்தவாசி செய்யாறு வட்டங்கள் 10 சதத்திற்கும் குறைவான வளர்ச்சியையே குறிப்பிடுகின்றன.

> மேட்டிலிருந்து பள்ளத்தை நோக்கிப் பாய்ந்த தண்ணீர் மறுபடியும் மேட்டிற்கு வருவதில்லை. அப்படித்தான் காலமும், ஒரு முறை சென்று விட்டால் திரும்பாது.
>
> —சாஸர்.

மக்கட் குடியேற்றம் : (Migration)

1951-61 ஆண்டுகளில் சென்னைப் பெருநகர்ப் பகுதியில் 60 இலட்சம் மக்கள் மாநிலத்தின் பல்வேறு பகுதிகளிலிருந்து வந்து குடியேறியுள்ளனர். செங்கை மாவட்டத்தில் 11.26 சதம் குடிபெயர்ந்தோர் கிராமங்களிலிருந்து வந்தோர். சென்னைப் பெருநகர்ப் பகுதியைச் சார்ந்தபகுதிகளிலிருந்தும், நகரக் குடியேற்ற மக்கள் மிகத்தொலைவிலிருந்தும் வந்தோராவர்.

1971 கணக்கீட்டின்படி 2,238,203 பேர் தொழிலாளிகள். இது மொத்த மக்கட்தொகையில் 32.65 சதமாகும். இவர்களில் 84.0 சதம் ஆண்கள். 47.15 சதம் வேளாண்மைத் தொழிலும், 17.55 சதம் தொழிற்சாலைகளிலும் இருக்கின்றனர். நகர்ப் பகுதிகளில் 29.26 சதம் தொழிற்சாலைகளில் வேலை செய்வோர். மற்றும் 6.86 சதமே வேளாண்மையில் ஈடுபட்டிருப்போராகும். மாறாக கிராமப்பகுதிகளில் 82.0 சதம் வேளாண்மையில் ஈடுபட்டுள்ளனர்.

இவ்வட்டாரத்தில் 8,965 கிலோமீட்டர் நீளத்திற்குச் சாலைகள் அமைக்கப்பட்டுள்ளன (இதில் 196 கி.மீ. தேசிய நெடுஞ்சாலைகள் ஆகும்). கல்கத்தா, பெங்களூர், திண்டுக்கல் செல்லும் மூன்று தேசிய நெடுஞ்சாலைகளும், சென்னை மாநகரிலிருந்து பிரிந்து செல்லுகின்றன.

மாநிலத்தின் மட்டத்தில் ஒரு சதுர கிலோ மீட்டருக்கு 0.56 கிலோ மீட்டர் சாலை இருக்கையில் சென்னை-செங்கை வட்டாரத்தில் 0.67 கிலோ

மீட்டர் சாலை உள்ளது. மொத்தம் 1,969 உந்து ஊர்திகள் இவ்வட்டாரத்தின் வெவ்வேறு பகுதியிலுள்ளவர்களின் பயணத்திற்குப் பயன்படுகின்றன. ஆறு கிலோ மீட்டருக்கு மேல் சாலைகள் மூலம் அடைய முடியாத பகுதிகள் பொன்னேரி மற்றும் மதுராந்தகம் வட்டாரங்களில் 26.88 சதுர கிலோ மீட்டருக்கு உள்ளன.

சென்னை-செங்கற்பட்டு வட்டாரத்தில் 174.4 கி.மீ. நீளத்திற்கு பிராட்கேஜ் இருப்புப் பாதையும், 209.4 கிலோ மீட்டர் நீளத்திற்கு மீட்டர்கேஜ் இருப்புப்பாதையும் அமைந்துள்ளன. மொத்த வட்டாரப் பரப்பில் 47 சதம் இருப்புப் பாதையால் அடையமுடியாத பகுதியாக உள்ளது.

நம் நாட்டிலுள்ள முக்கியத் துறைமுகமான சென்னைத் துறைமுகம் மக்கள் பயணத்திற்காகவும், பொருட்களை ஏற்றுமதி செய்யவும், இறக்குமதி செய்யவும் பயன்பட்டு வருவதோடு, மற்ற உலகப் பெருந் துறைமுகங்களுடன் தொடர்பு கொண்டு வருகிறது. மற்றும் பக்கிங்ஹாம் கால்வாய் வட்டார நீர்வழிப் போக்குவரத்தில் சிறிதளவே முக்கியத்துவம் பெற்றுள்ளது.

நாட்டின் தென்பகுதியில் அமைந்துள்ள மிக முக்கியமான விமான நிலையங்களில் சென்னை மீனம்பாக்கம் விமான நிலையம் முதலிடம் வகிக்கிறது. நாட்டின் இதர பெருநகர் விமான நிலையங்களுடனும் மேனாட்டு விமான நிலையங்களுடனும் இந்நிலையம் இணைக்கப்பட்டுள்ளது.

வட்டாரத்தில் மொத்தம் 894 அஞ்சல் அலுவலகங்கள் உள்ளன. இவற்றில் 123 அலுவலகங்களில் தந்தி வசதி கிடைக்கின்றன. சென்னைப் பெருநகர்ப் பகுதியிலும், மற்றும் வட்டாரத்தில் உள்ள 32 நகரங்களிலும் தொலை பேசி வசதிகள் உள்ளன.

சரித்திரச் சிறப்புடையதும் மற்றும் உல்லாசப் பயணிகளைக் கவரக் கூடியதுமான பல இடங்கள் வட்டாரத்தில் உள்ளன. இவற்றில் முக்கியமாக சென்னை மாநகரம், மாமல்லபுரம், கோவளம், வேடந்தாங்கல், செஞ்சி, காஞ்சிபுரம் ஆகிய இடங்கள் நம் நாட்டில் பயணிகளையும், வெளிநாட்டாரையும் மிகவும் கவரும் வகையில் அமைந்துள்ளன. இவ்விடங்களில் மேலும் வசதிகளை பெருக்கிட வேண்டும்.

வட்டாரத்தில் கீழ்க்காணும் சமுதாய வசதிகள் உள்ளன :

(அ) கல்வி நிலையங்கள்:

தொடக்கப்பள்ளிகள்—3,305

உயர்நிலைப் பள்ளிகள் 1,326
கலை மற்றும் விஞ்ஞானக் கல்லூரிகள்—30

உயர்தரத் தொழிற் கல்லூரிகள்—23.

(ஆ) மருத்துவ மனைகள் :

வட்டாரத்தில் 240-க்கும் மேற்பட்ட வெவ்வேறு சுகாதார நிலையங்களும் மருத்துவமனைகளும் மக்களின் நலத்தைப் பேணுகின்ற வகையில் பல வசதிகளுடன் நிறுவப்பட்டுள்ளன. இம்மருத்துவமனைகள் மொத்தத்தில் 10,149 படுக்கை வசதிகள் கொண்டதாக விளங்குகின்றன.

வட்டாரத்தில் உள்ள மொத்த குடியிருப்புகள் 1,350,253 ஆகும். இக்குடியிருப்புகளுக்கு மொத்தம் 1,134,406 வீடுகள் உள்ளன. அதாவது, 1,000 குடியிருப்புகளுக்கு 840 வீடுகள் வீதம் வீட்டுவசதி உள்ளது.



வட்டாரத்தொழில் வளர்ச்சி விவசாயத் தொழிலை ஒட்டியும் சென்னைப் பெருநகர்ப் பகுதியில் அமையும் பெருந்தொழில்களுக்குரிய துணைத் தொழில்களாகவும் இருக்க வேண்டும். இதனால் ஒவ்வாத நிலப்பயன்கள் சென்னைப் பெருநகர்ப் பகுதியில் இடம் பெறுவதைத் தடுக்கவும் வட்டாரத்தின் சீரான பொருளாதார வளர்ச்சியை ஏற்படுத்தவும் முடியும்.

வட்டார வளர்ச்சியை மேற்கூறியவாறு திட்டமிடும்போது போக்குவரத்து அமைப்பைக் கருத்திற்கொண்டு மக்கள் பயணத்திற்கும், பொருட்களை எடுத்துச் செல்ல பயன்படும் வகையிலும், வெவ்வேறு சிறு நகரங்களைச் சென்னைப் பெருநகர்ப் பகுதிகளுடன் இணைப்பதாகவும் திட்டமிடப்பட வேண்டும்

திட்டத்தில் சுற்றுலா வளர்ச்சி மிகவும் இன்றியமையாததாகும். சென்னைப் பெருநகர்ப் பகுதியில் சுற்றுலா வளர்ச்சிக்கான வசதிகள் மாநிலத்தின் இதர இடங்களைவிட அதிகமாக உள்ளன. உல்லாசப்பயணிகளுக்கு சென்னை மாநகரம், காண வேண்டிய இடங்களில் மிக முக்கியமாக விளங்குகிறது. மகாபலிபுரம், வேடந்தாங்கல், காஞ்சிபுரம், செஞ்சி போன்ற இடங்கள் பயணிகளைக் கவரும் இதர இடங்களாகும். மேற்கூறிய இடங்களையும், மைலம், கோவளம் போன்ற தகுதி வாய்ந்த இடங்களையும் வளர்க்கும் திட்டத்திற்கான கோட்பாடு உருவாக்கப்பட வேண்டும்.

வட்டாரத்தின் கடந்தகால மக்கட்தொகைப் பெருக்கத்தை அடிப்படையாகக் கொண்டும், சராசரி மக்கள் தொகைப் பெருக்கமான 17.5 சதத்தையும் கருத்திற்கொண்டு 1991-ம் ஆண்டிற்கான மக்கட்தொகை 10 மில்லியன் என மதிப்பிடப்பட்டுள்ளது.

சென்னைப் பெருநகர்ப் பகுதியின் வளர்ச்சியையும், அதன் ஈர்ப்புச் சக்தியையும் கருதி, 1991-ஆம் ஆண்டு வட்டாரத்தின் மக்கட் தொகையில் 65 சதம் (சென்னைப் பெருநகர்ப் பகுதியைச் சேர்த்து) நகரமாகவும், 35 சதம் ஊராகமாகவும் அமையுமாறு திட்டமிட்டு மதிப்பீடு செய்யப்பட்டுள்ளது.

நில் கவனி புறப்படு





"அதோ, ஒருவர் சாலையின் குறுக்கே அவசர அவசரமாக ஓடுகிருரே!''

''ஆமாம். எதிரும் புதிருமாக வண்டிகள்கூட நிறைய வந்து கொண்டிருக்கின்றன. அப்படியென்ன அவசரமோ அவருக்கு!''

''பஸ்ஸைப் பிடிக்க வேண்டுமாம்..அதனல்தான் இப்படி ஆலாய்ப் பறக்கிருர்....''

''அதற்காக இப்படிக் கண்ட இடத்திலே குறுக்கே சென்ருல் விபத்துக்குள்ளாக மாட்டாரா அவர்?''

''அதைப்பற்றி அவருக்குக் கொஞ்சங்கூடச் சிந்தனை இல்லை. நேரத்துக்குப் பஸ்ஸைப் பிடிக்க வேண்டும், அவ்வளவுதான்''

''அப்படியானல், அவரும் அவ்வளவுதான்!''

உண்மைதான். சாலையின் குறுக்கே செல்வதற்காகத் தனி வழிகள் இருக்கின்றன. சாலையின் குறுக்கே போடப்பட்டிருக்கும் வெள்ளைக்கோடுகள் வழியாகவோ அல்லது சுரங்கப் பாதை வழியாகவோ சாலையைக் கடந்து செல்ல வேண்டும். கண்ட இடங்களில் கண்டபடி செல்பவர்கள் நிச்சயம் விபத்துக்குள்ளாவார்கள் என்பதை அன்ருடச் செய்தித்தாள்கள் நமக்கு எச்சரிக்கின்றன அல்லவா?

ஓடும் பேருந்திலிருந்து இறங்குதல், படிகளில் நின்று கொண்டு பயணம் செய்தல், ஸ்கூட்டரில் குழந்தை குட்டிகளோடு செல்லுதல், சைக்கிளில் இருவர் அல்லது மிகுந்த பாரத்தை ஏற்றிச் செல்லுதல் போன்ற செயல்களெல்லாம் ஆபத்தையே விளைவிக்கும் என்பதை நாம் கவனத்தில் கொள்ள வேண்டும்.

அவசரம்

அஜாக்கிரதை

அலட்சியப்போக்கு

இவற்றின் காரணமாக வளர வேண்டிய சின்னஞ்சிறு பிஞ்சு, சாலை விபத்தெனும் சாக்காட்டை அடைகிறது.

படித்துப் பட்டம் பெற வேண்டிய பள்ளி மாணவன், பாதியிலேயே வாழ்க்கையை முடித்துக் கொள்கிருன்.

குடும்பத்தைக் காப்பாற்ற வேண்டிய பெரியவரோ அகால மரணத்துக்கு ஆளாகிருர்.

இந்நிலை நீடிக்கலாமா ?

சென்னையில் சாலை விபத்துக்களில் இறப்போரின் எண்ணிக்கை ஆண்டுக்காண்டு அதிகரித்து வருகிறது.

1971-ஆம் ஆண்டில் மோட்டார் சைக்கிள், ஸ்கூட்டர் சாலை விபத்துக்களில் மாண்டவர்களின் எண்ணிக்கை 13; 1972-ல் 18; 1973-ல் 11; 1974-ஆம் ஆண்டில் 21 பேர் இறந்துள்ளனர்.

இந்தநிலை அகலவேண்டுமானல்-சாலை விபத்துக்களைக் குறைக்க வேண்டுமானல் வண்டி ஓட்டிகள் மட்டுமல்ல, சாலையில் வருவோர் போவோரும் கண்டிப்பாகச் சாலை விதிகளைக்கடைப்பிடிக்க வேண்டும்.







சொல்லும் பொருளும்

காழி சி. கந்தையன்

நாவரங்கள் எல்லாம் ஒன்று போல் இருப்பதில்லை. மண மிக்க மலரால் மனத்தைக் கவர்வன சில. சுவை மிக்க காயாலும் கனியாலும் பயன் தருவன சில. மண்ணுள் தங்கள் பயனை மறைத்து வைப்பனவும் உண்டு. அகழ்ந்து தேடுவோர்க்கே அவற்றின் பயன் கிட்டும். தமிழ்ச் சொற்கள் சிலவும் அவ்வாறு அமைந்து கிடக்கின்றன. அவற்றுள் சிலவற்றை ஆய்ந்து தெளிவோம்.

கோடையில் மக்கள் நாடும் குளிர் பானங்களில் நன்னாறி சர்பத்தும் ஒன்று. நன்னாறி என்பது வாய்க்கால் வரப்புகளில் கூடக் காணப்படும் ஒரு வகைக் கொடியின் வேராகும். நல்ல நாற்றத்தை உடையது என்ற பொருளில் நன்னாறி என்ற பெயர் அமைந்தது. இதனை எண்ணிப் பாராது நன்னாரி எனப் பிழையாக ஆண்டு வருகின்றோம்.

சமையற் கலையில் வல்ல பெண்கள் தக்காளியோ எலுமிச்சையோ இல்லாமலேயே இனிய மிளகுச் சாறு தயாரித்து விடுவர். ஆயினும் அதற்கு மணம் ஊட்ட கறிவேப்பிலையை நாடுவர். பழந்தமிழர் இதன் மரத்தை வேம்பின் வகையாகக் கொண்டனர். வேம்பின் இலை வேப்பிலை. ஆனால் இவற்றின் காய்கள் வேம்பின் பிற வகைகளின் காய்களைப் போலன்றி வடிவத்தில் மாறுபட்டு விளங்குவனவாகும். இவை உருண்டை அல்லது கோள வடிவுடையன. வேப்பங்காய்களோ நீண்ட வடிவுடையன. மிளகின் காய்களும் கறிவேப்பிலையின் காய்களும் வடிவத்தால் ஒப்புமை உடையன. எனவே மிளகு போன்ற காய்களை உடைய வேம்பின மரத்திற்குக் கறிவேம்பு என்று பெயரிட்டனர். கறி என்பது மிளகைக் குறிக்கும். காய்கறி என்னும் தொடரில் உள்ள கறியும் மிளகையே குறிக்கும். பழந்தமிழர் மிளகைச் சமையலில் பசுமையாகவும் பயன்படுத்தினர். முந்நூறு ஆண்டுகட்கு முன் இறக்குமதியான மிளகாய் பெற்ற பெரு வாழ்வால், மிளகு ஒடுங்கிவிட்டது. நம்மில் பலர் பச்சை மிளகைப் பார்த்ததும் இல்லை.

பதிதல் என்ற சொல்லிற்குத் தங்குதல், ஊன்றல் என்ற பொருள்கள் உண்டு. பழங்குடி மக்கள் உணவிற்காக அடிக்கடி இடம் பெயரும் நிலையிலிருந்தனர். பின்னர் ஆற்றின் பயனையும், உழவின் பெருமையையும் உணர்ந்து மருத நிலங்களை உருவாக்கி அங்கு நிலைத்துத் தங்கி வாழத் தலைப்பட்டனர். நிலைத்தல், தங்குதல் என்ற பொருளில் பதி என்ற சொல் மருத நில ஊர்களைக் குறிக்கப் பயன்பட்டது. வள்ளுவர் குறள் 1116-ல் பதி என்ற சொல்லை 'ஓரிடத்தில் நிலைத்தல்' என்ற பொருளில் ஆண்டுள்ளார். அவருக்குப் பிற்பட்டவரான இளங்கோ அடிகள் 'பதியெழு அறியாப் பழங்குடி' எனக் குறிப்பது காண்கிறோம். இங்கும் தாம் நிலைத்த இடத்தினின்றும் எக்காலத்தும் எழுந்து செல்லுதலை யறியாத பழங்குடி எனப் பொருளமைதல் உற்றறியலாம். எனவே ஊரைக் குறிக்கும் பதியென்னும் சொல்லும் தமிழ்ச் சொல்லே என்பது தெளிவு. இல்லத்தின் தலைவி இல்லாள் எனப்படுதல் போல பதியின் தலைவன் பதியெனப்பட்டான். அக்காலத்து ஊர்த் தலைவர்களாக ஆண்களே இருந்தனர் போலும்.

இச்சொல் பரிணாமத்தில் பொருள் சுருங்கி, வீட்டுத் தலைவனாகிய கணவனைக் குறிக்கலாயிற்று. ஆகவே இதனைப் பிறமொழிச் சொல்லாகக் காட்டச் சதி ஒன்று உருவாயிற்று. 'சதிபதி'கள் இவ்வாறே உருவாகினர். இனி கணவன், கணபதி என்ற சொற்களின் பிறப்பையும் எண்ணுவோம். கணம் என்பது கூட்டம், தொகுதி என்ற பொருள்களைத் தரும். (கணமொழிக் கணிதம் கண்டு சிலர் மருளுகின்றனர்.) கணம் என்பது சங்க இலக்கியங்களில் மிகுதியும் ஆளப்பட்டுள்ள சொல்லாகும். களிற்றுக் கணம், மான் கணம், எனப் பல சொற்களை அவற்றுள் காணலாம். மக்களும் இவ்வாறு கணங்களாகத் தொகுதிகளாகக் கூடி வாழ்ந்தனர். கணத்தின் தலைவனைக் குறிக்க எழுந்த சொல்லே கணவன் என்பது. இதுவும் பிற்காலத்தில் பொருளில் சுருங்கி வீட்டுத் தலைவனைக் குறிக்கலாயிற்று. கணபதி என்ற சொல்லும் அது உருவான காலத்தில் கணத்தின் தலைவன் என்ற பொருளில் ஆளப்பட்டதேயாகும்.

கலியாணம் என்பதும் தமிழ்ச் சொல்லேயாகும். கலி என்பது ஓசை, ஒலி எனப் பொருள் தரும். ஓசைச் சிறப்புடைய பாடல் வகை கலிப்பா எனப்பட்டது. யாணர் என்பது புது வருவாயாகும். இதன் மூலச் சொல் புதுமை எனப்பொருள் படும் யாணம் என்பதாம். தமிழர், தாம் கைக் கொண்டிருந்த களவு மணத்தினின்றும் மாறுபட்ட புதுமையான மண முறையைக் கொண்ட போது அதனைக் கலியாணம் என்று குறித்தனர். அகம் 86-லும் ஆரவாரமும், புதுமையான சடங்குகளும் மிக்க மண விழா பற்றிய செய்திகளையறியலாம்.

உள்ளத்துள் சென்று நிலைபெறாது ஏதோ ஒரு காரணம் பற்றித் தோன்றி மறையும் சிறிய வெறுப்பே அருவெறுப்பாகும். அருமை என்பதற்கு அரியது என்பது போலவே சிறியது என்னும் பொருளும் உண்டு. இதனை அருவருப்பு என எழுதுவது பிழையாகும்.

நகுதல், சிரித்தல். கண்ணால் நகுதலைச் செய்பவள் கண்ணகி. இப் பெயரின் இயல்பான இப் பொருளை அறியாது சிலர் மயங்குவர். நகு என்னும் முதனிலைத் தொழிற் பெயர், பெயர்ச் சொல் விகுதியினையேற்று நகியாயிற்று. இங்கு ஒற்று இரட்டிக்க வேண்டும் என எண்ணத் தேவையில்லை. மொழியின் அழகையே பெயர்ச் சொற்களில் போற்ற வேண்டும். கண் நகி கண்ணகி என்க.

அரன், அரி, அரர் என்ற சொற்கள் பழந்தமிழில் — அதாவது திராவிட இனமொழிகளின் மூல மொழியில்—இருந்தனவாகும். சங்கரன், தாமோதரன், அரி அரன், என்பனவும், சங்கரி, கோதாவரி, மாதரி, மண்டோதரி என்பனவும் தமிழ்ச் சொற்களே. அவை

போலவே வானரர் என்பதும் தனித் தமிழ்ச் சொல்லாகும். இது வான் அரர் எனப் பகுக்கப்பட வேண்டும். இதனைப் பிழையாக வால் நரர் எனப் பகுத்தமையாலே, நம் முன்னோர்களுக்கு வாலை வளர்த்து நம்மை நாம் தாழ்த்திக்கொண்டுள்ளோம். நம் முன்னோர்கள் எக்காரணம் பற்றியோ தம்மை வானரத்தோடு இணைத்துப் பார்த்து மகிழ்ந்தனர். வானவர், வான வரம்பர் போன்ற சொற்களையும் காண்க.

இவ்வாறே சங்க காலத்தில் அருள்நன் என்றோர் புலவர் இருந்தார். இவர் தம் சிறப்பையும் சங்கத்தோடு இவர்க்கிருந்த தொடர்பையும் கருதிச் சங்க அருணர் எனப் பிறரால் வழங்கப்பட்டார். இச் சொல் உடம்படு மெய் பெற்றுச் சங்கவருணராகி, வடமொழிப் பெயராக எண்ணப் படுகின்றது.

சிலருடைய கண்களில் காணப் பெறுவன போன்ற மெல்லிய கோடுகளை அரி என்ற சொல் குறிக்கும். வெண்மையான கோடுகளை உடைய காய் வெள்ளரிக் காயாகும். மெல்லிய கோடுகளும் கூரிய சுருக்குகளும் உடைய காய் கருக்கரி எனப்படும். இவற்றைச் சிதைத்து 'வெள்றி' என்றும் 'கக்கரி' என்றும் வழங்குதல் தவறாகும்.

கார்த்திகை மீன்களைக் கண்டவர் அக்குழுவின் வடிவம் கட்டில் கால் போல் அமைந்து உள்ளதை அறியலாம். இவற்றைச் சிற்றூர்களில் முதியவர் சிலர் கட்டில் கால் மீன்கள் என்றே வழங்குவர். திகை என்பது திசையின் மறுவடிவம் என்று எண்ணுகின்றோம் இது பிழை. திகை என்னும் தமிழ்ச் சொல் கட்டிலைக் குறிக்கும். கட்டில் நீண்ட சதுரமாக நான்கு பக்கங்களை உடையதாக உள்ளதால் காலப்போக்கில் திகை என்பதற்கு நான்கு என்ற பொருளும் அமைந்திருக்க வேண்டும். கோண திசைகளை முதலில் எண்ணியிருக்க மாட்டார். நேர்த் திசைகளே முதலில் எண்ணப் பட்டிருக்கும். எனவே திகை என்பது கட்டிலிலிருந்து நான்கிற்கும், நான்கிலிருந்து திசைக்கும் ஆகி வந்துள்ளது. 'திகை முக வேழம்' என்பது போல இது திசையைக் குறிப்பதை எல்லாரும் அறிவோம். ஆனால் இது முதலில் கட்டிலைக் குறித்தது என்பதற்கு என்ன சான்று என்று வினவினால் இரண்டு சான்றுகளைக் கூற இயலும். ஒன்று கார்த்திகை மீன்களின் தோற்ற வடிவம். மற்றொன்று புறநானூற்றில் இடம் பெற்றுள்ள இரண்டு மன்னர்களின் அடைமொழிகள். சோழன் இலவந்திகைப் பள்ளித் துஞ்சிய நலங்கிள்ளி, பாண்டியன் இலவந்திகைப் பள்ளித் துஞ்சிய நன்மாறன் என்னும் இரு மன்னர்களின் பெயர்களிலும் காணப்பெறும் இலவந்திகைப் பள்ளி என்பது இலவம் பஞ்சு பாவிய கட்டிலை உடைய பள்ளி என்றே பொருள்படும். கட்டில் போன்ற வடிவத்தோடு கார் காலத்தில் எடுப்பாக நடு வானில் காட்சி தருவனவாகிய மீன்களைக் கார்த்திகை மீன்கள் என்று குறித்தனர் என்பது என் கருத்து. அறிஞர் மேலும் ஆய்ந்து தெளிக.

இதுகாறும் கருதியவற்றால் சில சொற்களின் சரியான வடிவங்களை அறிந்தோம். சில சொற்கள் தனித் தமிழ்ச் சொற்களே என்பதும் தெளிந்தோம். இனியேனும் இவற்றைப் பிழையாக எண்ணாமலும் எழுதாமலும் இருப்போமாக!

குளிருடன் ஜுரம் இருந்தால் மலேரியாவாக இருக்கலாம்





மலேரியாதானா என்பதை அறிய உடனே உங்களுடைய ரத்தத்தை பரிசோதனை செய்து கொள்ளுங்கள். சோதனைக்காக சுகாதார ஊழியர் ஒரு துளி ரத்தமே எடுப்பார். மலேரியாவாக இருந்தால் உங்களுக்கு உடனடியாக சிகிச்சை கிடைக்கும்.

எல்லா ஆதார மருத்துவ கேந்திரங்களிலும், ஆஸ்பத்திரிகளிலும்

ரத்த சோதனைக்காக இலவசவசதிகள் உண்டு.

சுகாதார இலாகா, மத்திய சுகாதார, குடும்பக் கட்டுப்பாடு அமைச்சகம்

davp 74/461

முத்திரை பதித்த முழுநிலா விழா!

— சி. நல்லரசு

அலையடித்துப்போன பூம்புகாரை வலைஎடுத்து மீட்டு வந்தார் கலைஞர் என வையகம் வியந்து பார்க்கிறது! விதந்து வாழ்த்துகிறது! புனல் கொண்ட பூம்புகாரைப் புதுப்பித்துப் புத்தெழில் ஊட்டித் தமிழ்க்குலம் போற்றிட முத்தமிழ் விழா எடுத்து மூவேந்தர் பெரும்புகழை மீட்டு வந்தார், நம் தமிழனை பெற்றெடுத்த கலைஞர் என்பதைப் பூம்புகாரில் உயர்ந்து நிற்கும் கற்கோவில்கள் உலகுக்கு உணர்த்திக் கொண்டிருக்கின்றன.

ஏப்ரல் திங்கள் 25-ஆம் நாள் சித்திரைத் திங்களின் முத்திரை தாங்கிய முழுநிலா நாளில் முத்தமிழ் விழா! முந்திய நாளிலிருந்தே வீரங்கொள் கூட்டம் விழாக்காண விரைந்து கூடிற்று.

1973-ஆம் ஆண்டு சிலப்பதிகாரக் கலைக்கூடம் திறக்கப்பட்டபோது கூடிய கூட்டத்தைக் கண்ட பலருக்கும் இரண்டாண்டு இடைவெளிக்குப் பிறகு நடைபெறும் இந்த விழாவுக்கு அந்தக் கூட்டம் வருமா என்ற ஐயம் இருந்தது. இந்த ஆண்டென்ன, இனி எந்த ஆண்டும், வெள்ளம் போல் மக்கள் கூட்டம் உள்ளத்தால் ஒன்றி நின்று, நமது புகழை என்றென்றும் காத்து நிற்கும் என்பதை உறுதிப்படுத்திவிட்டது இந்த விழா.

வானம் பொய்த்திட, ஊரெங்கும் வறண்டிட, ஆறும் காய்ந்திட, அனல் பரந்து நின்றிட்ட நிலையிலும், தமிழ் மக்களின் உள்ளத்தில் தமிழ்ப் புனல் பரந்து, புறத்திலுள்ள அனல் தணித்த காரணத்தால் பொங்கி எழும் ஆர்வத்துடன் பூம்புகார் வந்துவிட்டனர். எங்கெங்கு பார்த்தாலும் மக்கள் கூட்டம். எப்பக்கம் திரும்பினும் தமிழுணர்வு.

நாயன வேந்தர் திருவெண்காடு சுப்பிரமணிய பிள்ளை அவர்களின் நாயன இசையுடன் விழா துவக்கப் பெற்றது.

செய்தி-மக்கள் தொடர்புத் துறையின் துணை இயக்குநர் கவிஞர் கருணானந்தம் அவர்கள் சிலப்பதிகார இசைவிருந்து வழங்குமாறு குடந்தை சுந்தரேசனார் அவர்களையும், வரவேற்புரை நல்குமாறு மாண்புமிகு செய்தித்துறை அமைச்சர் மு. கண்ணப்பன் அவர்களையும் கேட்டுக் கொண்டார்கள்.

அதன்பின்னர் குடந்தை சுந்தரேசனாரின் சிலப்பதிகாரத் தேனிசை விருந்து கிடைத்தது. அடுத்து மாண்புமிகு செய்தித் துறை அமைச்சர் கண்ணப்பன் அவர்கள் வரவேற்புரை வழங்கினார்கள். வரவேற்புரையில் அவர் குறிப்பிட்டார்:

''தஞ்சைப் பெரிய கோயிலில் வராகி ஆலயத்தைக்கட்டி, பிறகு நமது முதல்வர் அவர்கள் ராஜ ராஜ சோழன் சிலை வைத்தால் தொன்மை கெட்டுவிடும் என்று சொன்ன மத்திய அரசு, வராகி சிலை அமைத்து அதற்குக் கோயிலும் கட்டியதால் தொன்மை கெடவில்லையா? என்று கேட்ட பின்னர், அந்தக் கோயிலை இடித்து விட்டு வேறு கட்டினார்கள் என்ற செய்தியை நாம் பார்க்கிறோம். தமிழ் நாட்டிலே அறநிலையத்துறையின் சார்பில் ஆயிரக்கணக்கான கோயில்களுக்கு நாம் திருப்பணி செய்கிறோம்.

''இந்த அரசு, காரைக்குடியில் தமிழ்த்தாய்க்குக் கோயில், சென்னையில் வள்ளுவர் கோட்டம், பாஞ்சாலங்குறிச்சியில் கட்டபொம்மன் கோட்டை, இங்கே பூம்புகார் புதுப்பொலிவுடன் விளங்குவது போன்ற நல்ல பல காரியங்களையெல்லாம் ஆற்றிக்கொண்டிருப்பதை நீங்கள் எல்லாம் அறிவீர்கள்.''

அதன்பின்னர் உரைவேந்தர் சித்தாந்த கலாநிதி ஔவை துரைசாமிப்பிள்ளை அவர்கள் சிறப்புரை ஆற்றினார்கள். அப்போது அவர்கள் குறிப்பிட்டார்கள்:

'இரண்டாயிரம் ஆண்டுகளுக்கு முன்பு பூம்புகார் நகரம் எந்த அளவு பொலிவுற்றிருந்ததோ அந்த அளவு இங்கே எழில் தேங்கியிருப்பதை நாம் காண்கிறோம். இந்த அரசுபோல் இப்படிச் செய்ய வேறு எந்த அரசாலும் முடியாது. அரியன செய்துவரும் இன்றையத் தமிழக அரசு என்றென்றும் நின்று நிலவ வேண்டும்''

சித்தாந்த கலாநிதியின் வாழ்த்துரைக்குப் பிறகு-கல்வியமைச்சர் டாக்டர் நாவலர் இரா. நெடுஞ்செழியன் அவர்களின் தலைமையில் பட்டிமன்றம் துவங்கியது.

'சிலப்பதிகாரப் பாத்திரப் படைப்புக்களில் சிறந்து நிற்பவர்கள் மகளிரே, மக்களே, மன்னரே'' என்ற தலைப்பில் சுவையான வாதம் மிகவும்

நாயன வேந்தர்
டி. பி. சுப்பிரமணியபிள்ளை

கூடாக நடைபெற்றது. மகளிர் அணி, மன்னர் அணி, மக்கள் அணி என மூன்று அணிகள் சொற்போர் நிகழ்த்தின.

தாம் பெற்ற செல்வமெனச் சிலம்பினையேகொண்டு சிலம்புச் செல்வத்தை நாடெங்கும் வாரி வழங்கி வரும் மாண்புமிகு மேலவைத் துணைத் தலைவர் சிலம்புச் செல்வர் ம.பொ.சி., ஆன்றவிந்தடங்கிய கொள்கைச் சான்றோராம் குன்றக்குடி அடிகளார், வேறெதற்கும் மயங்காது, தமிழ் இலக்கியத்தில் இதயத்தைப் பறிகொடுத்து எதிலும் உரிமை தேடுகிற, ஆனால் இலக்கியக் கம்பனுக்கு மட்டுமே தன்னை அடிமையென அர்ப்பணித்து விட்ட கம்பனடிப்பொடி சா. கணேசன் ஆகியோர் முறையே 'மகளிரே', 'மக்களே', 'மன்னரே' என்ற அணிகளுக்குத் தலைமை யேற்றுக் கருத்துப் போர் நிகழ்த்தினர்.

''மக்களின்றேல் மன்னரில்லை. மகளிருமில்லை. மாநிலமும் இல்லை. மன்னனது செங்கோல் வளைந்தது. அதனால் சிலம்பு அரசோச்சி நீதி வழங்கிற்று. தவறிழைத்த மன்னனுக்கு நீதி வழங்கும் பொறுப்பு கண்ணகிக்கு வந்தது. கண்ணகி மகளிர் சார்பில் மட்டுமல்ல, மக்கள் சார்பிலேதான் வழக்காடி வெற்றி பெற்றாள். எனவே சிலப்பதிகாரத்தில் உயர்ந்து நிற்போர் கண்ணகியால் பிரதிபலிக்கப்படும் மக்களே,'' என்று அடிகளார் வாதிட்டார்.

''திங்களைப் போற்றுதும், ஞாயிறு போற்றுதும், மாமழை போற்றுதும், பூம்புகார் போற்றுதும் என்று போற்றுகின்ற போதெல்லாம் மன்னனின் வெண் கொற்றக் குடையினையும் மன்னனது ஆளுந் திறத்தினையும், அரவணைக்கும் பாங்கினையுமே இளங்கோவடிகள் குறிப்பிடுகிறார். ஒவ்வொரு காண்டத்தின் இறுதியிலும் அக்காண்டம் எந்த மன்னனின் மண்டலத்தைப் பற்றியதோ அந்த மன்னனின் புகழைப் பாடியே முடிக்கிறார். ஆகவே தொடக்கமும் முடிவும் மன்னர் பற்றியே உள்ளது. மதுரைக் காண்டத்தின் உச்சத்திற்கே மன்னன் நெடுஞ்செழியன் காரணமாக அமைந்துள்ளான். கண்ணகிக்குக்கோயில்எழுப்பிக் கற்பினை வணங்கும் சேரவேந்தன் செங்குட்டுவன், சிலப்பதிகாரக் காப்பியத்திற்குச் சிறப்பினைச் சேர்க்கிறான்'' என்று சான்றுகாட்டிப் பேசினார் சா. கணேசன்.

அடுத்துப் பேசிய மாண்புமிகு மேலவைத்துணைத் தலைவர் சிலம்புச் செல்வர் ம.பொ. சிவஞானம் அவர்கள் ''மக்கள் கூட்டமாக இருப்பதால் கதையில் பாத்திரமாக வரமுடியாது. மக்கள் குவியலால் குழப்பந்தான் வரும். சிலப்பதிகாரத்தில் கூட்டமும் இல்லை. குழப்பமும் இல்லை. அராஜகத்துக்கு அதில் இடமில்லை.''

''சிலப்பதிகாரத் தலைமை ஓர் ஆணுக்குமல்ல; அரசனுக்குமல்ல; பெண்ணரசி கண்ணகிக்குத்தான் அது உரியது. சிலப்பதிகாரத்தில் பெண்ணுக்குத்தான் முதலிடம் தந்துள்ளார் இளங்கோவடிகள். பெண்ணையே வழித்துணையாகக் கண்ணகிக்குத் தந்துள்ளார். சிவபெருமான் கொற்றவை உருவில் வருகிறான். சிலப்பதிகாரத்தில் மன்னனுக்குச் சிறப்பல்ல. மன்னனின் மனைவிக்கே சிறப்பு.

''அரியாசனத்தில் அமர்ந்து கொண்டு கோவலனைக் கொன்றுவா என்று கூறித் தவறிழைத்த போதும் அந்த இடத்தைத் தந்தவளே பாண்டிமாதேவிதான். மாதவியின் யாழிசைதான் வடபுலத்து மன்னர்களின் முடித்தலை நெறித்திடக்காரணம். கண்ணகியின் காற்சிலம்பே நீதி தவறிய பாண்டியனுக்கு நெறி புகட்ட வந்தது. காப்பியத்தின் ஒவ்வொரு திருப்பமும் பெண்களால்தான் நேரிடுகின்றது. சேரன் சிலை எடுத்தது கண்ணகிக்குத்தான். கவுந்தியடிகள் வடக்கிருந்து உயிர் துறந்ததும் மாதவி துறவு பூண்டு உயர்வு பெற்றதும் எல்லாம் மகளிரின் மாண்பினையே காட்டுகிறது. பெண்மையின் சிறப்பையே காட்டுகிறது. எனவே, சிலப்பதிகாரப் பாத்திரப் படைப்புக்களில் சிறந்து நிற்பவர் மகளிரே'' என்று அடித்துப் பேசினார்.

அடிகளாரின் அணியில் டாக்டர் சி. பாலசுப்பிரமணியம், டாக்டர் ஔவை நடராசன், திருமதி. அருண்மொழி வில்வம் ஆகியோர் அங்கம் பெற்று, தங்களின் வாதங்களை ஆணித்தரமாக எடுத்து வைத்தனர்.

கம்பனடிப்பொடி சா.கணேசன் அவர்களின் அணியில் டாக்டர் மெ. சுந்தரம், பேராசிரியர் காந்திமதிநாதன், பேராசிரியை திருமதி. அரசு மணிமேகலை ஆகியோர் பங்கேற்றுத் தங்கள் வாதங்களை அடுக்கடுக்காகக் கூறினர்.

சிலம்புச் செல்வர் அவர்களின் அணியில் பேராசிரியர்

'மக்களே' அணித்தலைவர் குன்றக்குடி அடிகளார்

டாக்டர் சி. பாலசுப்ரமணியம்



டாக்டர் ஔவை நடராசன்

திருமதி அருண்மொழி

டாக்டர் மெ. சுந்தரம்

காந்திமதிநாதன்.

திருமதி அரசு மணிமேகலை

மன்னரே' அணித்தலைவர் சா. கணேசனார்.

நன்னன், சிலம்பொலி செல்லப்பன், திருமதி. இராசேசுவரி நடராசன் ஆகியோர் பங்கேற்றனர். தங்களின் கருத்துரைகளை அள்ளி வீசினர்.

வல்வினை வளைத்த கோலைத் தன் செல்லுயிர் கொண்டு நிமிர்த்திய பாண்டியனின் பெயர் தாங்கிய மாண்புமிகு நாவலர் அவர்கள் மக்களையும் ஒதுக்கி, மன்னரையும் ஒழித்துவிட்டு, 'மகளிரணிக்கே வெற்றி' என அறிவித்துச் 'சிலப்பதிகாரத்தின் உயிரோட்டம் மகளிர் மாண்பே' என்பதை நிலைநிறுத்தினார்கள். மூன்றரை மணி நேரம் நடைபெற்ற இப்பட்டிமன்றச் சொற்போரைப் பந்தலுக்கு உள்ளேயும் வெளியேயும் நின்றிருந்த மக்கள் உள்ளங்கள் ஒன்றி ஊன்றிக் கேட்டு மகிழ்ந்தன.

அரிய கருத்துத் தெளிவைத் தந்த பட்டிமன்றத்தின் அருமையினைப் பாராட்டிவிட்டு மாலையில் தொடங்கும் பாட்டரங்கத்தினை மக்கள் எதிர் நோக்கலாயினர்.

பூம்புகார் நாயனச் செல்வர் கனகசபாபதி குழுவினர் சற்று நேரம் நாயன இசைமுழக்கம் செய்தனர்.

மாலை 5.25

'சிலப்பதிகார விருந்து' என்னும் தலைப்பில் மெய்ப்பாடுகள் எட்டுக் குறித்துக் கவியரங்கம் தொடங்கியது.

கவியரங்கத் தலைவர் மாண்புமிகு முதல்வர் கலைஞர் அவர்களையும், ஏனைய கவிஞர்களையும் வந்திருந்தோர் அனைவரையும் செய்தி-மக்கள் தொடர்புத்துறை துணை இயக்குநர் டாக்டர் ஔவை நடராசன் அவர்கள் வரவேற்றுப் பேசினார். அவரது வரவேற்புப் பேச்சே கவிதை நடையில் அமைந்திருந்தது குறிப்பிடத்தக்கது. அவரது உரையின் ஒரு பகுதி.

'இரண்டாம் பிறப்பெடுத்த இந்தப் பூம்புகாரில் நடைபெறும் இந்தக் கவியரங்கின் தலைமை ஏற்கச் சோழ மண்டலச் சூரியனும் நமது முதல்வர் கலைஞர் அவர்கள் ஆர்வத்துடன் வந்துள்ளார்கள். எட்டுச் சுவையினிலே இனிய பூங் கவி வழங்க, கட்டித் தமிழ் படைத்த காளையர்கள் வந்துள்ளார்கள்''......

தலைமையேற்ற முதல்வர் அவர்கள் தமிழன்னையை, அன்னையென அரவணைத்துக் காத்த அண்ணாவை அழைத்திட்ட பாங்கு நெஞ்சத்தைத் தொட்டு நெக்குருக வைத்தது! அந்த வரிகள் இதோ!

''அருந்தமிழே! அமுதே!
நறுமலர் மணமே! தேனே!
அன்னையாய் வந்தென்னை
ஆட்கொண்டவளே!
அண்ணனாய் வந்தென்னை
ஆளாக்கியவளே! ''

காவிரி பற்றிக் கலைஞரின் படப்பிடிப்பில் கற்பனையும்,



'மகளிரே' அணித்தலைவர் சிலம்புச் செல்வர் ம. பொ. சி

பேராசிரியர் நன்னன்



சிலம்பொலி செல்லப்பன்

திருமதி. இராசேசுவரி நடராசன்

வைரமுத்து

இளந்தேவன்

கண்ணப்பன்

தி. கு. நடராசன்

கருத்தும் சொற்சிலம்பும், சுவையும், அரசியல் நுட்பமும் குத்தும் அடங்கிக்கிடந்தன.

''குடகுமலை உச்சியிலே
 கோலங்காட்டி
அழகுமகள் காவிரியும்
 ஆடவந்தாள்
ஆடவந்த ஆரணங்கை
 அடைவதற்கு
ஓடிவந்த கர்நாடகத்தான்
 'அணை' என்றான்-அவன்
கையணையைத் தாண்டிக்
 கல்லணைக்குள் நுழைந்துதன்
கற்புநெறி காப்பதற்குத்
 தஞ்சைக்குத் தாவி வந்தாள்
பூம்பாவை காவிரியின்
 புகார்கேட்டுச்சோழமன்னன்
பூம்புகாரின் கடல்அலையைக்
 கணவனாய் ஆக்கிக் காத்தான்

முதல்வரின் தலைமைக் கவி உரைக்குப்பின் முதலில் 'உவகை' பற்றிப் பாடவந்தார்—வைரமுத்து எனும் கவிஞர். தலைமையேற்ற முதல்வரை வணங்கிப் பாடும்போதே வைரமுத்துக் கவிஞர் அனைவரையும் வசியப்படுத்தி விட்டார். வரிகள் இதோ கண்டிடுக:

''தன்காலைச் சொரிவதற்கும்
 தலைகுனியாத் தலைவன்நீ!
நினைத்ததை முடிக்கின்ற
 நிர்வாகப் பம்பரமே"
அன்னைத் தமிழகத்தின்
 ஆயுள்ரேகை உன்றன்
உள்ளங் கைகளிலே
 ஓடிக்கொண் டிருக்கிறது.''

இப்படிப் பாடியவர் கோவலன் பற்றி ஒரு கற்பனைப் படம் தந்தார்.

''செட்டிமகனல்லவா!
 சேதி தெரியாதா?
'முதலிரவு எல்லாம்
 கண்ணகியின் பக்கத்தில்
'வட்டி' இரவெல்லாம்
 மாதவியின் மஞ்சத்தில்

என்று சிருங்காரம் பற்றிச் சிங்காரப் பாட்டிசைத்தார்.

'அவலச்'சுவை பற்றி அடுத்து வந்த இளந்தேவன் முதுபுலமை காட்டி முழுக்கவிதை தந்திட்டார்.

''கண்ணால் நகைத்ததால்
 கண்ணகியே என்றழைத்தார்
சிரிக்கின்ற கண்ணுடையாள்;
 ஆமாம்; அதனால்
விரிக்காத வாழ்வுடையாள்
 சிலம்பின் செல்வி
கண்ணகியின் கண்ணீரும்
 காதலனைப் பிரிந்துவிட்ட
பெண்ணரசி மாதவியின்
 பெருகிவரும் கண்ணீரும்
பெற்றோரின் கண்ணீரும்
 பேரரசன் தேவியுடன்
இற்றுவிடக் கண்டவரின்
 எழுச்சிமிகும் கண்ணீரும்''

எனக் கண்ணீர்ப் பெருக்கத்தைக் கணக்கெடுத்தார்.

மூன்றாவதாக,'நகை' பற்றிப் பாடினார் காரைக்குடிக் கவிஞர் மா. கண்ணப்பன். நகை பற்றி அவர் குறிப்பிட்டபோதெல்லாம் அரங்கமே வெடிச்சிரிப்பு உதிர்த்தது.

''...முத்தமிழின் காப்பியமாம்
தத்திவரும் சிலம்பினிலே
 தவழ்ந்துவரும் நகைச்
 சுவையோ
இயல்பாக இருக்கும்;
 இதயத்தைத் தான்மயக்கும்.
நயமாக இருக்கும்;
 நம்மைப்போல் இளங்கோ
வலிந்து நகைச்சுவையை
 வரவழைக்க மாட்டாரே!
சிலையாக இன்றைக்குச்
 சென்னையிலே இருக்கின்ற
கலைவாணர் நகைச்சுவையைக்
 காட்டுகின்றார் இளங்கோ
 வும்''

நான்காவதாக 'வெகுளி' பற்றிக் கவிஞர் தி. கு. நடராசன் பாடினார். அவரது துவக்கமே சிறப்பாக இருந்தது.

''முகம்கனத்துக் கண்சிவந்து
 முடிமீசை துடிதுடித்து
நகைக்குப் பின்வரும்
 நடராசன் கொஞ்சம்
 சினந்துள்ளேன்'
—எனத் தொடங்கினார்.

சிலம்பில் 'வெகுளி' தென்படும் பல இடங்களைச் சுட்டிக் காண்பித்தார். அவற்றில் ஒன்று:

பண்பாடிய வீணைப்
 பாட்டை விட்டெறிந்து
கண்சோர்ந்த கொடிப்பூவை,
 காதலன் கோவலனிடம்

நீர்என்று நினைத்தஎன்
 நெஞ்சினிலே இன்று
நீரன்றோ நெருப்பை
 வளர்த்தீர் என்று
குமுறியவளை-எரிமலையை, அடி

வயிற்றை நன்று
பிசைந்து விட்டு நாடகம்
நடத்துகிறான்
துண்டுநிலா என்று தோள்
சாத்தினேன்; என்பால்
துண்டுநிலாவாகி தோள்
அறுக்க வந்துவிட்டாய்
என்றவன் அவளைவிட்டு
எழுந்து நடந்தயிடம்
வென்று நடந்துவரும்
வெகுளியின் முதலிடம்!

ஐந்தாவதாக 'அச்சம்' பற்றிக் கவிஞர் ஈரோடு தமிழன்பன் பாடினார். முதலில் புதிய பூம்புகாரை உருவாக்கிய கலைஞருக்கு வாழ்த்துக் கூறியது அவரது கவி உள்ளம். அது, இது.

சோழன் புகார்நகரில்
சொல்லக் குறையுண்டு
வாழுமுன் புகாரில் அவ்வழு
வந்து சேரவில்லை''.
—அச்சம் எதுவென விளக்கினார்.

துணிவின் நிராகரிப்பில்
தோன்றுவதே அச்சம், இது
மனத்தின் சிறகுகளை
வளைத்துக் கத்தரிக்கும்.....
துண்டுபடும் இடையென்று
துளிகூட அஞ்சவில்லை
கண்ணகியின் காற்சிலம்பு!
காரணம் இடையில்லை!
கோவலனைக் கொலைப்படுத்திக்
கோபமுற்ற அவனுடைய
தேவியால் உடைப்படுவோம்
என்றெதிர்நாள்'
சிந்தனையால்
அஞ்சிற்று; பாதநடை
அனுசரித்துக் கெஞ்சிற்று;
கொஞ்சிற்று விதியோடு;
கொலைச்சிலம்பாம்
கலைச்சிலம்பே!

ஆறுவதாக 'இழிவு' பற்றிக் கவிஞர் அப்துர் ரகுமான் நறுங் கவிதை-அருங்கவிதை மாலை சூட்டினார். புதிய பூம்புகாரை உருவாக்கிய முதல்வர் கலைஞர் அவர்களுக்கு இந்தக் கவிஞரும் பாராட்டுக் கூறித் தம் கவிதையைத் தொடங்கினார்.

''அங்கோர் கடற்கரையில்
அண்ணாவின் இதயம்
தங்கி யுறங்கவோர்
சரித்திரத்துத் தொட்டி
லிட்டாய்
இங்கோர் கடற்கரையில்
என்றோ உறங்கிவிட்ட
எங்கள் புகாரை
எழுப்பி எமக்களித்தாய்.''

என்று தொடங்கியவர், சிலம்பில் 'இழிவின்' பட்டியலை வகையாக எடுத்துரைத்தார்.

''குலமகள் கொலுவிருக்கும்
கோயில் இதயத்தைக்
கலைமகளின் நடனக்
கலையரங்கம் ஆக்கிவிட்டான்
மடலாடும் கடற்றுறையில்
'மாதவியே என்னோடு
கடலாட வா' என்றான்;
கண்ணீரில் ஆடவிட்டான்!
கானல்வரி என்னும்
கானத்தால் இன்பத்தைக்
கானல்வரி யாக்கினான்;
கண்ணீர் வரிவளர்த்தான்;
ஆடுகின்ற ஆட்டமெல்லாம்
ஆடி முடிந்ததன்பின்
மேடையைக் கோணல்என்ற
வேடிக்கைப் பிறவியவன்!
பொதுவுடைமைப் பூங்காவில்
பூத்தாலும் ஒருவனுக்கே
மதுவூட்டும் மலரான
மாசில்லா மாதவியை
ஆசையெல்லாம் ஒருவனுக்கே
அர்ப்பணித்து, இவனையே

கவியரங்கத் தலைவர் முதல்வர் கலைஞர்

ஈரோடு தமிழன்பன்

அப்துர் ரகுமான்

குருவிக்கரம்பை சண்முகம்

பொன்னி வளவன்.

குடந்தை சுந்தரேசனார்

பாசக் கொழுகொம்பாய்
பற்றிப் படர்ந்துநின்ற
வஞ்சிக் கொடியவளை
வஞ்சக்கொடியாள் என்று
அஞ்சாது சொன்னானே
அதுதான் இளிவரல்....

ஏழாவதாக 'வியப்பு' என்னும் பொருள் பற்றி அவையோர் வியந்து நிற்கும் வகையில் கவிஞர் குருவிக்கரம்பை சண்முகம் கவிதை மழை பொழிந்தார். அவர் கவிதையில் சில வரிகள்:

பிரும்மாவின் இரவுகளில்
பேசா திருந்துவிட்ட
சோகப்பூ மரமே!
சோணாட்டுக் கண்ணகியே!
ஒற்றை மார்பகத்தை
உதிர்த்தே மதுரையில்
இலையுதிர் காலத்தை
ஏந்தி நடந்தாயே!
மலையகம் சென்றாயே!
குன்றக் குரவர்க்கும்
வியப்பை அளித்தாயே!
வேதனை மிக்கஉன்
சோகவர லாறறிந்து
சோழர்தம் பூம்புகார்க்
கருநீலக் கடல்வாழும்
செம்மீன்கள் கூட
அந்நாள் உனக்காக
அழுதழுது பன்னாட்கள்
கண்ணீர் விட்டிருக்கும்!
அதனால் பூம்புகார்க்
கடல்பெருகிக் கொந்தளித்துக்
கரைதாண்டி வந்திருக்கும்!

இளங்கோவே! இணையிலா
இராசத் துறவியே!
சிலம்பையே காவியத்
தாய்க்குக் கிரீடமாய்ச்
சூட்டி மகிழ்ந்த
சொற்கோவே! இனியந்தக்
கண்ணகியே வந்தாலும்
உடைக்க முடியாத
சொற்சிலம்பைப் படைத்தஉன்
பேரறிவை வியக்கின்றேன்.

இறுதியாக, 'வீரம்' குறித்துப் புலவர் பொன்னிவளவன் வீரம் ததும்பப் பாடினார். கோவலனின் வீரத்தை எடுத்துரைத்தார். மறக்கற்பு கொண்ட கண்ணகியின் வீரத்தை எடுத்துக் கூறினார். காவா மன்னர்களான கனகவிசயரை அடக்கிய செங்குட்டுவ மன்னனின் செயல்வீரத்தை விளக்கினார். அவரது கவிதையில் சில வரிகள்:

கண்ணகியாம் பத்தினிஇக்
காவியத்தின் நாயகியும்
மன்னன் அநீதியினால்
மணாளன் கொலையுண்டான்
எனும்செய்தி கேட்டவுடன்
இதுஎனது விதிஎன்று
முணுமுணுத்து வீட்டினிலே
மூலையிலே குந்தாமல்
ஒற்றைச் சிலம்புடனே
ஒற்றைத் தனியாளாய்
கொற்றவனைப் போய்க்கண்டு
குலைநடுங்கச் செய்திட்டாள்;
ஆண்பிள்ளை மேல்போட்ட
அப்பழியை நீக்குவது
வீண்தொல்லை எனஎண்ணி
வீற்றுக் கிடந்தாளா?

....

வீரமென்றால் கண்ணகியின்
வீரமன்றோ தமிழ்வீரம்?
நேரம்வந்தால் பெண்களுக்கு
வீரம்வர வேண்டாமா!

—இவ்வாறு கொதித்துக் கேட்டார். பெண்களுக்கும் வீரம் வேண்டும் என்று வலியுறுத்தினார்.

இப்படி எட்டுச் சுவை பற்றி எல்லோரும் பாடியபின்,

''கன்னல்நிகர் தமிழோசை
கேட்டு
மகரந்தம் உண்டு மகிழ்
வண்டாகக் கிடக்கின்றேன்
மனம் பெற்ற 'ஓர் பொழுது
நிம்மதியால்' களிக்கின்
றேன்''

என்று உள்ளங் கொண்ட உவகையினை ஊருக்குத் தெரிவித்துக் கவியரங்கை முடித்து வைத்தார் கவியரங்கத் தலைவர் முதல்வர்.

கவியரங்கம் முடிந்த பின்னர் மாண்புமிகு நல்வாழ்வுத் துறை அமைச்சர் பேராசிரியர் அன்பழகன் அவர்கள் விழா நிறைவு உரையினை ஆற்றினார்கள்.

''விழாவின் நிறைவு உரையினை ஆற்றும் பணி எனக்களிக்கப்பட்டது குறித்து மகிழ்கிறேன். யாழின் இனிமை இசையென இன்னிசை உணர்வோடு கவிதைகளைப் பொழிய செய்து, அந்தச் சுவையில் ஆழ்ந்திருக்கிற நேரத்தில் நிறைவு உரை என்று சொன்னால்கூட அது ஓரளவுக்குக் குறையுரையாகத்தான் இருக்கும்.

''இன்று காலை முதல் முத்தமிழும் இங்கே முழங்கிடக் காண்கிறோம். நாடகத் தமிழினை நிறைவோடு இங்கே காண இருக்கிறீர்கள். இயலும் இசையும் இதுவரை முழங்கிற்று. நாகரிகத்தின் சின்னமாக விளங்குகிற இசைதான் நாதசுர இசை. உலகிலேயே தமிழகத்திற்கு மட்டும் உரிய இசை என்ற சிறப்புக்குரியது. சேர, சோழ, பாண்டியர் காலத்தில் முழங்கிய இசை, 'இன்று' இங்கே இசைக்கப்பட்டது. அந்த இசையோடு தொடங்கிய இந்த விழா, சிலப்பதிகார இசையுடன் தொடர்ந்தது. பட்டிமன்றத்தில் சிலப்பதிகாரம் பல்வேறு கோணங்களில் ஆராயப்பட்டது.

சிறப்புரையாற்றிய

ஔவை துரைசாமிப்பிள்ளை

கண்ணகியின் மாண்பை, மாதவியின் சிறப்பை, பாண்டியன் நெடுஞ்செழியனின் பேருள்ளத்தை, சேரனின் வீரத்தினைப் பற்றியெல்லாம் காதாரக் கேட்டோம். என்றோ எழுதப்பட்ட சிலப்பதிகாரம் இன்றைக்கும் நமக்குச் சுவை தருகிற இலக்கியமாக மட்டுமல்ல, உணர்வூட்டுகிற ஓர் எழுச்சிக் காவியமாகப் பயன்படுவதைப் பார்த்தால், தமிழகம் வீழ்ச்சியடையத் தொடங்குகிற ஒரு கால கட்டத்தில் எழுச்சியூட்டுவதற்காகவே இந்தக் காவியத்தை இளங்கோவடிகள் எழுதியிருக்கிறார் என்று தெரிகிறது.

''அந்த எழுச்சி இன்று தேவை. அதற்குச் சிலப்பதிகாரம் இன்றும் உதவுகிறது. இக் கலைக்கூடமும் விழாவும் நமக்கு எழுச்சியூட்டும் பாங்கிலே அமைந்துள்ளன. இதனை என்றென்றும் போற்றுவோம், பேணுவோம்'' என்று நீண்டதோர் உரை நிகழ்த்தினார்.

பேராசிரியரின் அரிய உரைக்குப் பின்னர் மாண்புமிகு உள்ளாட்சித்துறை அமைச்சர் மன்னைநாராயணசாமி அவர்கள் நன்றியுரை நவின்றார்கள்.

அதன் பின்னர் விழாக்குழுவின் சார்பில் மாண்புமிகு முதல்வர் அவர்களுக்குச் சித்திர வேலைப்பாடு மிக்க தஞ்சாவூர்த்தட்டு வழங்கப்பெற்றது.

மாண்புமிகு கல்வியமைச்சர் நாவலர், மாண்புமிகு நல்வாழ்வுத்துறை அமைச்சர் பேராசிரியர், மாண்புமிகு உள்ளாட்சித்துறை அமைச்சர் மன்னை நாராயணசாமி, மாண்புமிகு தொழில் அமைச்சர் சாதிக்பாட்சா ஆகியோருக்கும் செய்தி-மக்கள் தொடர்புத்துறை இயக்குநர் திரு. கே. ஏ. சுந்தரம், துணை இயக்குநர் கவிஞர் கருணானந்தம், சிலப்பதிகார நாட்டிய நிகழ்ச்சி நடத்திய செல்வி. பத்மாசுப்பிரமணியம், கணபதி ஸ்தபதி, பூம்புகார் சிறப்பு அலுவலர் வெங்கடாசலபதி ஆகியோருக்கும் தஞ்சாவூர்த் தட்டுகள் வழங்கப்பெற்றன.

அதன்பின்னர் செல்வி பத்மா சுப்பிரமணியம் குழுவினரின் நாட்டிய நாடகம் நடைபெற்றது. சிலப்பதிகாரத்திலிருந்து கானல்வரிக் காட்சி சிறப்புற நடிக்கப்பட்டது. குன்றக் குரவை நாட்டியம் மிகவும் எடுப்பாக அமைந்தது. சிலப்பதிகாரம் ஓர் நாடகக் காப்பியம் என்பதை இந்த நாட்டிய நடனம் எடுத்துக் காட்டியது.

சிலப்பதிகார நாட்டிய விருந்தளித்த செல்வி. பத்மா சுப்பிரமணியம்.

விழா நள்ளிரவில் முடிவுற்றது.

கலைக்கூடத்தையும் இலஞ்சி மன்றம், நெடுங்கல் மன்றம், பாவை மன்றம் ஆகியவற்றையும் மக்கள் பகலும் இரவுமாகத் தொடர்ந்து பார்த்த வண்ணமிருந்தனர். 10 காசுக் கட்டணம் கொடுத்துப் பார்ப்பதற்கு மக்கள் விடியற்காலை நான்கு மணிவரை வரிசையில் காத்து நின்றனர்.

ஒரே நாளில் 10 காசு வீதத்தில் ரூ. 5,000 வசூலாகியிருக்கிறதென்றால், மக்களின் ஆர்வம் எவ்வளவு என்பதைக் கணக்கெடுத்துக் கொள்ளலாம்.

...லா முத்த... கொண்டாடப்பெறும் இந்தப் புதிய பூம்புகாரில் மனமகிழ்ச்சிச் செய்தி இன்னொன்றும் உண்டு. இங்கு வாழும் மீனவர்களுக்காகக் கலைஞர் கருணாநிதி மீனவர் குடியிருப்பு திறக்கப் பெற்றிருக்கும் உண்மை நிலைதான் அது. 435 இல்லங்கள் இங்கே உள்ளன. இவை நவீனமுறையில் அழகாகவும் உறுதியாகவும் கட்டப் பெற்றுள்ளன. இவற்றைப் பார்த்தால் குக்கிராமமான பூம்புகாரில் உள்ள வீடுகளாகவே தோன்றவில்லை. நாகரிகம் மிகுந்த சென்னையில் செல்வந்தர் வாழும் பகுதிகளில் காணப்பெறும் புதுமைமிகு இல்லங்களைப் போன்றே இவை பொலிவுடன் காட்சி தருகின்றன. இவற்றில் வசிக்கும் மீனவர்களுக்கு மிகக் குறைந்த வாடகையில் (அநேகமாக இலவசம் என்று சொல்லத்தக்க அளவில்) இவ்வில்லங்கள் கொடுக்கப்பட்டுள்ளன. முதல்வர் கலைஞர் அவர்களின் சமுதாய நலத் திட்டங்களில் இந்த மீனவர் குடியிருப்பு அமைப்பும் குறிப்பிடத்தக்க இடத்தைப் பெற்றுள்ளது.



தமிழர் நெஞ்சங்களில் முத்திரை பதித்திட்டது இந்தச் சித்திரை முழுநிலா முத்தமிழ் விழா. முத்தமிழும் வாழும்! மூத்த தமிழ்க் குடியும் வளரும். அதற்கு இந்தத் திருவிழா ஏற்றதோர் எடுத்துக்காட்டு! எழுச்சியூட்டும்புரட்சிப்பாட்டு!



கலைஞர் கருணாநிதி மீனவர் குடியிருப்புப் பகுதியில் ஒரு வீட்டின் தோற்றம்

படமும் செய்தியும்!

ரஞ்சாலங்குறிச்சியில் (10—5—75 அன்று) காதுகேட்காத சிறுவர்கள் 55 பேருக்குக் காது கேட்கும் கருவிகளையும்....

உடல் ஊனமுற்றோர் 200 பேருக்குச் சக்கர வண்டிகளையும் முதல்வர் கலைஞர் வழங்கினார்.